ந்திசைச்செப்பலென் மனார்புலவர்.,, "இயற்சீர்வெண்டளையான்வரும்யா
ப்பைத், தூங்கிசைச்செப்பலென்மனார்புலவர்.,, "வெண்சீரொன்றலுமிய
ற்சீர்விகற்பமு, மொன்றியபாட்டே யொழுகிசைச்செப்பல்." என்று
ராகலின். அவற்றிற்குச்செய்யுள் வருமாறு-வெ- "யாசானுநாடாமலூரா
மாலென்னொருவன், சாந்துணையுங்கல்லாதவாறு,, இதுவெண்சீர்வெண்ட

ளையான்வந்தமையாலேந்திசைச்செப்பலோசை-வெ. 'பாலொடு-வாலெயி றூறியநீர், இது இயற்சீர்வெண்டளையான் வந்தமையால், தூங்கிசைச் செப்பலோசை-வெ "கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி,எல்லாவுயிருந்தொழும்,, இது இரண்டுதளையும் விரவிவந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசை. சீர்சாலகவலென்று சிறப்பித்தவதனால், அகவலோசை மூன்றுவகைப்படும் ஏந்திசையகவலும், தூங்கிசையகவலும், ஒழுகிசையகவலுமென. என்னை "நேர்நேரியற்றளையான்வருமகவலு, நிரைநிரையிற்றளையான்வருமகவலு, மாயிருதளையுமொத்தாகியவகவலு, மேந்தறூங்கலொழுகலென்றிவை, யாயந்தகிரணிறையாகுமென்ப,, என்றாராகலின்.அவற்றிற்குச்செய்யுள்வருமாறு-அ "போதுசாந்தம்- துன்னுவாரே,, இது நேரொன்றாசிரியத்தளையான் வந்தமையால் ஏந்திசையகவலோசை, ஆ "அணிநிழல்- பரிசறுப்பவரே." இதுநிரையொன்றாசிரியத்தளை யான்வந்தமையால் தூங்கிசையகவலோசை. ஆ "குன்றக்குறவன்-சுணங்கே.' இது இரண்டுதளையும்விரவி வந்தமையால் ஒழுகிசையகவலோசை. சென்றேங்குதுள்ளலென்று சிறப்பித்தவதனால் துள்ளலோசைமூன்றுவகைப்படும். ஏந்திசைத்துள்ளலும். அகவற்றுள்ளலும், பிரிந்திசைத்துள்ளலுமென. என்னை "ஏந்திசைத்துள்ளல் கலித்தளையியையின், வெண்டளை தன்றளை யென்றிரண்டியையி, னொன்றியவகவற் றுள்ளலென்றோதுப,, தன்றளைபிறதளை யென்றிவையனைத்தும், பொருந்திவரினேபிரிந்திசைத்துள்ளல்,, என்றாராகலின. அவற்றிற்குச்செய்யுள்வருமாறு-க. "முருகவிழ்தாமரைமலர்மேன் முடியிமையோர புடைவரவே, வருசினநாதருமறைநூல்வழிபிழையாமனமுடையார், இருவினைபோய்விழ முனியாதெதிரியகாதியையறியா, திருமலரா யருவினராய் நிலவுவர்சோதியினிடையே,, இதுகலித்தளையான் வந்தமையால் ஏந்திசைத்துள்ளலோசை-க-"செல்வப்போர்-ஒளிதத்தே,, இது வெண்சீர்வெண்டளையும், கலித்தளையும், விரவி வந்தமையால் அகவற்றுள்ளலோசை-க "குடநிலைத்தண்புறவிற்கோவலரொடுத்தார்ப்பத், தடநிலைப்பெருந் தொழுவிற்றகை யேறுமரம்பாய்ந்து, வீங்குமணிக்கயிறொரீஇத்தாங்குவனத்தேறப்போய்க், கலையினொடுமுயலிரியக்கடிமுல்லைமுறுவலிப்ப, எனவாங், கானொடுபுல்லிப்பெரும்புதன்றுணையும், கானுடைத்தவர்நேர்சென்றவாறே,, இதுபலதளையும் விரவிவந்தமையால பிரிந்திசைத்துள்ளலோசை. நண்பாவமைந்த நலமிகு தூங்கலென்று சிறப்பித்தவதனால், தூங்கலோசை மூன்றுவகைப்படும், ஏந்திசைத்தூங்கலும், அகவற்றூங்கலும், பிரிந்திசைத்தூங்கலுமென. என்னை "ஒன்றியவஞ்சித் தளையேவரினு, மொன்றாவஞ்சித்தளையேவரினு, மென்றிவையிரண்டும் பிறவுமயங்கினு, மேந்தலகவல் பிரிந்திசைத்தூங்

லன், றுயர்ந்தசீரனிறையாகுமென்ப என்றுராகலின். அவற்றிற்குச்செ யுள்வருமாறு-வ "வினைத்திண்பகை விழச்செற்றவன், வனப்பங்கயமல த்தாளிணை, நினைத்தன்பொடு தொழுதேத்தினர், நானூர், மயலார்நா ற்கதிமருவார், பெயராமேற் கதிபெருகுவர்விரைந்தே." இது ஒன்றிய வ ஞ்சித்தளையான் வந்தமையால் ஏந்திசைத்தூங்கலோசை.வ "வானோர் சூழ்வண்டாமரைத், தேனார்மலர்மேல்வந்தரு, ளானவருள் கூரறிவனை ந், கானார்மலர்கொண் டேத்திவணங்குநர் பலர்புகழ்பூசதி பெறுகுவர் விரைந்தே." இது ஒன்றுதலொன்றிந்தளையான் வந்தமையால் அகவற்றூங் கலோசை "மந்தாநிலம்-மகிழ்ந்தே,, இதுபலதளையும் விரவிவந்தமையா ற் பிரிந்திசைத்தூங்கலோசை. (க)

வளம்படவென்பதுவெள்ளைக்ககவற்குதாரணஞ்செங்
களம்படக்கொன்றுரவிக்கரிதாயகண்ணார்நொடிபோல்
துளங்கிடைமாதேசுறமறிதொன்னலத்தின்புலம்பென்
றுளங்கொடுகாவலரோதினர்வஞ்சிக்குதாரணமே.

இ-கை. அவ்வடிகளானும், ஓசைகளானும்வந்த இலக்கியங்கட்குமு னினைப்புணர்த்து-ற்று. வளம்படவென்பது. வெள்ளைக்கு-எ-து "வள படவேண்டாதார் யார்யாருமில்லை, அளந்தனபோக மவரவராற்றான், விளங்காய்திரட்டி னாரில்லைக் களங்கனியைக், காரெனச்செய்தாருமில்,, இஃதளவடியானும், செப்பலோசையானும், வந்தஇன்னிசைவெண்பா. அ வற்குதாரணஞ் செங்களம்படக்கொன்று -எ-து- "செங்களம்படக்கொ ன்றவுணர்தேயத்த, செங்கோலம் பின்செங்கோட்டியானை, கழறொடு சேஎய்க்குன்றம், குருதிப்பூவின் குலைகாந்தட்டே,, இஃதளவடியா னும், அகவலோசையானும்வந்த நேரிசையாசிரியப்பா. கலிக்கரிதாய -து "அரிதாயவறனெய்தி யருளியோர்க்களித்தலும், பெரிதாயபகை வென்று பேணாரைத்தெறுதலும், புரிவமர்காதலிற் புணர்ச்சியுந்தருமெ னப், பிரிவெண்ணிப்பொருள்வயிற் சென்றநங்காதலர், வருவர்கொல்வயங் கிழாய் வலிப்பல்யான்கேளுநீ,, இதுதரவு, அடிதாங்குமளவின்றி யழல னவெம்மையாற், கடியவேகனங்குழாய் காடென்றாரக்காட்டுள், துடி யடிக்கயந்தலைக்கலக்கிபசின்னீரைப், பிடியூட்டிப் பின்னுண்ணுங் களி றெனவு முரைத்தனரே. இன்பத்தினிகந்தொரீஇ யிலைதீய்ந்தவுலவையா ற், துன்புறூஉந் தகையவேகா டென்றாரக்காட்டுள், அன்புகொண்மடப் பெடை யசைஇயவருத்தத்தை, மென்சிறகராலாற்றும் புறவெனவுமு ரைத்தனரோ, கன்மிசைவேய்வாடக்கனைகதிர் தெறுதலால், துன்னரூஉந் தகையவேகாடென் றாரக்காட்டுள், இன்னிழலின்மையால் வருந்தியம

டப்பிணைக்குத், தன்னிழலைக்கொடுத்தளிக்குங் கலையெனவுமுணாத்தனரே. இவைமூன்றுந்தாழிசை, எனவாங்கு. தனிச்சொல். இனைநலமுடைய கானஞ்சென்றோர், புனைநலம்வாட்டுன ரல்லர்மனைவயிற், பல்லியம்பாங்கொத்திசைத்தன, நல்லெழிலுண்கணு மாடுமாலிடனே.” இதுசுரிதகம். இஃதளவடியானும், துள்ளலோசையானும், வந்தமையால் நேரிசையொத்தாழிசைக் கலிப்பா. கண்ணார்கொடிபோற் றுளங்கிடைமாதே நீயூஉ. மகடூஉமுன்னிலை. சுறமறிதொன்னலத்தின் புலம்பென் றுளங்கொளொவலரோநினர் வஞ்சிக்குதாரணமே-எ-து“ சுறமறிவனதுறையெல்லாம், இறவீன்பனிலெல்லாம், மீன்றிரிவனகிடங்கெல்லாம், தேனருழ்வனபொழிலெல்லாம், எனவாங்கு, தண்பணைதழீஇயவிருக்கை, மண்கெழுநெடுமதின்மன்னனூரே.“ இஃதிருசீரடியானும், தூங்கலோசையானும் வந்தமையால், குறளடிவஞ்சிப்பா. ‘‘தொன்னலத்தின்புலம்பலைப்பத் தொடித்தோண்மேல், பன்னலத்தகலந்தொலையப்பரிவெய்தி, என்னலத்தகைழிதுவென்னவெழில்காட்டிச், சொன்னலத்தைப் பொருள்கருத்தினிற் சிறந்தாங், கெனப்பெரிதும், கலங்கஞொய்திவிடுப்பவும், சிலம்பிடைச்செலவுஞ் சேணிவந்தற்றே“ இதுமுச்சீரடியானும், தூங்கலோசையானும். வந்தமையாற் சிந்தடிவஞ்சிப்பா. உதாரணமே யென்பது இறுதிவிளக்காகக்கொள்க.

ஈரடிவெண்பாக்குறள் குறட்பாவிரண்டாயிடைக்கட்
சீரியவொன்றனிச்சொல்லடி மூய்ச்செப்பலோசைகுன்று
தோரிரண்டாயுமொருவிகற்பாயும வருவதுணைடேல்
நேரிசையாகுநெரிசுரி பூங்குழனேரிழையே.

இ-கை. குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, நேரிசைச்சிந்தியல்வெண்பா, இன்னிசைச்சிந்தியல்வெண்பா-எ-ம. நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, அடிமறிமண்டிலவாசிரியப்பா, எ-ம். நேரிசையொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா, வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா, கலிவெண்பா, வெண்கலிப்பா, தரவுக்கொச்சகக் கலிப்பா, தரவிணைகொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, எ- ம். குறளடிவஞ்சிப்பா, சிந்தடிவஞ்சிப்பா, எ- ம். புறநிலைவாழ்த்துமருட்பா. கைக்கிளைமருட்பா, வாயுறைவாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉமருட்பா, எ- ம். கிடந்தபாவிகற்பங்களுட் செப்பலோசையுடைத்தாய், ஈற்றடிமுச்சீராய், ஏனையடிநாற்சீராய், வெண்சீரும், இயற்சீருமவந்து, வெண்டளைதட்டு, வேற்றுத்தளைவிரவா[illegible]

ன். மலரென்னும் வாய்பாட்டானிறும் வெண்பாவினை அடியானும் தொடையானும், ஓசையானும், பெயர்வேறுபாடுணர்த்து வாளெடுத்துக்கொண்டார். அவற்றுள், இக்காரிகை. குறள்வெண்பாவும், நேரிசைவெண்பாவு மாமாறுணர்த்து- ற்று. ஈரடிவெண்பாக்குறள்- எ- து- இரண்டடியான்வரும் வெண்பா குறள் வெண்பாவெனப்படும்- 'எ-று, என்னை, தொடையொன்றடியிரண்டாகிவருமேற், குறளின்பெயர்க் கொடைகொள்ளப்படுமே "என்றார்காக்கை பாடினியார். "உருவுகண்டெள்ளாமைவேண்டுமுருள் பெருந்தேர்க், கச்சாணியன்னாருடைத்து,, "உடையார்முன்னில்லார் போலேக்கற்றுங்கற்றார், கடையரோ கல்லாதவர்" இவையிரண்டடியான் இரண்டுவிகற்பத்தானும், ஒருவிகற்பத்தானும் வந்தகுறளவெண்பா- குறட்பாவிரண்டா யிடைக்கட்சீரியவான் றனிச்சொல்லடிமூய்ச் செப்பலோசை குன்றாதோரிரண்டாயு மொருவிகற்பாயும் வருவதுண்டேனேரிசையாகு ம- எ-து- இரண்டுகுறள்வெண்பாவாய் நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச சொல்லாலடிநிரம்பிச், செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும், ஒருவிகற்ப மாய்க், கடையிரண்டடியும மொன்றுவிகற்பமாய் வரினும், நான்கடியும், ஒருவிகற்பமாய் வரினும், இருகுறணேரிசை வெண்பாவெனப்படும்- எ - று. வ- று. "தடமண்டு தாமரையின்றாதாடலவன், இடமண்டிச்செல்வதனைக்கண்டு, பெடைதெருண்டு, பூழிக்கதவடைக்கும் புத்தூரோபொய்கழ்ந், தூழிடாயினானார் "அரியவனாகீண்டு காட்டுவார்யாரோ, பெரியவரை வயிரங்கொண்டு தெரியில், கரிய வனாகிலேயாா காய்ந்தாலென் செய்வார், பெரியவரைவயிரங்கொண்டு. "இவை இரண்டுகுறள் வெண்பாவாய் நடுவுமுதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லா னடிநிரம்பிச் செப்பலோசை வழுவாது இரண்டுவிகற்பத்தானும், ஒருவிகற்பத்தானும் வந்த இருகுறணேரிசை வெண்பா, சீரியவான்றனிச் சொல்லடிமூயென்று சிறப்பித்தவதனால், முதற்குறட் பாவினோடு தனிச்சொல்லொடு வேறுபட்டு விட்டிசைசி ன் ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப் பட்டபற்றாசி... விளக்கினாற்போல, முதற்குறட்பாவினிறுதிக் கணொன்றும், இரண்டும் அசைகூட்டி யுச்சரிக்கப்பட்டு இரண்டுவிகற்பத்தானும், ஒருவிகற்பத்தானும் வருவனவுமுள, அவைஒருசாராசிரிடை நேரிசைவெண்பா வெனக்கொள்க. வ- று. "தாமரையின்றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து, காமரையினூற்றமேதா வூறும். தாமரைபோற், கண்ணனுன்முகத்தான் கரதலத்தான் சேவடியென், கண்ணார்வஞ்சிசெய்யுங் கருத்து,, '-கருடமுமுன்படாப்போகமுந்து ங்காத். தருமமும தககாக்கெசெய்யா, ஒருநிலையேமுட்டின்றிமூன்று முடியுமே லஃதென்ப, பட்டினபபெற்றபலம்" இவை

மூதற் குறட்பா விறுதிக்கண் ஈரசையானும், ஓரசையானும், ஆசிட்டு, இரண்டு விகற்பத்தான்வந்த, ஆசிடைநேரிசைவெண்பா. "ஆர்த்தவறி ஞரையண்டிலை ஞராயினும், காத்தோம்பித்தம்மை யடக்குப, மூத்தொறூஉம், தீத்தொழிலேகன்றித் திரிதந்தெரிவைபோற், போத்தரூர்புல்லறிவினர்,' "வஞ்சியேனென்றவன்ற னூருரைத்தான்யானுமவன், வஞ்சியானென்பதனல்வாய் நேர்ந்தேன்- வஞ்சியான், வஞ்சியேன் வஞ்சியேனென்றுரைத்தும் வஞ்சித்தான். வஞ்சியாய வஞ்சியார்கோ" இவைமுதற் குறட்பாவின் இறுதிக்கண் ஓரசையானும், ஈரசையானும், ஆசிட்டொருவிகற்பத்தான் வந்த ஆசிடைநேரிசைவெண்பா. நெரிசுரிபூங் குழனேரிழையே- எ- து- மகடூஉமுன்னிலை. வெண்பாவகவல் கலிப்பாவளவடிவஞ்சியென்னுங் காரிகையுள், வெண்பாசெப்பலோசையான் வருமென்றும், ஈண்டுஞ்செப்பலோசை குன்றுமென்றுங் கூறியது - கூறியதுகூறிற்றுகாது. என்னை" கூறியதுகூறினுங் குற்றமிலவை, வேறொருபொருளை விளக்குமாயின்" என்றாராகலின் ஒருசாரா ஆசிரியர்களைத் தத்தம் உதாரணவாய்பாட்டால் ஓசையூட்டும்பொழுது தத்தமோசையிற் சிறிதுவழுவி வருவனவுளவாயினும். வெண்பாவிற்குச் சிறிதும் செப்பலோசைவழுவலாகாதென்று யாப்புறுத்தற் பொருட்டாகவும், செப்பலோசையிற் சிறிதுவழுவியந்தநேரிசை இன்னிசைவெண்பாக்களை ஒருபுடை யொப்புமைநோக்கி வெண்டுறைப்பாற் படுத்துவழங்கினும். இழுக்காதென்பதறிவித்தற் காகவுமெனக்கொள்க-என்னை" தத்தம்பாவினத்தொப்பினுங்குறையினு. மொன்றொன்றெவ்வா றுறுமை வகையாற். பாத்தம்வண்ணமேலாவாயிற், பண்போல் விகற்பம் பாவினந்தாகும்,, "குறட்பாவிரண்டடி நால்வகைத்தொடையான். மூதற்பாதனிச சொலினடிமூஉயிரண்டு, விகற்பினப்பவனநேரிசைவெண்பா "என்றாரவிநயனர். "இரண்டாமடியினை திரொருஉவெய்தி, மூரண்டெதுகைதாவினு மாகாதிரண்டுதுணியாவிடைதனிபோழ்ந்து, சீர்சடிநான்கின நேரிசைவெண்பா. "[illegible]றுர்காக்கைபாடினியார்.

> உருவுகண்டெள்ளாவுடையார் குறங்மடவாய்நடமண
> டரிபவலாக்கண்டிருகுறினேரி சைதாமராயின்
> கருமரூமார்ந்தவும் வஞ்சியுங்காமர்தனிச்சொன்றுன்று
> நெரிநுண்கருங்குழனேரிழையாயிட்ட நேரிசையே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே குறள்வெண்பாவிற்கும், நேரிசைவெண்பாவிற்கும், ஆசிடைநேரிசைவெண்பாவிற்குங்காட்டியவிலக்கியங்களையுதாரணித்துக்கொள்க. (௯)

ஒன்றும்பலவும்விகற்பொடுநான்கடியாய்த்தனிச்சொல்
இன்றிநடப்பினஃதின்னிசைதுன்னுமடிபலவாய்ச்
சென்றுநிகழ்வபஃறொடையாஞ்சிறைவண்டினங்கள்
துன்றுங்கருமென்குழற்றுடியேரிடைத்தூமொழியே.

இ- கை. இன்னிசைவெண்பாவும், பஃறொடைவெண்பாவுமாமாறுணர்த்து - ற்று. ஒன்றும்பலவும் விகற்பொடுநான் கடியாய்த்தனிச்சொலின்றிநடப்பினஃதின் னிசைதுன்னும்- எ-து- ஒருவிகற்பத்தானும், பலவிகற்பத்தானும், வந்துநான்கடியாய்த் தனிச்சொலில்லாமல் நடப்பினஃதின்னிசைவெண்பா வெனப்படும்- எ- று. வ- று. "வைகலும்வைகல்வரக் கண்டுமஃதுணரார், வைகலும்வைகலை வைகுமென்றின் புறுவர், 'வைகலும்வைகற்றம்வாழ் நாண்மேல்வைகுதல், வைகலைவைத்துணராதார்,, "துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக் காற்றொட்டுப், பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க, அகடுறயார்மாட்டுநில்லாதுசெல்வம், சகடக்கால் போலவரும்" இவைநான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தான், வந்தஇன்னிசைவெண்பா, "கடற்குட்டம்போழ்வர் கலவர்படைக்குட்டம், பாய்மாவுடையா னுடைகிற் குந்தோமில், தவக்குட்டந்தன்னுடையா னீந்துமவைக்குட்டம், கற்றான்கடந்துவிடும்," "இன்றுகொலன்றுகொலென்றுகொலென்னாது, பின்றையேநின்றது கூற்றமென்றெண்ணி, ஒருவுமின்றீயவை யொல்லும் வகையான், மருவுமின மாண்டாரறம்" இவை நான் கடியாய்த் தனிச்சொலின்றிப் பலவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா- ஒன்றல்லனவெல்லாம் பல வென்பதுதமிழ் நடையாகலின். என்னை "ஒன்றல்லவைபல தமிழ்நடை வடநூல், இரண்டல்லவைபலவென்றிசினோர்" என்றாராகன், துன்றுமென்றுமிகுத்துச் சொல்லியவதனால், இரண்டாமடியினிறுதி தனிச்சொற் பெற்று மூன்றுவிகற்பத்தான் வருவனவும், மூன்றாமடியினிறுதி தனிச் சொற்பெற்று இரண்டுவிகற்பத்தான்வருவனவும், தனிச்சொல்லின்றிப் பலவிகற்பாகி, அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுவருவனவும், பிற வாற்றானு நேரிசைவெண்பாவிற் சிறிதுவேறுபட்டு நான்கடியான்வருவனவும், இன்னிசைவெண்பாவெனப்படும்- வ-று- "அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்குந், திங்களுஞ்சான்றோருமொப்பாமற், றிங்கள், மறுவாற்றுஞ்சான்றோ ரஃதாற்றார்தெருமந்து, தேய்வரொருமாசுறின்" "மலிதேராங்கச்சியுமாகடலுந்தமமுள், ஒலியும்பெருமையுமொக்கு, மலிதேரான், கச்சிபடுவ கடல்படாகச்சி, கடல்படுவ வெல்லாம்படும்" இவையிரண்டாமடியினிறுதிதனிச்சொற்பெற்று மூன்றுவிகற்பத்தான்வந்த இன்னிசை வெண்பா- "யாம்படவேண்டா- செயநீருமில்" இதுமூன்றாமடியினி

றுதனிச்சொற்பெற்று இரண்டுவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா. "இன்னாமைவேண்டி னிரவொழிக, இந்நிலத்து, மன்னுதல்வேண்டி னிசைநடுக, தன்னோடு, செல்வதுவேண்டி னறஞ்செய்க, வெல்வது, வேண்டின் வெகுளிவிடல்" இவையடிதோறுந் தனிச்சொற்பெற்று மூன்றுவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா- "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை, மழையும், தவமிலாரில்வழியில்லை, தவமும், அரசிலாரில்வழியில்லை அரசனும், இல்வாழ்வாரில்வழியில்" இஃதடிதோறுமொரூஉத்தொடைபெற்று நேரிசைவெண்பாவிற் சிறிதுவேறுபட்டு வந்தமையான் இன்னிசைவெண்பா. பிறவும்வந்துழிக்கண்டுகொள்க. என்னை "தனிச்சொற்றழுவலவாகிவிகற்பம், பலபலதோன்றினு மொன்றேவரினு, மிதற்பெயரின்னிசையென்றிசினோரே," "ஒருவிகற்பாகித்தனிச்சொலின்றியு, மிருவிகற்பாகித்தனிச் சொலின்றியுந், தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பாகியுந், தனிச்சொலின்றிப் பலவிகற்பாகியு, மடியடிதோறுமொரூஉத்தொடையெனவு, மெனவைந்தாகுமின்னிசைதானே." என்றார்பிறருமெனக்கொள்க. அடிபலவாய்ச்சென்று நிகழ்வபஃறொடையாம். எ- து. நான்கடியின்மிக்க பலவடியான்வருவது பஃறொடைவெண்பாவெனப்படும். எ- று. நேரிசைவெண்பாவிற்கும், இன்னிசைவெண்பாவிற்கும், நான்கடியேயுரிமைசொன்னமையான் நான்கடியின்மிக்கபலவடியால் வருமென்பதாற்றலாற் போந்தபொருளெனக் கண்டுகொள்க. வ- று. வையகமெல்லாங்கழனியாவையகத்துச், செய்யகமே நாற்றிசையின்றேயங்கள், செய்யகத்து, வான்கரும்பே தொண்டைவளநாடு, வான்கரும்பின், சாறேயந்நாட்டுத்தலையூர்கள், சாறட்ட, கட்டியேகச்சிப்புறமெல்லாங், கட்டியுட், டானேற்றமானசருக்கரைமாமணியே, ஆனேற்றான் கச்சியகம் "இதுபலவிகற்பத்தான் வந்தவேழடிப்பஃறொடைவெண்பா, "சேற்றுக்கா னீலஞ்செருவென்ற வேந்தன்வேல், கூற்றுறழ்மொய்ம்பிற், பகழிபொருகயற், றோற்றந் தொழில் வடிவுதம்முட்டுமாற்றம, வேற்றுமையின்றியேயொத்தனமாவேடர், ஆற்றுக்காலாட்டியர்கண் "இஃதுஐந்தடியான்வந்த ஒருவிகற்பப்பஃறொடைவெண்பா. "பன்மாடக்கூடன்மதுரைநெடுந்தெருவில், என்னோடுநின்றாரிருவரவருள்ளும், பொன்னோடைநன் றென்றாளல்லளே பொன்னோடைக், கியானைநன்றென்றாளுமந்நிலையள்யானை, எருத்தத்திருந்த விலங்கிலைவேற்றென்னன், றிருத்தார் நன்றென்றேன்றியேன்" இஃது ஆறடியான்வந்த பலவிகற்பப்பஃறொடைவெண்பா. இனிவேழடியின்மிக்க பஃறொடைவெண்பாக்களை யாப்பருங்கலவிருத்தியுட்கண்டுகொள்க. சென்றுநிகழ்வவென்று சிறப்பித்தவதனால்.செப்பலோசையிற சிறிதுவழுவிவந்த பஃறொடைவெண்பாக்களைஒருபுடையொப்புமை

நேரிசைவெண் கலிப்பாற்படுத்துவழங்கினு மிழுக்காதென்ப தறிவித்தற்கென்க்கொள்க. சிறைவண்டினங்கண்ணுங் கருமென்குழற்றுடியேரிடைத்தூமொழியே- எ-து- மகடூஉமுன்னிலை.என்னை “தொடையடியித்துணையென்னும்வழக்க, முடையதையின்றி யுறுப்பழிவில்லா, நடையது பஃறொடைநாமங்கொளலே. என்றார் காக்கைபாடினியார்.

வைகலும்வைகறுகடீர்க்கட்குட்ட மின்றுமங்கண்
ஏயதுமலிதேர்வளமழையின்னவின்னிசைபோல்
வையகமெல்லாம்பலவிகற்பேற்றதுசேற்றொருகால்
பையரவல்குற்பண்மாடம்பஃறொடைப்பல்விகற்பே.1

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே இன்னிசைவெண்பாவிற்கும், பஃறொடைவெண்பாவிற்கும், காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. ([illegible])

நேரிசையின்னிசைபோலநடந்தடிமூன்றின்வந்தால்
நேரிசையின்னிசைச்சிந்தியலாகுங்கரிலவெள்ளைக்
கோரசைசீருமொழிசேர்பிறப்புமொண்காசுமிற்ற
சீருடைசிந்தடியேமுடிவாமென்றுதேறுகவே.

இ-கை. நேரிசைச்சிந்தியல்வெண்பாவும், இன்னிசைச்சிந்தியல்வெண்பாவும.எல்லாவெண்பாவிற்கு மீறுமாறுமுணர்த்து-ற்று.நேரிசையின்னிசைபோல நடந்தடிமூன்றின் வந்தானேரிசையின்னிசைச் சிந்தியலாகும் எ-து- நேரிசைவெண்பாவேபோல இரண்டாமடியி னிறுதி தனிச்சொற்பெற்று இருவிகற்பத்தானும,ஒருவிகற்பத்தானும்,மூன்றடியான்வருவன நேரிசைச்சிந்தியல்வெண்பாவெனவும,இன்னிசைவெண்பாவேபோலத்தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தானும்,பலவிகற்பத்தானும், மூன்றடியான் வருவன இன்னிசைச் சிந்தியல் வெண்பாவெனவும் வழங்கப்படும்-எ-று என்னை “நேரிசைச்சிந்து மின்னிசைச்சிந்துமென், றீரடிமுக்காலிருவகைப்படுமே“ என்றாராகலின். வ-று. “நற்கொற்றவாயினுங்குவளைத்தார்கொண்டு, சுற்றும்வண்டாரப்பப் புனைந்தாளே. பொற்றேரான், பாலைவாயின்மகள்,, “அறிந்தானையேத்தியறிவாங்கறிந்து, சிறந்தார்க்குச்செவ்வனுரைப்ப, சிறந்தார், சிறந்தமையாராய்ந்துகொண்டு,, இவை யிரண்டாமடியினிறுதிதனிச்சொற்பெற்று இருவிகற்பத்தானும்,ஒருவிகற்பத்தானும்வந்த நேரிசைச்சிந்தியல்வெண்பா. “நறுநீலநெய்தலுங் கொட்டியுந்தீண்டி,பிறநாட்டுப்பெண்டிர் முடிநாறும்பாரிரில், அறநாட்டுப்பெ

ண்டிரடி,, இது தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தான்வந்த ந்தியல்வெண்பா. "சுரையாழவம்மி மிதப்பவரையனைய, யானைக்குநீத்து முயற்குநிலையென்ப, கானக்நாடன்சுனை,, "முல்லைமுறுவலித்துக்காட்டின மெல்லவே,சேயிதழ்க்காந்தடுப்பீன்றபோயினர், திண்டேர்வரவுரைக்குங்கார்,, இவைதனிச்சொலின்றிப் பலவிகற்பத்தான்வந்த இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

நற்கொற்றவாயிலறிந்தாளையுநறும்பூங்குழலாய்
சொற்பெற்றநேரிசைசசிந்தியலாஞ்சுரையாழவம்மி
மிற்றற்குரியநறுநீலசெய்தலுமுல்லையுமென்
றெற்றப்படாதனவின்னிசைசசிந்திற்கிலக்கிபமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே நேரிசைச சிந்தியல்வெண்பாவிற்கும், இன்னிசைச்சிந்தியல்வெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. நிகரிலவெள்ளைக் கோரசைசசீருமொனிசோ பிறப்புமொண்காசுமிற்ற சீருடைச் சிந்தடியேமுடிவாமெனறு தேறுகவே-எ-து-எல்லாவெண்பாவிற்கு நாளென்னும் நேரசைச்சீரானும், மலரென்னு நிரையசைச்சீரானும. காசுபிறபபென்னும் வாய்பாட்டிற் குற்றியலுகரமீறுகிய நேரீறநிரைசீரானும், இற்றமுசசீரடியேயீற்றடியாவதென்றுதெளிக-எ-று. வெண்பாவி னிறுதிசசீாக்குக் குற்றியலுகரமீறாக வேறுதாரண மெடுத்தோதியதூஉம், அசைசசீர்க்குதாரணம் வேறுகாட்டிப் போந்ததூஉம், வெண்பாவினை அலகிட்டுதாரணவாய்பாட்டா னோசையூட்டும்பொழுது, பிறவாய்பாட்டானோசை யூட்டலாகாதாகவினெனக்கொள்க. இனியவ்வாற்றானோசையூட்டுமாறு. "பாலொடு-தேன்., என்பதனை அலகிட்டு,முறையானே,கூவிளம,கூவிளம,தேமா,கருவிளம,கூவிளம்.கூவிளம்,நாள்-என்றோசையூட்டுக. "நன்றறிவாரில்-அவலமிலர்,, என்பதனை அலகிட்டு, முறையானே கூவிளம் தேமா புளிமா கருவிளங்காய் தேமா புளிமா மலர் என்றோசையூட்டுக"மங்கலமென்பமனைமாட்சிமற்றத,னன்கலனன்மக்கட்பேறு,, என்பதனை அலகிட்டுமுறையானே கூவிளம் தேமா புளிமாங்காய் கூவிளம கூவிளம் தேமாங்காய் காசுஎன்றோசையூட்டுக "அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு,,என்பதனை அலகிட்டுமுறையானே புளிமா புளிமா புளிமாங்காய் தேமா புளிமா புளிமா பிறப்பு என்றோசையூட்டுக, பிறவெண்பாக்களையும், இவ்வாறலகிட்டோசையூட்டிச்செப்பலோசை வழுவாமற்கண்டுகொள்க. நிகரில்வெள்ளைக்கென்று சிறப்பித்தவதனால்,குறள்வெண்பாவினை ஓரடிமுக்காலவெண்பாவினை ஈரடிமுக்காலென்றும்,நேரிசைவெண்பா

மூவடிமுக்காலென்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடிமுக்காலென்றும், பஃறொடைவெண்பாவினைப் பலவடிமுக்காலென்றும், பெயரிட்டுவழங்குவரொருசாராசிரியரெனக்கொள்க. ஒளிசேர்பிறப்பு.மொண்காசுமென்று சிறப்பித்தவதனாற் காசுபிறப்பென்னும்வாய்பாட்டான் முற்றியலுகரமிறுதிநேர்ந்நியற்சீரிறுதியாகிய மூச்சீரடியானுமிறுவனவுமுள ஒருசார்வெண்பாவென்ப தறிவித்தற்கெனக்கொள்க.வ-று. "மஞ்சுசூழ்சோலை மலைநாடமூததாலும், அஞ்சொன்மடவார்க்கருளு,, இதுபிறப்பென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறுயிற்றவெண்பா. "இனமலர்க்கோதாயிலகுசீர்ச்சோப்பன், புனைமலர்த்தாரகலம்புல்லு,, இது காசென்னும்வாய்பாட்டான்முற்றியலுகரமீறுயிற்றவெண்பா. இவைசெய்யுளியலுடையார் காட்டியவெனக்கொள்க. என்னை "செப்பலிசையனவெண்பாமற்றவை, யந்தடிசிந்தடியாகலுமவ்வடி, யந்தமசைச்சீராகவும்பெறுமே,, என்பதியாப்பருங்கலம். "குற்றியலுகரமுமுற்றியலுகரமும், பெற்றவாய்பாட்டானின்றிறுமென்ப., என்றாராகலின், "மாவாழ்புலிவாழ்சுரமுளவாகமணியிறுவா, யோவாதளபெடுத்தாஉங்கெழூஉவுமுதாரணமாய், நாவார்பெரும்புகழ் நத்தத்தர் யாப்பினடந்ததுபோல்.தேயவாமுசரம்வந்தாலியற்சீரிங்குச் செப்பியதே,, இக்காரிகைசூத்திரத்துள் ஓசையூட்டுதற்கருத்தாவது-மாவாழ்சுரம்,புலிவாழ்சுரமெனும், வஞ்சியுரிச்சீரிரண்டுமுளவாகவைத்து ஒருபயனோக்கித்தாஉமணி கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகியவஞ்சியுரிச்சீர்க்குதாரணமெடுத்துக்காட்டினார் நத்தத்தனார் முதலாகிய வொருசாராசிரியர்,அதுபோல இந்நூலுடையாரும் நேமாபுளிமாவென்னுமிரண்டுமேலியற்சீருமுளவாக வெண்பாவினிறுதிச்சீர்க்கு உதாரணவாய் பாட்டாமோசையூட்டுதற்பொருட்டாகக் குற்றியலுகரமீறாகிய காசுபிறப்பென்னும் வாய்பாட்டானே நேர்ந்நியற்சீர்க்குமுதாரணமெடுத்தோதினாரெனக்கொள்க. (௩)

அந்தமில்பாதமளவிரண்டொத்துமுடியின்வெள்ளைச்
செந்துறையாகுந்திருவேயதன்பெயர்சீர்பலவாய்
அந்தங்குறைனவுஞ்செந்துறைப்பாட்டினிழிபுமங்கேச்
சந்தஞ்சிதைந்தகுறளுங்குறளினத்தாழிசையே.

இ-ள். குறள்வெண்பாவிற்கினமாகிய துறையும், தாழிசையுமாமாறுணர்த்து - ற்று. அந்தமில்பாதமளவிரண்டொத்து முடிபின்வெள்ளைச்செந்துறையாகும்-எ-து-இரண்டடியாப்ததமுளள வொத்துவருவது வெண்செந்துறையென்றும், செந்துறை வெள்ளையென்றும், பெயரிட்டு வழங்கப்படும்- எ-று. அந்தமில்பாதமென்று சிறப்பித்தவதனால். விழுமிய

பொருளும்,ஒழுகியவோசையுமுடைத்தாய்வருமெனக்கொள்க.என்னை "ஒழுகியவோசையினொத்தடியிரண்டாய், விழுமியபொருளதுவெண்செந்துறையே. என்பதியாப்பருங்கலம்-வ-று. ஆகவியுலகத்து மக்கட்கெல்லாம், ஓதலிற்சிறந்தன் றொழுக்கமுடைமை,, "பொன்றுறையெய்ந்த செல்வனடியிணை,என்றுமேத்தித்தொழுவோமியாமே,, இவை விழுமியபொருளும், ஒழுகியவோசையுமாய் வந்தமையான் வெண்செந்துறை. திருவே-ள-து-மகடூஉமுன்னிலை.சீர்பலவாயந்தங்குறைவுட-எ-து-நாற்சீரின்மிக்க பலசீரான்வந்து அடியிரண்டாய் ஈற்றடி குறைந்துவருவன குறட்டாழிசை யெனப்படும்-எ-று. இரண்டடி யென்பததிகாரம் வருவித்துரைக்கப்பட்டது, குறட்டாழிசையெனினும், தாழிசைக் குறளெனினு மொக்கும். சீரவகூர யறையிலாமைபால் எனைத்துசீரானும், அடியானும், வரப பெறு மெனக்கொள்க, வ-று. 'நண்ணுவார்வினை நையநாடொறு நற்றவர்க்கரசராயஞானநற், கண்ணினனடியேயடைவார்கள் கற்றவரே,, "நீலமாகடனீடுவாரிதிரைநின்றபோற்பொங்கிப் பொன்றுமாங்கவை, காலம் லகாலஞ்சென்றுஞ் செல்வாயாகவை சழிதலுமே,, எ-று. இவை ஈற்றடி குறைந்து இரண்டடியாய்ப் பலசீரான்வந்தமையால், குறட்டாழிசை. செந்துறைபாட்டினிழிபும். எ-து அடியிரண்டாய் அளவொத்துவிழுமியபொருளும், ஒழுகிய வோசையுமின்றி இவ்வாறே செந்துறைவெள்ளையிற்சிதைந்து வருவனவெல்லாஞ் செந்துறைச் சிதைவுத்தாழிசைக்குறளெனப்படும. எ-று. வ-று. "பிண்டியினீழற் பெருமான்பிடாத்தலை, மண்டலந்தோன்றுமால்வாழியன்னாய,, "அறுவர்க்கறுவனைப் பெறறுங கௌந்தி, மறுவறுபதுதினிபோல் வையயினீரே,, இவை விழுமியபொருளும், ஒழுகியவோசையுமின்றி இரண்டடியுந் தம்முளொத்து வந்தமையிற செந்துறைச்சிதைவுத்தாழிசைக்குறள. அங்கேழ்சந்த ஞ்சிதைந்த குறளுங் குறளினததாழிசையே. எ-து. செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத்தளைதட்டுக குறள்வெண்பாவிற சிதைந்துவருவன வெல்லாங குறள்வெண்பாவிறகினமாகிய குறட்டாழிசை யெனப்படும். "வண்டார பூங்கோதை வரிவளைக்கைத்திருநுதலாள், பண்டையலளல்லபடி,, இது சந்தஞ் சிதைந்ததாழிசைகுறள். என்னை "அந்தடிகுறைனவுஞ் செந்துறைச்சிதைவுஞ், சந்தழிகுறளுந்தாழிசைக்குறளே,,உரைத்தனவிரண்டுங், குறட்பாவினமே.,, என்பன யாப்பருங்கலம்.

மூன்றடியா னுமுடிந்தடிதோறுமுடிவிடத்துத்
தான்றனிச்சொற்பெறுந்தண்டாவிருத்தம்வெண்டாழிசையே
மூன்றடியாய்வெள்ளைபோன்றிறுமூன்றிழிபேழுயாவாய்
மூன்றடிதாஞ்சிலவந்தங்குறைந்திறும்வெண்டுறையே

இ-ள். வெளிவிருத்தமும், வெண்டாழிசையும், வெண்டுறையுமா மாறுணர்த்து-ற்று. மூன்றடியானு முடிந்தடிதோறு மடிவிடத்துத் தனிச்சொற்பெறுந் தண்டாவிருத்தம்-எ-து மூன்றடியானுமுற்றுப்பெற்று அடிதோறும், ஒருசொலலே யிறுதிக் கட்டனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்த மெனப்படும் எ-று. மூன்றடியானுமென்ற வும்மையால் நான்கடியானும் வரப்பெறுமெனக்கொள்க. தண்டாவிருத்த மென்று சிறப்பித்தவதனால் நாற்சீரடி யுட்பட்டடங்காது வேறாய்வருவது ஈண்டுத் தனிச்சொல்லெனக்கொள்க. என்னை "ஒருமூன்றொரு நான் கடியடிதோறுந், தனிச்சொற்றழுவி நடப்பதுவெள்ளை, விருத்தமெனப்பெயர் வேண்டப்படுமே. என்றார் சாக்கைபாடினியார். வ-று. "கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவாலென்செய்கோயான், வண்டுவரிபாட வாரதளவம் பூத்தனவா லென்செய்கோயான், எண்டிசையுந் தோகை யிருந்த கவினியங்கினவா லென்செய்கோயான்,, இது மூன்றடியான் என் செய்கோ யானென்றுந் தனிச்சொற்பெற்று வந்த வெளிவிருத்தம். "ஆவாவென்றே யஞ்சின ராழ்ந்தாரொருசாரார், கூகூவென்றே கூவிளிகொண்டாரொருசாரார், மாமாவென்றே மாய்ந்தன ரேந்தாரொருசாரார், ஏகீர்நாகீரென்செய்து மென்றாரொருசாரார்,, இது நான்கடியாய ஒரு சாரா ரென்னுந் தனிச்சொற்பெற்று வந்த வெளிவிருத்தம். வெண்டாழிசையே மூன்றடியாய் வெள்ளைபோன்றிறும்-எ-து-மூன்றடியா யீற்றடி வெண்பாவேபோல முச்சீரடியானிறுவது வெண்டாழிசை யென்றும், வெள்ளொத்தாழிசை யென்றும், வழங்கப்படும்-எ-று. என்னை "அடியொரு மூன்று வரத்தடி சிந்தாய, விடினது வெள்ளொத்தாழிசையாகும். என்பதியாப்பருங்கலம். வ-று. "நண்பிதென்று தீயசொல்லார் முனிவின்று முனிவுசெய்யார், அன்புவேண்டுபவர்,, இது மூன்றடி யாசிரியத்தளையான் வந்தவெண்டாழிசை. மூன்றிழி பேரேழடியானடிதாஞ் சில வந்தங்குறைந்திறும் வெண்டுறையே-எ-து மூன்றடிச் சிறுமையாய ஏழடிப்பெருமையாய் இடையிடை நான்கடியானும், ஐந்தடியானும், ஆறடியானும்வந்து பின்பிற் சிலவடி சிலசீர்குறைந்து வருவன வெண்டுறை யெனப்படும்-எ-று. ஆன்றடிதாமென்று சிறப்பித்தவதனால், முன்பிற்சில வடியோ ரோசையாயும், பின்பிற சிலவடி மற்றோரோசையாயும், வருவன வொரு சார்வேற்றொலி வெண்டுறை யெனக்கொள்க. என்னை "மூன்றடிமுதலா வேழடிகாறும்வந், தீற்றடி சிலசில சீர்தபநிற்பினும், வேற்றொலிவிரவினும் வெண்டுறையாகும் என்பதியாப்பருங்கலம். வ-று. "குழலிசையவண்டினங்கள் கோழிலையசெங்காந்தட் குலைமேற்பாய, அழலெரியின் மூழ்கினவாலந்தோ வளியவென்றயல்வாழ்மந்தி, கலுழ்வனபோ

னெஞ்சயர்ந்த கல்லருவி தூஉம், நிழல்வரை நன்னாடனீப்பனோவல்லன்,,
இது நான்கடியாய் ஈற்றடியிரண்டும், இரண்டுசீர் குறைந்துவந்த ஓரொ
லிவெண்டுறை. "தாளாளரல்லாதார் தாம்பலராயக்காலென்னாமென்னும்,
யாளியைக்கண்டஞ்சியானை தன்கோடிரண்டும், பீலிபோற் சாய்ந்து விழு
ம்பிளிற்றியாங்கே,, இது மூன்றடியாய் ஈற்றடியிரண்டும் இரண்டுசீர் கு
றைந்துவந்த ஓரொலிவெண்டுறை "முழங்குதிரைக் கொற்கைவேந்தன்
முழுதுலகுமேவல்செய முறைசெய்கோமான், வழங்குதிறல் வாண்மாற
ன் மாச்செழியன்றாக் கரியவைவேல்பாடிக், கலங்கினின்றொலாங் கருத
லாகாவணம், இலங்குவாளிரண்டினு மிருகைவீசிப்பெயர்ந், தலங்கன்மம்
லையவிழ்ந்தாடவாடுமிவள், பொலங்கொள் பூந்தடங்கட்கே புரிந்துநின்
றொலாம், விலங்கியுள்ளந் தபவிளிந்துவேறுபவே,, இது எழடியாய்
முதலிரண்டடியும் அறுசீராய் ஓரோசையாய்ப், பின்னைந்தடியு நாற்சீ
ராய் வேறோரோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை. ஐந்தடியானும்
ஆறடியானும், வருவன யாப்பருங்கல விருத்தியுட்கண்டுகொள்க. மூன்
றடியாய் வெள்ளைபோன்றிறுந்தாழிசை மூன்றிழிபேழ் ஆன்றடிதாஞ் சி
லவந்தத்தடிகளனை குறைந்து, தோன்றுந்துறை வெள்ளைதண்டாவிரு
த்தந்தனிச்சொல்வந்து, மூன்றடியானு முடியுமுடியுமொர்நான்கினுமே.,
என்று வெண்பாவிற் கினமாகிய தாழிசை துறைவிருத்தங்கட்கு முறை
யானே இலக்கணஞ்சொல்லாது தலைதடுமாற்றமாகக் காரிகை சொல்ல
வேண்டிய தென்னையோவெனின், ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி
யொன்றொருசீர் குறைந்துவருவன வுளவென்பதூஉம், வெள்ளொத்தா
ழிசையின் முதலிரண்டடியு நான்குசீரான் வருமென்பதூஉம், சிந்தியல்
வெண்பா வொருபொருண்மேன் மூன்றடுக்கி வருவனவெல்லாம் வெள்
ளொத்தாழிசையென்று வழங்கப்படுமென்பதூஉம், அறிவித்தற்கு வே
ண்டப்பட்டது. தலைதடுமாற்றந்தந்து புணர்த்துரைத்தலென்பது தந்திர
வுத்தியாகலான்-வ-று. "வெறியுறுகமழ்கண்ணி வேந்தர்கட்காயினும், உ
றவுறவரும்வழி யுரைப்பனவுரைப்பன்மற், செறிவுறுதகையினர் சிறந்த
னரிவர்நமர், கறிவுறுதொழிலொன் றல்லவைசொல்லன்மின், பிறபிற
கழ்வனபின்,, இது ஈற்றடி யொன்றொரு சீர்குறைந்துவந்த ஓரொலிவெ
ண்டுறை. வெள்ளொத்தாழிசை முதலிரண்டடியும் நாற்சீராய வருவது
நண்பிதென்னு மிலக்கியத்துட்கண்டுகொள்க, "அன்னாயறங்கொனலங்கி
ளர்சேட்சென்னி, ஒன்னாருடைபுறம்போல நலங்கவர்ந்து, துன்னான்று
றந்துவிடல் - ஏடீயறங்கொனலங்கிளர்சேட்சென்னி, கூடாருடைபுறம்
போலநலங்கவர்ந்து, நீடான்றுறந்துவிடல்—பாவாயறங்கொன லங்கிளர்
சேட்சென்னி, மேவாருடைபுறம் போலநலங்கவர்ந்து', சாவான்றுறந்து

ண்டல.,, இவைசிந்தியல்வெண்பா. ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையான் வெள்ளொத்தாழிசை. என்னை "ஈரடிமுக்கா லிசைகொண்டந்து, மூன்றுடனடுக்கித்தோன்றி னொத்தாழிசை. என்றார் மயேச்சுரர்,,

கொண்டன்முழங்கினவாவாலிருத்தங்குழலிசைய
வண்டினம்வெண்டுறைதாளாமுழங்கொடுதாழிசையே
நண்பிதென்றூர்கலிகொன்றைவெண்செந்துறைநீலநண்ணும்
பிண்டியறுவர்வண்டார்வெறிதாழிசைபெய்வளையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின்வழியே வெண்பாவினை காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

கடையயற்பாதமுச்சீர்வரினேரிசைகாமருசீர்
இடைபலகுன்றினிணைக்குறளெல்லாவடியுமொத்து
நடைபெறுமாயினிலைமண்டிலநடுவாதியந்தத்
தடைதருபாதத்தகவலடிமறிமண்டிலமே.

அகவலோசையோ டளவடித்தாகியும், இயற்சீர்பயின்றும், அயற்சீர்விரவியும், தன்றளைசழுவியும், பிறதளைமயங்கியும், நிரைநடுவாகியவஞ்சியுரிச்சீர் வருதலில்லா ஆசிரியப்பாவினை, அடியானுந், தொடையானும் ஓசையானும், பொருளானும், பெயர்வேறுபாடுணர்த்துவா னெடுத்துக் கொண்டார் அவற்றுள், இக்காரிகை, நேரிசையாசிரியப்பாவும், இணைக் குறளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறிமண்டில வாசிரியப்பாவுமாமாறுணர்த்து - ற்று. கடையயற்பாத முச்சீர்வரினேரிசை-எ-து ஈற்றயலடி முச்சீரான்வருவது நேரிசையாசிரியப்பா - எ-றுஉ என்னை "அந்தவடியினயலடிசிந்தடி, வந்தனநேரிசையாசிரியம்மே, என்பதியாப்பருங்கலம்,, -வ-று- "நிலத்தினும் பெரிதேவானினுமுயர்ந்தன்று நீரினுமாரளவின்றேசாரற், கருங்கோற் குறிஞ்சிபூக்கொண்டு, பெருந் தேனிழைக்கு நாடனொடுநட்பே,, இஃதீற்றயலடிமுச்சீரான் வந்தமை யானேரிசையாசிரியப்பா. காமருசீ ரிடைபலகுன்றினிணைக்குறள்-எ-து- ஈற்றடியும், முதலடியும், ஒழிந்து இடையடிகள் இரண்டும்பலவும், குறளடியானும், சிந்தடியானும், வருவன இணைக்குறளாசிரியப்பா எ-று. என்னை "அளவடியந்தமுமாதியுமாகிக, குறளடிசிந்தடியென்றிவிரண்டு மிடைவர நிற்பதிணைக்குறளாகும்,, என்றார் காக்கைபாடினியார். வ-று "நீரின்றண்மையுந் தீயின்வெம்மையும், சாரச்சார்ந்து, தீரத்தீருஞ், சாரலுடன்கேண்மை, சாரச்சாரச்சார்ந்து, தீரத்தீரத் தீர்பொல்லாதே,, இதுமுதலடியும் ஈற்றடியுநாற்சீராய் இடையடி யிருசீரானும், முச்சீரானும்வந்த இணைக்குறளாசிரியப்பா. "சிறியகட்பெறினேயெமக்கீயுமன்னே

பெரியகட்பெறினே, யாம்பாடத்தான் மகிழ்ந்துண்ணுமன்னே, சிறுசோ
றாலும், நனிபலகலத்தன்மன்னே, பெருஞ்சோற்றாலும், நனிபலகலத்
தன்மன்னே, என்பொடுதடிபடுவழியெல்லாம், எமக்கீயுமன்னே, அம்
பொடுவேனுழைவழியெல்லாம், தானிற்குமன்னே, நரந்தநாறுந்தன்கை
யால், புலவுநாறுமென்றலை தைவருமன்னே, அருந்தலையிரும்பாணரகன்
மண்டைத் துளையுரீஇ, இரப்போர்கையுளும்போகிப், புரப்போர்புன்கண்
பார்வைசோர, அஞ்சொனுண்டேர்ச்சிப் புலவர் நாவிற், சென்றுவீழ்ந்த
ன்றவன், திருநிறத்தியங்கியவேலே, அரசாகசெந்தை யாண்டுளனகொல்
லோ, இனிப்பாடுநருமில்லை, பாடுநர்க்கொன்றீகுநருமில்லை, பனித்து
றைப்பகன்றை நறைகொண்மாமலர், சூடாதுவைகி யாங்குப் பிறர்க
கொன், றீயாதுவீயு முயிர்தவப்பலவே,, இஃதிடையிடையே யிருசீரடி
யுமுச்சீரடியுமாய் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா. காமருசீமொன்
று சிறப்பிற்றவத்தனால் ஆசிரியப்பா நான்கிற்கும் ஏயெனுமசைச்சொ
ல்லானிறுவது சிறப்புடைத்து, பிறவெழுத்து மீற்றயலவரப்பெறுமாயினு
மெனக்கொள்க. என்னை "அகவலிசையன வகவன் மற்றவை, யேஓஈஆயெ
ன்னையென்றிறுமே என்றார்தொல்காப்பியனார். எல்லாவடியு மொத்து ந
டைபெறுமாயி னிலைமண்டிலம். எ-து எல்லாவடியுந் தம்முளளவொத்
து நாற்சீரடியாயவருவது நிலைமண்டிலவாசிரியப்பா-எ-று. வ-று "வேரல்
வேலிவேர்க்கோட்பலவின, சாரனாடசெவ்வியையாகுமதி, யாரஃதறி
ந்திசினோரே சாரற், சிறுகோட்டுப்பெரும்பழந் தூங்கியாங்கிவள், உயிர்தவச்
சிறிது காமமோபெரிதே,, இஃதெல்லாவடியும் நாற்சீராயளவொத்து வ
ந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா. மண்டிலமெனினும், நிலைமண்டி
லமெனினு மொக்கும். நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு என்னெனு
மசைச்சொல்லானிறுவது சிறப்புடைத்து பிறவொருசாரொற்றினும
உயிரினும், ஈற்றயல்வரவும் பெறுமெனக்கொள்க, என்னை "ஒத்தவடித்
தா யுலையாமரபொடு, நிற்பதுதானே நிலைமண்டிலமே. என்னெனகிளவி
யை யீற்றுப்பெறுதலு, மன்னபிறவுமந்நிலைபெற, நிறகவுமபெறூஉ நிலை
மண்டிலத்தே,, என்றாராகலின். நடுவாதியந்தத் நடைதருபாதத்ததாகவ ல
டிமறிமண்டிலமே-எ-து எல்லாவடியு முதனடுவிறுதியாகவுச்சரிப்பினு
மோசையும்பொருளுமழியாது வருவதடிமறிமண்டில ஆசிரியப்பா
எ-று. என்னை "மனப்படுமடிமுதலாயிறின்மண்டிலம்,, என்பதியாப்பரு
ங்கலம். "உரைப்போர்குறிப்பினுணர்வகையன்றி, யிடைநிலையான் முத
லிறுதிநிலைதம்முள், மதிக்கப்படாதன மண்டிலயாப்பே,, என்றார்
நக்கீரபாடினியார். வ-று. "ரல்பழம்பியசிறுகானயாறே, சூரரமகளிரா

வாங்கினரோ, வாரலெனினேயானஞ்சுவலே, சாரனுடனீவரலாறே,, இஃ தெல்லாவடியு முதனடுவிறுதியாகவுச்சரிக்க,ஓசையும்பொருளும் பிழையாதுவந்த அடிமறிமண்டில ஆசிரியப்பா.

நேரிசையாகுநிலத்திலுமென்பதிணைக்குறட்பா
சீரின்சிறியநிலைமையதாநிலைமண்டிலப்பா
வேரலென்றாகும்விரைமலர்க்கோதைவில்லேர்நுதலாய்
சூரல்பம்பென்பதடிமறியாகத்துணிந்தனரோ.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின்வழியேஆசிரியப்பாநான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துகொள்க. (அ)

தருக்கியமுழிசைமூன்றடியொப்பனநான்கடியாய்
எருத்தடிநைந்துமிடைமடக்காயுமிடையிடையே
சுருக்கடியாயுந்துறையாங்குறைவிறொல்சீரகவல்
விருத்தங்கழிநெடிலுன்கொத்திறுவதுமெல்லியலே.

இ-கை ஆசிரியத்தாழிசையும், ஆசிரியத்துறையும், ஆசிரியவிருத்தமுமா மாறுணர்த்து-ற்று. தருக்கியமுழிசைமூனறடியொப்பண- எ-து. மூன்றடியாய்த் தம்முள்ளவொத்துவருவன ஆசிரியத்தாழிசை. எ-று. தருக்கியலென்று சிறப்பித்தவதனல், அவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருவன சிறப்புடையன, தனியேவரபெறுமாயினுமெனக்கொள்க. என்னை "மூன்றடியொத்த முடிவினவாய்விடி, ஞன்றவகவற்றாழிசையாகும்,, என்பதியாப்பருங்கலம். வ-று. "கன்றுகுணிலாக் கனியுகுத்தமாயவன், இன்றுநம்மானுள் வருமேலவன்வாயிற், கொன்றையந்தீங்குழல் கேளாமோதோழீ. பாம்புகயிறாக்கடல் கடைந்தமாயவன், ஈங்குநம்மானுள்வருமேலவன்வாயில், ஆம்பலந்தீங்குழல்கேளாமோதோழீ. கொல்லையஞ்சாரற் குருந்தொசித்தமாயவன், எல்லிநம்மானுள் வருமேலவன் வாயில், முல்லையந்தீங்குழல் கேளாமோதோழீ,, இவையொருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை, "வாநுறநிமிர்ந்தனை வையகமளந்தனை, பான்மதிவிடுத்தனை பல்லுயிரோம்பினை, நீனிறவண்ண நின்னிணாகழற்றொழுதனம்,, இது தனியேவந்த ஆசிரியத்தாழிசை. நான்கடியா யெருத்தடிநைந்து மிடைமடக்காயு மிடையிடையே சுருக்கடியாயுந் துறையாம் - எ-து. "நான்கடியாய் ஈற்றியலடி குறைந்து வருவனவும், நான்கடியாயீற்றய லடிகுறைந்திடை மடக்காய் வருவனவும், நான்கடியா யிடையிடைகுறைந்து வருவனவும், நான்கடியாயிடையிடை குறைந் திடைமடக்காய் வருவனவும், ஆரியத்துறை. எ-று. நான்கடியா

யென்பதனை யெல்லாவற்றினோடுங் கூட்டி யிடைமடக்காயென்பதனை
யொருகாலிருதலையுங் கூட்டி மத்திமதீபமாகப் பொருளுரைத்துக்கொள்
க. சீர்வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும், அடியாய்வரப்பெ
றுமெனக்கொள்க. வ-று. "கரைபொருகான்யாற்றங் கல்லதரெம்முள்ளி
வருவிராயின், அரையிருள்யாமத்தடுபுலியே றஞ்சியகன்றுபோக, நரை
யுருமேறு நுங்கைவேலஞ்சு நும்மை, வரையரமங்கையர் வெளவுதலஞ்சு
தும் வாரலையோ,, இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரி
யத்துறை. "வண்டுளர்பூந்தார் வளங்கெழுசெம்பூட் சேய்வடிவேபோல
த், தண்டளிர்ப்பூம்பிண்டித் தழையேந்திமாவினவித் தணந்தோன்யாரோ,
தண்டளிர்ப்பூம்பிண்டித் தழையேந்திவந்துநம், பண்டைப்பதிவி னவிப்
பாங்குபடமொழிந்து படர்ந்தோனன்றே,, இதுநான்கடியாய் ஈற்றயலடி
குறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை "கொன்றூர்ந்தமைந்த கு
ருமுகத்தெழினிறங்குருதிக்கோட்டனவிருந்தாட்பெருங்கைக்குன்றமெ
ன வன்றுமெனக் குமுறுகின்றன கொடுந்தொழில்வேழம், வென்றூர்ந்த
மைந்த விளங்கொளி யிளம்பிறைத்துளங்கு வாளெயிற் றழலுளைப்
பருஉத்தா ளதிரும் வாளெனவெதிருங்கூற்றெனச் சுழலாநின்றன சுழி
க்கண்யாளி, சென்றூர்ந்தமைந்த சிறுநுதிவள்ளுகிர்ப்பொறியெருத் தெறு
ழ்வலிப் புலவுநாறழல்வாய்ப் புனலாமெனக் கனலாமெனப் புகையாநின்
றன புலிமானேற்றை, என்றுங்கிவையிவை யியங்கலினெந்திறத்தினி வர
ல்வேண்டலர் தனிவரலெனத்தலை விலக்கலி னிறுவரை மிசையெறிகுறு
ம்பிடை யிதுவென்னெனவது நோனார்கரவிர விடைகளவுளமது கற்றே
ரோதுங்கற்பன்றே,, இதுநான்கடியாய் முதலடியுமூன்றாமடியும் பதினொ
ன்கு சீராயல்லாத வடியிரண்டும் பதினாறுசீராயிடை யிடைகுறைந்துவந்
த ஆசிரியத்துறை. "இரங்குயின்முழவா வின்னிசையாழ்தேனு, அரங்க
மணிபொழிலா வாடும்போலுமிளவேனில், அரங்கமணிபொழிலா வாடு
மாயின், மரங்கொன்மணந்தகன்றார் நெஞ்சமென்செய்ததிளவேனில்,, இ
துநான்கடியா யிடையிடைகுறைந்திடை மடக்காய்வந்த ஆசிரியத்துறை.
என்னை "கடையதனயலடி கடைதபுநடையவு, நடுவடிமடக்காய் நான்கடி
யாகி, யிடையிடை குறைனவு மகவற்றுறையே,, என்பதியாப்பருங்கல
ம். குறைவிறுதல்சீ ரகவல் விருத்தங்கழிநெடி லொன்கொத்திறுவது-எ-து
கழிநெடிலடிநான்காய்த் தம்முளளவொத்துவருவன ஆசிரியவிருத்தம்
எ-று. குறைவிறுதல்சீரொன்று சிறப்பித்தலதனால் எண்சீரின்மிக்க சீரான்
வந்த அடியெல்லாஞ் சிறப்பிலவெனக்கொள்க. வ-று. "விடஞ்சூழரவி
னிடை நுடங்க மின்வாள்வீசிவிரையார்வேங், கடஞ்சூழ்நாடன்காளிங்

ன் கதிர்வேல்பாடுமொர்தங்கி, வடஞ்சேர்கொங்கை மலைதாந்தாம்வடிக்கண்
ணீலமலர்தாந்தார், தடந்தோ விரண்டும் வேய்தாந்தா மென்னுந்தன்மை
த் தின்னுமைமே, இஃதறுசீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்த
ம். கணிகொண்ட. எ-து. எழுசீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்
தம்: மூவடிவிஞல். எ-து. எண்சீர்க்கழிநெடிலடியான்வந்த ஆசிரியவிருத்
தம். இடங்கைவெஞ்சிலை. எ-து. ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியான்வந்த
ஆசிரியவிருத்தம். கொங்குதங்கு- எ-து. பதின்சீர்க்கழிநெடிலடியான்வந்
த ஆசிரியவிருத்தம். என்னை. "கழிநெடிலடிநான் கொத்திறின்விருத்த
மஃ, தழிபாமரபின தகவலாகும், என்பதியாப்பருங்கலம். மெல்லியலே,
. எ-து. மகடூஉமுன்னிலை,

மைந்தருஞ்சினில்வானுறத்தாழிசையாங்களைபொருகான்
என்றதுமவண்டுளர்பூந்தாரிரங்குகுயின்மூழவாக்
கொன்றூர்ந்தமைந்தவகவற்றுறைகுறையாவிருத்தம்
பின்றூழகுழலிவிடங்கணிமூவடிவாதியவே,

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின்வழியே ஆசிரியப் பாவினங்கட்
குக்காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௯)

தரவொன்றுதாழிசைமூன்றுதனிச்சொற்சுரிதகமாய்
நிரலொன்றினேரிசையொத்தாழிசைக்கலிநீத்திரைபோல்
மரபொன்றுநேரடிமூச்சீர்குறணடுவேமடுப்ப
தாவொன்றுமல்குலதம்போதரங்கவொத்தாழிசையே.

துள்ளலோசைத்தாய், நேரீற்றியற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரி
ச்சீரும்வாராது, நிரைமுதலாகிய வெண்பா வுரிச்சீர்மிக்கு நேரடித்தா
ய்க் கலித்தளையும், அயற்றளையுந்தட்டுத் தரவுதாழிசையென்னு முதனு
றுப்பும், அராகம, அம்போதரங்கம், தனிசசொல் சுரிதகமென்னுந் துணை
யுறுப்பு முடைத்தாய், ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலியெ
ன்னும் வேறுபாட்டாற்கிடந்த, கலிப்பாக்களை உறுப்பினானும், ஓசையா
னும், பொருளானும், பெயர்வேறுபாடுணர்த்துவா னெடுத்துக்கொண்
டார், அவற்றுள், இக்காரிகை, நேரிசையொத்தாழிசைக்கலிப்பாவும், அ
ம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவுமாமாறுணர்த்து- ற்று. தரவொ
ன்று தாழிசைமூன்று தனிச்சொற்சுரிதகமாய் நிரலொன்றினேரிசையொ
த்தாழிசைக்கலி.எ-து. முன்னொருதரவுவந்து, அதன்பின்பு மூன்றுதாழி
சைவந்து, அதன்பின்னொருதனிசசொல்வந்து, அதன்பின்னாசிரியத்தா
லவது, வெண்பாவானவது, ஒருசுரிதக வுறுப்புப்பெற்றுவருவது நேரி

சையொத்தாழிசைக்கலிப்பா-எ-று. தரவெனினும், எருத்த மெனினுமொ க்கும். தாழிசை யெனினும், இடைநிலைப்பாட்டெனினுமொக்கும். தனிச் சொலெனினும், விட்டிசையெனினும், கூனெனினும், தனிநிலை யெனினு மொக்கும். சுரிதகமெனினும், அடக்கியலெனினும், வாரமெனினும், வைப் பெனினும் போக்கிய லெனினு மொக்கும். என்னை, "தரவு முன்னிற் றலிற் றரவே தாழிசை, யொத்தாழ்ந்திறினஃ தொத்தாழிசையே, தனி தாநிற்றலிற் றனிச்சொற்றனிநிலை, நீர்ச்சுழிபோலநின்று சுரிந்திறுதலிற், சோர்ச்சியில்புலவர் சுரிதகமென்ப,, என்று காரணக்குறிசொன்னாருமு ளரெனக்கொள்க. இனித்தரவுதாழிசைகட் கடிவரையறையாமாறு சுருங் கிற்று மூன்றடியென்னுங் காரிகையுட்போக்கிச் சொல்லுதும்.வ-று. "வா ணெடுங்கண்பனிகூரவண்ணம் வேறாய்த்திரிந்து, தோணெடுந்தகைதுற ந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப், பூணெடுங்குழலை கண்டுமபொருட் பிரிதல் வலிப்பவோ. இதுதரவு-நீருடையகடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற், நீருடையநலந்தொலையப் பிரிவாரோபெரியவரோ.—சேணு டைய கடுங்கடங்கள் செலற்கரியவென்பவால், நாணுடையநலந்தொலைய நடப்பாரோ நலமிலரோ—சிலர்படைந்தவெங்கானஞ் சீரிலவேயென்ப வாற், புலம்படைந்த நலந்தொலையப்போவாரோ பொருளிலரோ. இவை மூன்றுந்தாழிசை. எனவாங்கு, தனிச்சொல். அருளொன்றுமிலராய்ப் பொ ருள்வயிற்பிரிவோர், பன்னெடுங்காலமும்வாழியர், பொன்னெடுந்தே ரொடுந் தானையிற்பொலிந்தே,, இதுசுரிதகம். தரவுமூன்றடியாய்த் தாழி சைமூன்றுமிரண்டிரண்டடியாய்த்தனிச்சொற்பெற்று மூன்றடியாசிரியச் சுரிதகத்தாலிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா. வெள்ளைச்சுரிதகத் தாலிற்றனயாப்பருங்கல விருத்தியுட்கண்டுகொள்க என்னை "தரவுதாழி சை தனிசசொற்சுரிதக மெனுநான்குறுப்பின தொத்தாழிசைக்கலி,, எ ன்றாராகலின். "தரவொன்றாகித் தாழிசைமூன்றாய்த், தனிச்சொலிடை கிடந்து சுரிதகந்தழுவ, வைத்தமரபின தொத்தாழிசைக்கலி,, என்றார் மயேச்சுரர்கீர்த்தியினைபோன். மரபொன்றுநேரடி முச்சீர்குறளடி வேமடு ப்பதது அம்போதரங்கவொத்தாழிசை. எ-து. களைசாரககளைசார வொ ருகாலைக்கொருகாற் சுருங்கிவருகின்ற நீர்த்தரங்கம்போல நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகிய அசையடிகளைத்தாழிசைக்குந் தனிச் சொற்கு நடுவே தொடுத்துத் தரவுதாழிசை அம்போதரங்கம் தனிச் சொல் சுரிதகமென்னும் ஐந்துறுப்புடைத்தாய்வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா. எ-று. அரவொன்றுமல்குல் - எ-து. மகடூஉமுன் னிலை. மரபொரனறு நேரடியென்று சிறப்பித்தவதனால், அசையடிதான்

ஈரடியாலிரண்டும், ஓரடியானான்கும், முச்சீராலெட்டும், இருசீராற்பதி
னாறாய்வருவது சிறப்புடைத்து, எட்டும் பதினாறுமென்று சொல்லப்
பட்டன, நான்குமெட்டுமாகச்சுருங்கி வரப்பெறுமாயினுமெனக்கொள்க.
என்னை. "ஈரடியிரண்டு மோரடிநான்கு, முச்சீரெட்டு மிருசீரிரட்டியு,
மச்சீர்க்குறைபினு மம்போதரங்கம்" என்றாராகலின். அம்போதரங்கமெ
னினும், அசையடியெனினும், பிரிந்திசைக்குறளெனினும், சொற்சீரடி
யெனினும், எண்ணெனினுமொக்கும் என்னை. "அனையவாகியவசையடி
நான்குந், தனியொடுதாழிசை யிடைவருமென்ப" அவற்றைப்பேரெண்,
அளவெண், இடையெண், சிற்றெண்ணென்றுபெயரிட்டு வழங்குவாரு
முளர். வ-று. "கெடலருமாமுனிவர் கிளர்ந்துடன்றொழுதேத்தக், கடல்
கெழுகனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய, அழலவிர்சுழல்செங்கணரி
மாவாய்மலைந்தானைத, தாரொடுமுடிபிதிரத் தடுனியப்பொடிபொங்க, வா
ர்புனலிழிகுருதி யகலிட முடனனைப்பக், கூருகிரான்மார்பிடந்த கொலை
மலிதடக்கையோய்-இது தரவு. முரசதிர்வியன்மதுரை முழுவதூஉந் த
லைபனிப்பப், புனைகொடித்திரடிண்டோட்போர்மலைந்த மறமல்லர், அடி
யொடுமுடியிறுபபுண் டயர்ந்தவர்நிலஞ்சேரப், பொடியெழவெங்களத்து
ப்புடைத்தது நின்புகழாமோ. கலியொலிவியனுலகங் கலந்துடனிநடுங்
க, வலியியலவிராழி மாறெதிர்ந்தமருட்சோர்வு, மாறுதாருடம்போடு ம
றம்பிதிரவெதிர்கலங்கிச, சேணுயரிருவிசும்பிற் செகுத்ததுநின்சினமா
மோ, படுமணியினநிரைகள் பரந்துடனிரிந்தோடச், கடுமுரணெதிர்மலை
ந்த காரொலியெழிலேறு, வேரிவெஞ்சமருப்பொசிய வீழ்ந்துதிறமவேறு
க, ஏறுமலிபெருந்தொழுவி னிறுத்ததுநின்னிகலாமோ. இவைமூன்றுந்
தாழிசை—இலங்கொளிமரகத மெழிலுமிகுவியன்கடல், வலம்புரித்தடக்
கையின் மாவுனினனிறம். விரியிணர்க்கோங்கமும் வெண்டெரிபசும்பொ
னும், பொருகளிறட்டோய் புனையுநின்னுடை. இவைநாற்சீரடியிரண்டம்
போதரங்கம். இவைபேரெண். "கண்கவாகதிர்முடி கனலுஞ்சென்னியை,
தண்சுடருறுபகை தவிர்த்தவாழியை. ஒலியியலுவண மோங்கியகொடி
யினை, வலிமிகுசகட மாற்றியவடியினை. இவையோரடிநான் கம்போதரங்
கம். இவை அளவெண், போரவுணர்கடந்தோய்நீஇ, புணர்மருதமபிள
ந்தோய்நீஇ, நீரகலமளந்தோய்நீஇ, நிழறிகழும்படையோய்நீஇ, இவை
முச்சீரடிநான்கம்போதரங்கம். இவை யிடையெண். ஊழிநீஇ உலகுநீஇ
உருவுநீஇ, அருவுநீஇ, ஆழிநீஇ, அருளுநீஇ, அறமுநீஇ, மறமுநீஇ. இ
வை யிருசீரோரடி எட்டம்போதரங்கம். இவை சிற்றெண். எனவாங்கு,

தனிச்சொல். அந்நிறமொருவமிற் புரவுற்மெய்கோன், தொடுகழற்கொ டுங்கட்டெடுமின்மார்பிற், கயவொடுகலந்த கலையுடைக்கொடிவரிய் புறற்றடக்கைப்போர்வேலசுதன், தொன்றுமுதிர்கட லுலகமுழுது டன், ஒன்றுபுரிநிகிரி யுருட்டுவோனெனவே,, இது சுரிதகம், இஃதெட்டு மறுத்தறுமென்று சொல்லப்பட்ட முச்சீரடியும், இருசீரடியும், நான்கு மேட்டுமாய்வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா. "நலங்கிளர்திரு மணியு நன்பொன்னுங் குயின்றழகார், இலங்கெயிற்றழலரி மானெருத்த ஞ்சேர்ந்தணையின்மேல், இருபுடை யுமியக்கரச ரிணைக்கவரியெடுத்தசைப்ப, விரிதாமக் துயல்வருஉம் வெண்குடை மூன்றுடனிழற்ற, வண்டாரற்ற நாற்காதம் வகைமாணவுயர்ந்தோங்கும், தண்டளிர்ப்பூம்பிண்டிக் கீழ்க் கைபெறவீற்றிருந்தனையே,, என்னும் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவினுளொட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்ட அம்போதரங் கங் குறையாதேவந்தவாறு யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க. எ ன்னை. "சீர்த்தினைபோல நிரலேமுறைமுறை, யாக்கஞ்சுருங்கி யசையடி தாழிசை, விட்டிசைவிரியத் தொடுத்துச்சுரிதகந் தாங்கித்தொடுத்த தர வினோடெனவும், யாப்புற்றமைந்த வம்போதரங்கம்,, என்றார் காக்கை பாடினியார்,

வாணெடுங்கண்பனிநேரிசையாகுமதர்த்திருண்டு
சேணுறவோடிக்குழைபொடிச்செருச்செய்யும்விழி
நாணுந்திருவுமறிவுஞ்செறிவுமுடையநல்லாய்
ஏனுங்கெடலருமாமுனியம்போதரங்கமென்னே,

இவ்வுரைச்சூத்திரக் காரிகையின்வழியே நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவிற்குங்காட்டி ய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௰)

அசையடிமுன்னராகம்வந்தெல்லாவுறுப்புமுண்டேல்
வசையறுவண்ணகவொத்தாழிசைக்கலிவான்றலைதட்
டிசைதனதாகியும்வெண்பாவியையினுமின்பான்மொழியாய்
விசையறுசிந்தடியாசிறுமாய்விடின்வெண்கலியே.

இ-கை. வண்ணக வொத்தாழிசைக்கலிப்பாவும், வெண்கலிப்பாவு மாமாறுணர்த்து-ற்று. அசையடிமுன்னராகம்வந் தெல்லாவுறுப்புமுண் டேல் வசையறுவண்ணகவொத்தாழிசைக்கலி. எ-து. அம்போதரங்கவு றுப்பிற்குந் தாழிசைக்குநடுவே அராகவுறுப்புப்பெற்றுத்தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகமென்னு மாறுறுப்பினை

முடைத்தாய் வருமெனினும் வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவெனப்படும். எ-று. அராகமெனினும், வண்ணகமெனினும், முடுகியலெனினும், அடுக்கியலெனினுமொக்கும், வஞ்சயறவண்ணகமென்று சிறப்பித்தலால், அராகவுறுப்புத்தானளவடி முதலாகிய எல்லாவடியானும் வரப்பெறுமெனக்கொள்க. அடிவரையறையானது சிறுமைநான்கடி பெருமையெட்டடி இடை ஐந்தடியானும், அறடியானும், ஏழடியானும், வரப்பெறுமெனக்கொள்க. என்னை '·அளவடி முதலா வனைத்தினு நான்கடி, முதலாயிரட்டியு முடுகியனடக்கும்., என்றாராகலின். வ-று. விளங்குமணிப் பசும்பொன்னின் விசித்தமைத்துக்கதிர்கான்று, துளங்குமணிக்கனை சூழ்காற்றுறு மலர்நறும்பைந்தார்ப், பரூஉத்தடக்கைமதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றும், குரூஉக்கொண்டமணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண், மாயாதவனப்பினையாய் மகிழ்வார்க்குமெல்லார்க்கும், தாயாகித் தலையளிக்குந் தண்டுறையூரகேள். இதுதரவு. காட்சியாற்கலப்பெய்தி யெத்திறத்துங்கதிர்ப்பாகி, மாட்சியார்க்கறியாத மரபொத்தாய்ராவினுற், பிணிநலம்பெரிதெய்திப் பெருந்தடந்தோள்வனப்பழிய, அணிநலந்தனியேவந் தருளுவதுமருளாமோ. அன்பினலமிழ்தனொஇ யறிவினுற்பிரிவின்றிப், பொன்புனைபூணுகம் பசப்பெய்தப்பொழிவிடத்துப், பெருவரைத்தோளருளுதற்கிருளிடைத்தமியையாய்க், கருவரைத்தோள்கதிரபிக்குங் காதலுங்காதலோ, பாஙகனையேவாயிலாப் பல்காலும்வந்தொழுகு, தேங்காதகரவினையுந் தெளியாதவிருளிடைக்கட், கூடவரைவேய்த்தோளிணைகள்குளிர்ப்பிப்பான்றமியையாய்த், தடமலர்த்தாரருளுகின்றகுதியு தகுதியோ. இவைமூன்றுந்தாழிசை. தாதுறுமுறிசெறி தடமலரிடையிடை தழலென விரிவனபொழில், போதுறுநறுவினர் புதுமலர்தெரிதரு கருநெய்தல் விரிவனகழி, தீதுறுதிறமறுகெனநனிமுனிவன துணையொடு பிணைவனதுறை, மூதுறுமொழிகளி நுரைதருதிரையொடு கடிதொடர் புடையதுகடல். இவைநான்கும் அராகம். கொடுந்திறலுடையன சுறவேறுகோட்படதனல், இடுங்கழியிராவருதல் வேண்டாவென்றிசைத்திலமோ, கருநிறத்துறுதொழிற் கராம்பெரிதுடைமையால், இருணிறத்தொருகானி விராவாரலென்றிலமோ இவைநாற்சீரடியிரண் டம்போதரங்கம். கனைந்தொழிந்தன்றாற் பெண்ணரசி கலத்தகையே, அஞ்சலுமொழிந்தன் றாற் றொடித்தோளி தடங்கண்ணே, அரற்றொடுசழிந்தன்று லாசிருளுபாபிழைக்கே, நயப்பொடுகழிந்தன்று னனவது நன்னுதற்கே. இவைநாற்சீரோரடி நான்கம்போதரங்கம். அத்திறத்தாலசைந்தனதோள். அலர்தற்கு

மெலிந்தனகண். பொய்த்துறையாற் புலர்ந்தது முகம். பொன்னிறத்தாற்
போர்த்தனமுலை. அழலினலைசைந்தது நகை. அணியினலொசிந்ததிடை.
குழலினணியிர்ந்தது முடி. குறையினற்கோடிற்று பிறை. இவைமுச்சீரோ
ரடி யெட்டம்போதரங்கம். உட்கொண்டசைத்தொருபால் உலகறி
வலத்தொருபால். கட்கொண்டறுளித்தொருபால். கழிவெய்தும்படித்தொ
ருபால். பரிவுறூஉந்தகைத்தொருபால். படிவுறூஉம்பசப்பொருபால். இ
ரவுறூஉந்துயரொருபால், இளிவந்தவெளிற்றொருபால். மெலிவுறூஉந்த
கையொருபால். விளர்ப்புவந்தடைநதொருபால். பொலிவுசென்றகன்று
ருபால். பொறைவந்துகூர்ந்தொருபால். காதலிற்கதிர்பபொருபால். கட்ட
டாத்துயரொருபால், ஏதில்சென்றணைந்தொருபால். இயனணிற்செறிவொ
ருபால். இவை யிருசீரோரடிப் பதினாறம்போதரங்கம், எனவாங்கு. தனிச்
சொல். இன்னதிவ்வழங்க மித்திறமிவ னலை, மென்னவுமுன்னாட் டென்று
யாகிற், கலந்தவணிலைமை யாயினுநலந்தகக், கிளையொடுகெழீஇய தளைய
விழ்கோதையைக், கற்பொடுகாணியயாமே, பொற்பொடுபொலிகநும் ட
ணர்சசிதானே,, இது சுரிதகம். ஆறுறுப்புங் குறைவின்றிவந்த வண்ணக
வொத்தாழிசைக்கலிப்பா. என்னை. "அச்சொலப்பட்ட வுறுப்போடராகவ
டி, வைத்தநடையது வண்ணகமாகும்,, என்றார் காக்கைபாடினியார். வா
ன்றளை தட் டிசைதனதாகியும் வெண்பாவியைந்தும், விசையறுசிந்தடியயு
விறு மாய்விடின்வெண்கலியே-எ-து. கலித்தளை தட்டுக்கலியோசை தழு
வியும், வெண்டளைதட்டு வெள்ளோசைதழுவியும்வந்து ஈற்றடிமுச்சீரா
னிறுமெனினது வெண்கலிப்பாவென்றும், கலிவெண்பாவென்றும வழங்
கப்படும். எ-று. இன்பான்மொழியாய். எ-து. மகடூஉமுன்னிலை. விசைய
றுசிந்தடியென்று சிறப்பித்தவதனால், வேற்றுத்தளைதட் டுருகிவரவும்பெ
றும். வ - று. வாளார்ந்தமழைத்தடங்கண் வனமுலைமேல்வம்பனுங்க
கோளார்ந்தபூணுகவ குழைபுரளக்கோட்டெருத்தின், மாலைதாழ்கூந்தலவ
ர் வரன்முறையான்வந்தேத்தச், சோலைதாழ்பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ்
சொன்முறையான், மனையறமூர் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவ
ர்க்கும், வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடு கட்டிவையுரைத்த, தொ
ன்மைசால் கழிகுணத்தெங் துறவரசைத்தொழுதேத்த, நன்மைசால் வீ
டெய்துமாறு,, இதுதன்றளையானுங், துள்ளலோசையானும், வந்தமையா
ன் வெண்கலிப்பா - "சுடர்த்தொடீஇகேளாய் தெருவில்யாமாடு, மணற்
சிற்றிற்காலிற் சிதையாவடர்ச்சியபொற், கோதைபரிந்துவரிப் பந்துகொ
ண்டோடி, நோதக்கசெயயுஞ் சிறுபட்டியேலோர்நாள், அன்னையும்யானு

நந்தேமாவில்லுளே, உண்ணுநீர்வேட்டே னெனவந்தாற்கன்னை, அடு
யர்ற்சிரகத்தால் வாக்கிசசுடரிழாய், உண்ணுநீரூட்டிவாவென்று னெ
யினுர், தன்னைப்புறியாது சென்றேன்மற்றென்னை, வளைமுன்கைபற்றி
நியத்தெருமந்திட்டன்னுயிவனொருவன் செய்ததுகாணென்றேனு, அ
ன்னையலறிப்படர்தரத்தன்னையான், உண்ணுநீர்விக்கினு னென்றேனுவன்
னையும், தன்னைப்புறம்பழித்து நீவமற்றென்னைக், கடைக்கண்ணாற்கொல்
வான்போ னேக்கிநகைக்கூட்டஞ், செய்தானகள்வன்மகன்,, இது வெ
ண்டளைதட்டு வெள்ளோசைதழுவி யொருபொருண்மேல் வந்தமையாற்
கலிவெண்பா. என்னை. "ஒருபொருணுதலிய வெள்ளடியியலாற், றிரிபி
ன்றிமுடிவது கலிவெண்பாட்டே,, என்றுா, தொல்காப்பியனுா. "வெண்
டளை தனறளை யென்றிருதன்மையின், வெண்பாவியலது வெண்கலியாகு
,, என்றுா காககைபாடினியார். இனிப்பிறதளை யான்வருமாறு. "வார்ம
ர்நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன், வார்மலர்த்தடங்கண்
ணுா வலைப்பட்டுவருந்தியவென, தார்வனாயகன்மார்பன் றனிமையை ய
றியுங்கொல், சீரமலிகொடியிடைசிறந்து,, இது ஆசிரியத்தளையானுந், தன்
றளையானும்வந்த வெண்கலிபபா. பிறவும்யாபபருங்கல விருத்தியுட்கண்டு
கொளக.

நின்றுவிளங்குமணிப்பசும்பொன்னிறமாறுறுப்பும்
ஒன்றியவண்ணகவொத்தாழிசைக்கலியோசைகுன்றுத்
துன்றியவாளார்மழையுஞ்சுடாத்தொடீஇயேர்மலரும்
என்றிவைவெண்கலிப்பாவிற்கிலக்கியமேந்திழையே.

இவ்வுரைச சூத்திரக்காரிகையின்வழியே அமபோதரங்கவொத்தா
ழிசைக்கலிப்பாவிற்கும், வண்ணகவொத்தாழிசைக் கலிபபாவிற்கும், வெ
ண்கலிப்பாவிற்குங்காட்டிய இலக்கியங்களை முதனினைத்துகொள்க. மிக

தரவேதரவிணைதாழிசைதாமுஞ்சிலபலவாய்
மரபேயியன்றுமயங்கியும்வருதனவாங்கமைத்தோள்
அரவேரகலல்குலமபேர்நெடுங்கண்வமபேறுகொங்கைக்
குரவேசமழகுழலாய்கொண்டவான்பெயாகொசசகமே.

இ-ள். தரவுகொச்சகக் கலிப்பாவும், தரவிணைக் கொசசகக்கலிப்
பாவும், சிஃறுழிசைக் கொச்சகக்கலிப்பாவும், பஃறுழிசைக்கொச்சகக்
கலிபபாவும், மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவு மாமாறுணர்த்து-ற்று. தர
வ தரவிணைதாழிசை தாமுஞ்சிலபலவாய் மரபேயியன்று மயங்கியும்வரு
ன்ன எ-து- ஒருதரவுவந்தும், இரண்டுதரவுவந்தும், தாழிசைசிலவந்து

ம், தாழிசைபலவந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போ... கம். த னிச்சொல், சுரிதகமென்னுமாறுறுப்பும், தம்முண்மயங்கியும், வெண்பா வினோடும். ஆசிரியத்தினோடுமயங்கியும், வருவனவெல்லாங் கொச்சகக் கலிப்பாவென்று பெயரிட்டுவழங்கப்படும். எ-று. சொல்லின்முடிவிற்றப் பொருண்முடித்தல். எ-து. தந்திரவுத்தியாகலின் தரவுகொச்சகமுதலா யின அப்பெயரானே வழங்கப்படுமெனக்கொள்க. ஒரு தரவு வந்தால் தர வுகொச்சகக்கலிப்பாவென்றும், தரவிரண்டாய்வந்தால் தரவிணைக்கொச் சகக்கலிப்பாவென்றும், சிலதாழிசைவந்தால் சிஃறாழிசைக்கொச்சகக்கலி ப்பாவென்றும், பலதாழிசைவந்தால் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா வென்றும், தம்முண்மயங்கியும், பிறவற்றினோடுமயங்கியும், வருவனவெ ல்லா மயங்கிசைக்கொச்சகக்கலிப்பாவென்றும், வழங்கப்படும், தாமுமெ ன்று மிகுத்துச்சொல்லியவதனால் தனிச்சொல்லும், சுரிதகமும், இடை யிடை வரப்பெறுமெனக்கொள்க. மரபேயியன்றுமென்று சிறப்பித்தவத னால், வரலாற்றுமுறைமையோடுங்கூட்டிக் கலியுறுப்பில் மிக்கும், குறை ந்தும, பிறழ்ந்தும, உறழ்ந்தும், மயங்கியும், கலிப்ுள்வாராவென்ற நேரீற் றியற்சீரும், ...டாகடுவாகிய வஞ்சியுரிச்சீரும், ஐஞ்சீரடியும், வந்தொத் தாழிசைக் கலிப்பாக்களோடொவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவென்று வழங்கப்படும். எ-று. வாய்கமைத்தோளா கு ழலாய் - எ-து. மகடூஉமுன்னிலை. கொண்டவால்பெயர் கொச்சகமே- எ-து. இறுதிவிளக்கெனக்கொள்க. வ-று. "செல்வப்போர- ஒளித்ததே,, எ-து. சுரிதகமில்லாத தரவு கொச்சகக்கலிப்பா. "குடநிலை- சென்றவா றே,, இது தனிச்சொல்லுஞ் சுரிதகமும், பெற்றுவந்ததரவு கொச்சகக்க லிப்பா. "வடிவுடைநெடுமுடி வானவர்க்குமவெலற்கரிய, கடிபடுநறும் பைந்தார்க்காவலர்க்குங்காவலனும், கொடிபடுமணிமாடக் கூடலார்கோ மானே இது தரவு-எனவாங்கு, தனிச்சொல், துணைமலர்த்தோ ளிவண் மெலியத் தொன்னலந் தொடர்ப்புண்டாங், கிணைமலர்த்தாருளுமே லி துவிதற்கோர்மாறென்று, துணைமலர்த்தடங்கண்ணார் துணையாகக்கருதா ரோ. இதுதரவு-அதனால். தனிச்சொல். செவ்வாய்ப்பேதையிவடிறந்தே வ்வாறுங்கொலிஃதெண்ணியவாறே,, இது இடையிடைத் தனிச்சொற் பெற்று ஆசிரியச்சுரிதகத்தாலிற்ற தரவிணைக்கொச்சகக்கலிப்பா. சுரிதக மில்லாதது வந்தவழிக்கண்டுகொள்க. "பருஉத்தடக்கைமதயானைப் பணை யெருத்தின்மிசைத்தோன்றிக், குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க்கு டைமன்னர் புடைசூழப், படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவுமறுகி னிடைக், கொடித்தானையிடைப்பொலிந்தான் கூடலார்கோமானே. இது. தரவு. ஆங்கொருசார், உச்சியார்க்கிறைவனாயுலகமெலாங் காத்தளிக்கும்,

பச்சையார்மணிப்பைம்பூட் புரந்தரனைப்பாவித்தார், வச்சிரங்காணாத காரணத்தான் மயங்கினரோ.—ஆங்கொருசார், அக்காலமணிநிரைகாத் தருவரையாற் பனிகவித்தது, வக்கிரனைவடிவழித்த மாயவனைப்பாவித்தார், சக்கரங்காணாத காரணத்தாற் சமழ்த்தனரோ—ஆங்கொருசார், மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங், கோல்கொண்ட சேவற்கொடியவனைப் பாவித்தார், வேல்கொண்டதின்மையால் விம்மிதராய் நின்றனரோ—இவை, மூன்றுந்தாழிசை. அஃதான்று- தனிச்சொல் கொடித்தேர்த்தோன்றலை கொற்றக்கோமான், நின்புகழொருவன் செம்பூட்சேஎ, யென்றுநனி யறிந்தனர் பலரேதானும், ஐவருமொருவனென் றறியலாகா, மைவரையானை மடங்காவென்றி, மன்னவன வாழியென்றேத்தத், தொன்னிலைவாழி திருவொடுமேம்பொலிந்தே,, இது சுரிதகம். இதுநான்கடித்தரவும், மூன்றடித்தாழிசை மூன்றும், சுரிதகமுமாய் இடையிடைத் தனிச்சொற்பெற்று நேரிசை யொத்தாழிசைக்கலிப்பாவிற் சிறிதுவேறுபட்டு வந்தமையாம் சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா. "தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்தெதிர்கண்டாங், குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னாட்கட், கண்மதிபொற் பிளவையினறிக் காரிகையை நிறைகவர்ந்து, பெண்மதியின் பிறந்தநும் பேரருளும் பிறிதாமோ. இதுதரவு. இளநலமிவள்வாட விரும்பொருட்குப்பிரிவாயேல். தளநலமுகைவெண்பற் றாழ்குழறளர்வாளோ—கனைகுழலிவள்வாடத் தரும்பொருட்குப்பிரிவாயேல், வனைநலமிவள்வாடி வருந்தியில்லிருப்பாளோ- அணிநலமிவள்வாட வரும்பொருட் குப்பிரிவாயேல். மணிநலமகிழ்மேனிமா சோமெழுவாளோ—நாமநீ பெயர்ந்தினியென்று நறுநுதலைப்பிரிவாயேல், ஓம்பிரியே னெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ. குன்றளித்ததிரடோளாய்கொ யாபுனத்திற்கூடியநாள், அன்றளித்தவருண்மொழியா லருளுவதுமருளாபோ - சில்லகலுழுடியக்காற் சிலம்பொலிச்சீறடிபரவிப், பலபகலுந்தலையளித்தபண்மொழியும் பழுதாமோ. இவையாறுந்தாழிசை. எனவாங்கு, தனிச்சொல். அரும்பெறலிவளினுந் தரும்பொருளதனினும், பெரும்பெரியன வெறுக்கையுமற்றே. அதனால், விழுமியநறுமதிவாழி, கெழுமியகாதலிற் றருமபொருள்சிறிதே,, இதுசுரிதகம். நாலடித்தரவும், இரண்டடித்தாழிசையாறும், தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும்பெற்று வந்த சிஃறாழிசைக கொச்சகக்கலிப்பா - "மணிகிளர்நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன், றணிகிளர்நெடுங்கடலுங் கானலுந்தோன்றுமால், நுரை நிவந்தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம், இரைநயந்திரைகூருமேன்றுஞ்சார் துறைவகேள். மலையெனமழையென மஞ்செனத்திரைதொகுகிக், கரைசேர்க்கற்றெனக் கழிதுவந்திசைப்பினும், விழுமியோர்

வெகுளிபோல் வேலாழியிறக்கலா, தெழுமுந்நீர்பரந்தொழுகு மேமஞ்சார் துறைவகேள். இவை இரண்டுந்தாவு. கொடிபுரையுநுசுப்பினாய் குழைக்கமர்ந்ததிருமுகத்தோள், தொடிநெகிழ்ந்ததோள்கண்டுந் துறவலனேயென்றியால். கண்கவருமணிப் பைம்பூட்கயில்கலைவய சிறுபூந்தோள், தெண்பனிநீருகக்கண்டுந் தெரியலனேயென்றியால். நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றுசிந்தபுருவத்தோள், பீர்பூத்தநுதல்கண்டும் பிரியலனேயென்றியால். கனைவரலாற்றிரு கரைபோற்கைநில்லா தூண்ணெகிழ்ந்து, நினையுமென்னிலைகண்டு நீங்கலனேயென்றியால். விழுசுடரினையயேபோல் விழுமநோய்பொறுக்கலாத், தாழுமென்னிலைகண்டுந் தாங்கலனேயென்றியால். கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணைபிறிதின்றிப், புலம்புமென் னிலைகண்டும் போகலனேயென்றியால். இவையாறுந்தாழிசை. அதனால், தனிச்சொல், அடும்பயிலிறும்பி னெடும்பணை மிசைதொறும், கொடும்புற மடலிடை யொடுங்கினகுருகு. செறிதருசெருவிடை யெறிதொழிலிளையவா, நெறிதருபுரவி யின்மறிதருந்திமில். அரசுடைநிரைபடை விரைசெறி முரசென, நுரைவருதிரையொடு கரைபொருகடல். அலங்கொளியவிர்சுட ரிலங்கொளிமலாதொறுங், கலந்தெறிகாலொடு புலம்பினபொழில். இவைநான்குமராகம். விடாஅதுகழலுமென் வெள்வளையுந்தவிர்ப்பாய்மன், கெடாஅதுபெருகுமென் கேண்மையுநிறுப்பாயோ, ஒல்லாதுகழலுமென் னொளிவளையுஞ்செறிப்பாய்மன், நில்லாதுபெருகுமென் னெஞ்சமுநிறுப்பாயோ. தாங்காதுகழலுமென் றகைவளையுந்தவிர்ப்பாய்மன், நீங்காதுபெருகுமென் னெஞ்சமுநிறுப்பாயோ. மறவாதவன்பினோன் மனனிற்குமாறுரையாய், துறவாத தமருடையேன் றுயர்தீருமாறுரையாய். காதலாமார்பின்றிக் காமக்குமருந்துரையாய். ஏதிலார்தலைசாய யானுய்யுமாறுரையாய். துணைபிரிந்தாரமாரபின்றி யின்பக்குமருந்துரையாய். துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீருமாறுரையாய. இவையாறுந்தாழிசை. எனவாங்கு, தனிச்சொல. பகைபோன்றதுதுறை. பரிவாயினகுறி. நகையிழந்ததுமுகம். நனிநாணிற்றுளம். தகையிழந்தனதோள். தலைசிறந்ததுதுயர். புகைபரந்ததுமெய். பொறையாயிற்றென்னுயிர். இவைஇருசீரோரடி யெட்டம்போதரங்கம். அதனால், தனிசசொல் இனையதுநினையால் அனையதுபொழுதால், நினையல்வாழி தோழிதொலையாப், பனியொடுகழிகவுண்கண், என்னொடுகழிகவித் துன்னியநோயே,, இதுசுரிதகம். இது தாவிரண்டும், தாழிசையாறும், தனிசசொல்லும, அராகம்நான்கும், பெயாத்தும ஆறுதாழிசையும, தனிசசொல்லும், இருசீரோரடியெட்டம்போதரங்க வுறுப்பும்பெற்று நான்கடி ஆசிரியச்சுரிதகத்தாற்றுக் கலிப்போதப்பட்ட ஆறுறுப்பும், மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும்,

டூழ்ந்தும மயங்கியும், வந்தவையான் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும்வந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா யாப்பருங்கலவிருத்தியுள் காமர்கடும்புனலென்னும் பழம்பாட்டிற் கண்டுகொள்க. இன்னுமரபே யியன்றுமென்று சிறப்பித்தவதனால், ஒருபோகுமுதலா வுடையனவற்றையெல்லாமிதனாற் பெயர்கொடுத்துக்கொச்சக்மென்று வழங்கப்படுமெனக்கொள்க. என்னை. "எருததியலின்றி யிடைநிலைபெற்று, மிடைநிலையின்றி யெருத்துடைத்தாயு, மெருத்தமிரட்டித் திடைநிலைபெற்று, மிடையதிரட்டித் தெருத்துடைத்தாயு, மிடையுமெருத்து மிரட்டுறவந்து, மெருத்தமிரட்டித் திடைநிலையாறு, யடக்கியல்காறு மனமர்தவுறுப்பிற், கிடந்த முறைமையிற் கிழமையதாயுந், தரவொடுதாழிசை யமபோதரங்க, மடக்கியல்போகிய லென்றிவையெல்லா, முறைதடுமாற மொழிந்தவையின்றி, யிடையிடைவெண்பா சிலபலசேர்ந்து, மற்றும் பிறபிறவொப்புறுப்பில்லன, கொச்சகமென்னுங் குறிப்பினவாகும்,, என்றார் காக்கைபாடினியார். "தரவேதரவிணை தாழிசைசிலபல, வரன்முறைபிறழ வயற்பாமயங்கியுர், தனிசசொற்பலவா யிடையிடை நடந்து, மொத்தாழிசைககலி யுறுப்பினிற்பிறழ, வைத்தமுறையான் வண்ணகவிறுவாய், மயங்கிவந்தனவு மியங்குநெறிமுறைமையிற், கொச்சகக்கலியெனக் கூறினர்புலவர்,, "ஒதப்பட்ட வுறுப்புவகையெல்லா, மேதப்படாயற் கலிக்கியல்பெய்தி, மிக்குங்குறைந்தும் பிறழ்ந்துமுறழ்ந்தும், வண்ணமுமடியுந் தொடையுமயங்கியு, மடக்கியலந்த தொடுத்தனபல்கியுங், கலிவயிற்கடிந்த சீரிடைமிடைந்துங், நாற்சீரிறந்த சீரொடுசிவணியு, மூச்சீரிருசீ ரம்போதரங்க, மச்சீர்முடிவிடை யழிவிலதழுவியுங், கொச்சகக்கலியெனக் கூறவும்படுமே,, கூறியவுறுப்பிற் குறைபாடின்றித், தேறியவிரண்டிற் றேவபாணியுந், தரவேயொழியினுந் தாழிசையொழியினு, மிருவகைமுத்திறத் தெண்ணேநீங்கினு, மொருபோகென்ப வுணர்ந்திசினோரே,, என்றாராகலின் "தரவின்றாகித் தாழிசைபெற்றுர், தாழிசையின்றித் தரவுடைத்தாகியு, மெண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியு, மடக்கியலின்றி யடிநிமிர்ந்தொழுகியும், யாப்பினும்பொருளினும் வேற்றுமையுடையது, கொசசகவொருபோ காகுமென்ப,, என்றார் தொல்காப்பியனார். இவற்றிற் கிலக்கியம் யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க.

குடநிலைத்தண்செல்வப்போர்க்கதக்கண்ணன்றரவுகுன்று
வடிவுடையாருந்தரவிணைமன்னும்பரூஉத்தடக்கை
இடமிகவாஞ்சிஃறாழிசைதண்மதியேர்டலவாய்

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே கொச்சகக்கலிப்பாக்கட்குக்காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௩௩.)

அடிவரையின்றியளவொத்துமந்தடிநீண்டிசைப்பிற்
கடிதலில்லாக்கலித்தாழிசையாகுங்கலித்துறையே
நெடிலடிநான்காய்நிகழ்வதுநேரடியீரிரண்டாய்
விடினதுவாகும்விருத்தந்திருத்தகுமெல்லியலே.

இ-கை. கலித்தாழிசையும், கலித்துறையும், கலிவிருத்தமுமா மாறுணர்த்து-ற்று. அடிவரையின்றி யளவொத்துமந்தடிநீண்டிசைப்பிற் கடிதலில்லாக் கலித்தாழிசையாகும். எ-து. இரண்டடியும், பலவடியும்வந்து ஈற்றடிமிக்கு, அல்லாதவடி தம்முளொத்தும், ஒவ்வாதும்வருவது கலித்தாழிசை. எ-று. கடிதலில்லாக் கலித்தாழிசையென்று சிறப்பித்தவதனால், ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருவது சிறப்புடைத்து. தனியேயவரப்பெறுமாயினுமெனக்கொள்க. வ-று. "கொய்தினைகாததுங் குளவியடுக்கத்தெம், பொய்தற்சிறுகுடி வாரனீயை யாலம்வேண்டின். ஆய்தினைகாந்து மருவியடுக்கத்தெம் மாசில்சிறுகுடி வாரனீயைய நலம்வேண்டின். மென்றினைகாத்து மிகுபூங்கமழ்சோலைக், குன்றச்சிறுகுடில் வாரனீயைய நலம்வேண்டின்,, இவையிரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் கலித்தாழிசை. "வாள்வரிவேங்கை வழங்குஞ் சிறுநெறியெங், கேள்வரும்போதினெழால்வாழிவெண்டிங்காள் கேள்வரும்போதி னெழாலாய்க்குறுமியரோ, நீள்வரிநாகத் தெயிறேவாழிவெண்டிங்காள்,, இஃது ஈற்றடிமிக்கு ஏனையடிமூன்று மொத்துவந்தகலித்தாழிசை. அளவொத்து மென்றவும்மையால் ஈற்றடிமிக்கு ஏனையடியொவ்வாது வரப்பெறுமெனவுங்கொள்க. "பூண்டபறையறையப் பூதமருள, நீண்டசடையானாடுமே, நீண்டசடையானாடுமென்ப, மாண்டசாயன் மலைமகள்காணவேகாணவே,, இஃதீற்றடிமிக்கு இரண்டாமடிகுறைந்து முதலடியும், மூன்றாமடியும், ஒத்துவந்தகலித்தாழிசை. சீர்வரையறுத்திலாமையால் எனைத்துச்சீரானுமடியாய் வரப்பெறுமெனக்கொள்க. என்னை. "அடியெனைத்தாகியு மொத்துவந்தளவிற், கடையடிமிகுவது கலித்தாழிசையே,, என்பதியாப்பருங்கலம். "அந்தடிமிக்குச் சிலபலவாயடி, தந்தமுளொப்பன தாழிசையாகும்,, என்றாராகலின். கலித்துறையே நெடிலடிநான்காய்நிகழ்வது. எ-து. ஐஞ்சீரடிநான்காய்வருவது கலித்துறை. எ-று. வ-று. "யானுந்தோழியு மாயமுமாடுந்துறைநண்ணித், தானுந்தேரும்பாகனும் வந்தென்னலனுண்டான், தேனும்பாலும் போல்வனசொல்லிப் பிரிவானேல், கானும்புள்ளு நைந்தையுமெல்லாங்கரியன்றே,, "வென்று

வினையின் நீங்கிநின்றார்,, இவைநெடிலடிநான்காய் வந்தகலித்துறை. என்னை "நெடிலடிநான்காய் நிகழ்வதுகலித்துறை,, என்பதியாப்பருங்கலம். "ஐஞ்சீரடியி னடித்தொகைநான்மையோ, டெஞ்சாநியன்றன வெல்லாங் கலித்துறை,, என்றாராகலின். நேரடியிரிரண்டாய் விடினதுவாகும்விருத்தம் என்- நாற்சீரடி நான்காய்வருவது கலிவிருத்தம். எ-று. திருத்தகு மேல்லியலே - எ-து-மகடூஉமுன்னிலை. வ-று. "வேய்தலைநீடிய வெள்ளி விலங்கலில், ஆய்தலிலொண்சுட ராழியிளன்றமர், வாய்தலினின்றனர் வந்தனர்மன்னர்முன்; நீதலைசென்றுரை நீள்கடைகாப்போய்.,,—"தேம்ப முதினிய-தவளமாடமே,, என்னை "அளவடிநான்கின கலிவிருத்தமே,, என்பதியாப்பருங்கலம்.

கொய்தினையாய்தினைமென்றினைவாள்வரிபூண்டபறை
எய்தியதாழிசையானும்வென்றானுங்கலித்துறையே
மைமதிகமோதிவரிநெடுங்கண்ணவனமுலையாய்
மெய்தருவேய்தலைதேம்பழுத்தென்பவிருத்தங்களே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே கலிப்பாவினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௰௩)

குறளடிநான்கினமூன்றொருதாழிசைகோதில்வஞ்சித்
துறையொருவாதுதனிவருமாய்விடிற்சிந்தடிநான்
குறைதருகாலைமுதேவிருத்தந்தனிச்சொல்வந்து
மறைதலில்வாரத்தினுலிறும்வஞ்சிவஞ்சிக்கொடியே.

இ-கை. வஞ்சித்தாழிசையும், வஞ்சித்துறையும், வஞ்சிவிருத்தமும், வஞ்சிப்பாவிற் கிருமாறுமுணர்த்து-ற்று. குறளடிநான்கின மூன்றொரு தாழிசைகோதில் - எ-து-இருசீரடிநான்காய் மூன்றுசெய்யுள் ஒருபொருண்மே லடுக்கிவருவன வஞ்சித்தாழிசையாம். எ - று. கோதிலென்று மிகுத்துச்சொல்லியவதனால், அவையொருபொருண்மேல் மூன்றடுக்கியல் லது வாராவெனக்கொள்க. வ-று. "மடப்பிடியை மதவேழம், தடக்கையான் வெயின்மறைக்கும், இடைச்சுரமிறந்தார்க்கே, நடக்குமென்மனனேகாண். பேடையைஇருப்போத்துத், தோகையான் வெயின்மறைக்கும் காடகமிறந்தார்க்கே ஓடுமென்மனனேகாண். இரும்பிடியையிகல்வேழம் பெருங்கையான் வெயின்மறைக்கும், அருஞ்சுரமிறந்தார்க்கே, விரும்பு மென்மனனேகாண்,, இவை இருசீரடிநான்காய் ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்தமையால் வஞ்சித்தாழிசை. வஞ்சித்துறை யொருவாது தனி வருமாய்விடின் - எ-து - இருசீரடிநான்காய் ஒருபொருண்மேலொன்றாய்

வருவது வஞ்சித்துறை, எ-று. வ-று. "மைசிறந்தனமணிவரை, கைசிறந்தனகாந்தளும், பொய்சிறந்தனர்காதலர், மெய்சிறந்திலர்விளங்கிழாய்,, இது குறளடிநான்காய் ஒருபொருண்மேற்றனியே வந்தமையான் வஞ்சித்துறை. என்னை. "குறளடிநான்மையிற் கோள்வமூன்றாய், வருவனவஞ்சித் தாழிசைதனிவரிற், றுறையெனமொழிப துணிந்திசிறோரே. என்றார்க ளின் சிந்தடிநான்கறை தருங்காலவிருத்தம்-எ-து. முச்சீரடி நான்காய்வருவது வஞ்சிவிருத்தம்-எ-று. வ-று. "சோலையார்ந்தசுரத்திடைக், காலையார் கழலார்ப்பவும், மாலைமார்பன் வருமாயின், நீலவுண்கணிவள்வாழுமே,, இது சிந்தடிநான்காய் வந்தமையான் வஞ்சிவிருத்தம். என்னை "சிந்தடி நான்காய் வருவனவஞ்சி, யெஞ்சாவிருத்த மென்மனூர்புலவர்,, என்பதி யாப்பருங்கலம். தனிச்சொல்வந்து மறைதலில் வாரததினுலிறும்வஞ்சி- எ-து-குறளடிவஞ்சிப்பாவும், சிந்தடிவஞ்சிப்பாவும், தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தா லிறும்-எ-று. மறைதலில்வாரமென்று சிறப்பித்தவதனல், வஞ்சிப்பா ஆசிரியசுரிதகத்தா லிறுவதல்லது வெள்ளைச்சுரிதகத்தா லிறப்பெருதெனக்கொள்க. வ-று. (பூந்தாமரைஎன்னும்) குறளடிவஞ்சிப்பாவுமென்னுந் தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தா லிற்றவாறும். "கொடிவாலனகுருநிறத்தன குறுந்தாளன, வடிவாளெயிற்றழ லுளையன வள்ளுகிரன, பணையெருத்தி னிணையரிமானணையேறித், துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனுகி, எயினடு வணிநிதிருந்தெல்லோர்க்கும், பயில்படுவினை பத்திமையிற்செப்பினேன், புணையெனத், திருவுறு திருந்தடி நிசைதொழ, விரிவுறுநாற்கதி வீடுநனியெளிதே,, இது சிந்தடி வஞ்சிப்பா. புணையென்னுந் தனிசசொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தா லிற்றவாறுங்கண்டுகொள்க. என்னை "தூங்கலிசையன வஞ்சிமற்றவை, யாய்ந்த தனிச்சொலோ டகவலினிறுமே என்பதியாப்பருங்கலம்,, அமுதே என்பதும், வஞ்சிக்கொடியே என்பதும், மகடூஉமுன்னிலை.

மடப்பிடிபேடையிருட்பிடிவஞ்சியின்றாழிசையாம்
வடுப்புரைகண்ணினல்லாய்மைசிறந்தன வான்றுறையாம்
தடப்பெருஞ்சோலைவிருத்தமதாகுந்தயங்குவஞ்சிக்
கொடித்தொடிபூந்தாமரைகொடிவர்லனுதாரணமே,

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே வஞ்சிப்பாவினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௰௪)

பண்பார்புறநிலைபாங்குடைக்கைக்கிளைவாயுறைவாழ்த்
தொண்பாசசெவியறிவென்றிப்பொருண்மிசைபூனமில்லா

வெண்பாமுதல்வந்தகலிப்பின்னாகவிளையுமென்றால்
வண்பான்மொழிமடவாய்மருட்பாவென்னுமவ்வையகமே.

இ-ன். மருட்பாவாமாறுணர்த்து-ற்று, இதன்பொழிப்பு, புறநிலைவாழ்த்தும், கைக்கிளையும், வாயுறைவாழ்த்தும், செவியறிவுறூஉவென்னும், நான்குபொருண்மேலும், வெண்பாமுதலாக ஆசிரியமிறுகவருமெனின் அதனைமருட்பாவென்று வழங்குவர் புலவர்- எ-று. வண்பான்மொழிமடவாய-எ-து. மகடூஉமுன்னிலை. என்னை "வெள்ளைமுதலா வாசிரியமிறுதி, கொள்ளத்தொடுப்பது மருட்பாவாகும்,, என்றாராகலின். வ-று. "தெனறவிடை போழ்ந்து தேனார்நறுமுல்லை, முன்றின்முகைவிரிய முதகனீத் தண்கோனார், குன்றமர்ந்த கொல்லேறுணிற புறங்காப்ப, என்றும் தீராநலமிற்றேவர், சீசால்செல்வமொடு பொலிமதிசிறந்தே,, இது வழிபடுதெய்வநிற் புறங்காப்பப் பழிதீரசெல்வமொ டொருகாலைக் கொருகாற் சிறந்து பொலிமினென்றமையாற் புறநிலைவாழ்த்து மருட்பா-என்னை "வழிபடுதெய்வநிற் புறங்காப்பப், பழிதீர்செல்வமொடு வழிவழிசிறந்து,பொலிமினென்னும் புறநிலைவாழ்த்தே, கலிநிலைவகையும் வஞ்சியும்பெறாஅ,, என்றார் தொல்காப்பியனார்.—"திருநுதல்வேர் வரும்புந்தேங்கோதைவாடும், இருநிலஞ்சேவடியுந்தோயும், அரிபரந்த, சேயிதழுண்கணுமிமைக்கும், ஆதுமறறிவ ளகலிடத்தணங்கே,, இது துணிதலை நுதலிய வொருதலைக்காம மாதலிற் கைக்கிளைமருட்பா. என்னை "காட்சிமுதலாக் கலவியி னெருங்கி, வேட்கையிற்புலம்புதல் கைக்கிளையதுதான், கேட்போரில்லாக் கிளவிகள்பெறுமே,, என்றாராகலின். "பலமுறையுமோம்பப் படுவனகேண்மின், சொலமுறைக்கட்டோன்றிச் சூடாமணித்தேனார்ந்து, நிலமுறையினுண்ட நிகரில்லார்மாட்டுஞ், சிலமுறையல்லது செல்வங்கணில்லா, இலங்குமெறிபடையு மாற்றலுமன்பும, கலந்ததங்கல்வியுந் தோற்றமுமேனைப், பொலன்செயபூணகலனே டிவ்வாறனைலும், விலங்கிவருங்கூற்றை விலக்கலுமாகா, அனைதடாதனி யிருங்காண்மா, நினைத்தக்க, கூறியவெமமொழி பிழையாது, தேறி நீரொழுகிற் சென்றுபயன்றருமே,, இது மெய்பபொருள் சொன்னமையால் வாயுறைவாழ்த்துமருட்பா. என்னை "வாயுறைவாழ்த்தே வயங்கநாடின், வேம்புங்கடுவும் போலவெஞ்சொற, றாங்குதலின்றி வழிநனிபயக்குமென, றோம்படைக்கிளவியின் வாயுறுத்தன்றே,, என்றார் தொல்காப்பியனார். "பல்யானைமன்னர்முருங் கவமருழந்து, சொல்யானைத்தேரொடு கோட் டந்துநல்ல, தலையாலங்கானம் பொலியத்தொலையாப், படுகளம்பாடுபுக் காற்றிப்பகைஞர், அடுகளம்

வேட்டோன் மருகவடுதிறல், ஆலிமிர்தோட்பெரு வழுதியெஞ்ஞான்று
ம், ஈரமுடையையா யென்வாய்ச சொற்கேட்டி, உடையவுழவனை பேஞ்
சனுங்கக்கொண்டு, வருநாலுழவர்க்கு வேளாண்மைசெய்யல், மழவிழை
க்கும்வலைக் காணிதியிட்டம், காட்டுமமைச்சனை யாற்றத்தெளியல், அ
மைத்தவரும் பொருளாறன்றிவௌவல், இனத்தைப்பெரும் பொருளா
சையாற்சென்று, மன்றமாறுக வகழாதியென்றும், மறப்புறமாக மதுளரய
ரோய்பும், அறப்புறமாசைப் பட்டேற்கவறத்தால், அவையார்கொடோந்
திருத்திநலையாக, நட்டார்குழிசி சிதையாதியொட்டார், செவிபுதைக்கு
ந்தீய கடுஞ்சொற்கவியுடைத்தாய்க், கற்றார்ககிணுகிக் கல்லார்ககடிக்
தொழுகிச், செற்றார்சசெறுத்துநிற் சேர்ந்தாரையாக்குதி, அற்றமிந்த வ
றிவினுய், மற்றும், இவையிவைவீயா தொழுகுநிலையாப், பொருகடலோ
டை நிலமகள், ஒருகுடைநீழற் றுஞ்சுவண்மனனே,, இது வியப்பின்றி
உயர்ந்தோர்கண் வியந்தொழுகுதல் கடனெனவரசாக் குரைத்தமையாற்
செவியறிவுறூஉமருட்பா. என்னை "செவியுறைதானே, பொங்குதலின்றி
ப் புரையோர்நாப்பண், அவிதல்கடனெனச செவியுறுத்தற்றே. என்றார்
தொல்காப்பியனார்.—என்றிப்பொருண்மிசையென்று மிகுத்துச்சொல்லி
யவதனுல், இந்நான்கு பொருண்மேலுமன்றி மருட்பா வரப்பெறுமெனக
கொளக. என்னை "புறநிலைவாயுறை செவியறிவுறூஉவெனத், திறநிலை மூ
ன்றுந் திண்ணிதிற்றெரியின், வெண்பாவியலினு மாசிரியவியலினும், ப
ண்புறமுடியும் பாவினவென்ப,, என்றார் தொல்காப்பியனார். பண்டார்புற
நிலை யென்றும், ஒண்பாச்செவியறிவென்றுஞ் சிறப்பித்தவதனுல்—புறநி
லைவாழ்த்தும், வாயுறைவாழ்த்தும், செவியறிவுறூஉம் இவ்வாறன்றி வெ
ண்பாவேயாயும், ஆசிரியமேயாயும் வரப்பெறும். கலியும், வஞ்சியுமாய்,
வரப்பெறுமெனக்கொள்க.—என்னை "கலிநிலைவகையும் வஞ்சியும்பெறூஉ,
வாயுறைவாழ்த்தே யவையடக்கியலே, செவியறிவுறூஉமென் றவையுமனை
னே,, என்றாராகலின். பாங்குடைக கைக்கிளையென்று சிறப்பித்தவதனு
ல், கைக்கிளையெல்லாப்பாவானும் வரப்பெறும், மருட்பாவேயாய் வருக
வெனவும் யாப்புறவில்லையென்றும், கைக்கிளை வெண்பாமுதலாக வாசி
ரியமீறுகவரும்வழி ஆசிரியவடி யிரண்டேயாய் அவற்றுள் ஈற்றயலடி
முச்சீராய்வருமென்றும், வெண்பாவடியும், ஆசிரியவடியும், ஒத்துவருவ
ன சமநிலைமருட்பாவென்றும், ஒவ்வாதன வியனிலைமருட் பாவென்றார்,
வழங்கப்படும். ஊனமில்லா வெண்பாவென்று சிறப்பித்தவதனுல் வேற்
றுவண்ணம் விரவாதுவெள்ளை வண்ணமெல்லா வண்ணத்துள்ளுஞ் சிற
ப்புடைத்தாய், ழுங்கலமரபிற்றுய், அவ்வாறே வேற்றுத்தளையும், அடிபு

,சீரும், விரவாமையால், எல்லாப்பாவினுள்ளும் வெண்பாசிறப்புடைத்தென்று முன்வைக்கப்பட்டதென்பது அறிவிக்கதற்கு வேண்டப்பட்டது "வேதவாய்மேன்மகனும் வேந்தன்மடமகளும், நீதியாற்சேர்ந்து நிகழ்ந்தசெங்குலம்போல், ஆதிசால்பாவு மரசர்வியன்பாவும், ஓதியவாறேத மருட்பாவாபோக்கிற்றே,, பண்ணுந்திறமும்போற் பாவுமினமுமாய், வண்ணவிகற்ப வகைமையாற், பண்ணின், திறம்விளரிக்கில்லதுபோற் செப்பலகவல், இசைமருட்கு மில்லையினம்.,, இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

தென்றலிடையுந்திருநுதல்வேர்வரும்பன்றுறையென்
றொன்றியபாவும்பல்யானையுமென்பவொணபோதணைந்த
பொனறிகமோதிபுறநிலைகைக்கிளைவாயுறைவாழ்த்
தென்றிவற்றிற்குஞ்செவியறிவிற்குமிலக்கியமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே மருட்பாநான்கிற்குங்காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௰௫)

வெண்பாவளப்படவீரடியொன்றுடனேரிசையும்
கண்பானல்போன்மயிலந்தமின்மூன்றுங்கடைதருக்கி
நண்பார்தரவொன்றனைச்சுரவேயடியோமிருறள்
பண்பார்புறநிலைசெய்யுளியலென்பபாவலரே.

இரண்டாவது - செய்யுளியல்
முற்றிற்று.

மூன்றாவது

ஒழிபியல்

சீருந்தளையுஞ்சிதைபிற்சிறியஇஉஅளபோ
டாருமறிவரலகுபெருமையசாரனைவேல்
ஒருங்குறிலியலொற்றளபாய்விடினேரலகாம்
வாரும்வடமுந்திகழுமுகிழ்முலைவாணுதலே.

(என்பது காரிகை.)

இவ்வியலென்ன பெயர்த்தோவெனின், உறுப்பியலுள்ளும், செய்யுளியலுள்ளும், சொல்லாதொழிந்தவைகளை புணர்த்தினமையால், ஒழி

பியலென்னும்பெயர்த்து. இவ்வியலுள் - இக்காரிகை யென்னுதலிற்றோ
வெனின். ஒருசாரெழுத்துகட் கெய்தியதோ ரிலக்கணமுணர்த்து - ற்று.
சீருந்தளையுஞ் சிதையிற்சிறியஇஉ அளபோடாரு மறிவரலகுபெறுமை.
எ-து. சீருந்தளையுங் கெடவந்தவிடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுக
ரமும, உயிரளபெடையும், அலகுகாரியம்பெறு எ-று. ஒற்றளபாய்விடி
னே ரலகாமென்றுரைத்தமையால, ஈண்டுயிரளபெடை கொள்ளப்பட்ட
து. ஆருமறிவரொன்று மிகுத்துச்சொல்லியவதனால். குற்றியலிகரமும்,
குற்றியலுகரமும், ஒற்றியல்பினவாயவிற்றும், உயிரளபெடைகள் நெட்
டெழுத்தியல்பினவாயவிற்றும், அலகிடுமிடத்தெனகொளக. எனவே
எதிரது மறுத்தலென்னும் இலக்கணத்தாற் சீருந்தளையுஞ் சிதைந்தவிற்பு
ழிச்சிறியஇஉ அளபோ டாருமறிவரலகுபெறு மென்பதாயிற்று. இன்னு
ம், ஆருமறிவரொன்று மிகுத்துச்சொல்லியவதனால, அவை யலகுகாரியம்
பெறும்போது குற்றியலிகரமும், குற்றியலுகரமும, குற்றெழுத்தியல்பத
தவாம். உயிரளபெடை யலகுகாரியம்பெறுமாறு தங்காரிகையுட் போக
கிச்சொல்லுதும். வ-று சிறுநன்றியின்றிவர்க்கி யாஞ்செய்தநன்றனைப்,
பெறுநன்றியினனும் பெரிதென், றுறுநன்றி, தானவாயச்செய்வதூஉந் தான
மன்றென்பவே, வானவாமுள்ளத்தவர்,, இதனுள், இன்றிவர்க்கியாமென்
புழி, குற்றியலிகரம்வந்து வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீராயிற்று. வெண்
பாவினுள் வஞ்சியுரிச்சீர் விரவுமெனனும், ஒத்தில்லாமைபால், வெண்பா
வழிய நிற்குமாதலால், ஈண்டுக்குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால்
அலகுபெறுதென்று களையச்சீர்சிதையாதாம். "குழலினிதியாழினி தென்
பதம்மக்கள், மழலைச்சொற்கேளாதவர்.—அருளல்லதியாதெனிற் கொல்
லாமைகோறல், பொருளல்ல தவ்வூன்றினல்,, இவற்றுள், குழலினிதியா
ழினிதெனபுழி, ஆசிரியத்தளையும், அருளல்லதியாதெனில, என்புழிக
கலித்தளையுந்தட்டு வெண்டளைத்தன்மை குன்றிபபோஞ்சீர் கனிபுளிற்புல்
லாத மற்றளையென்னும், இலக்கணத்தோடும, வெண்டளையுட்பிறத்தளை வா
ராவலலன, வெல்லாத்தளையு மயங்கியுமவழங்கும். என்னு மிலக்கணத்
தோடும், மாறுகொள்ளுமாதலால், ஈண்டுக்குற்றியலிகரத்தை இவ்விலக
கணத்தால் அலகுபெறுதென்றுகளையச் சீருந்தளையும் சிதையாவாம். இ
னிக்குற்றிய லுகரத்திற்குச்சொல்லுமாறு. "சென்றுகொடுநீடு குருதிபா
யவும, சென்றுசொடுநீடு செழுமலைபொருவன, வென்றுகொடுநீடு விறல்
வேழம, என்றுழுமடுநீடு பிடியுளபோலும். அதனால், இன்னடிடையிரவின
ணெறிவரின், வண்டின்கோதை யுயிர்வாழலளே,, இவ்விருசீரடி வஞ்
சிப்பாவினுட் குற்றுகரம்வந்து ஐந்தசைச்சீரும், ஆறசைச்சீருமாயின
இவ்வாறு வருகவென்னும் ஒத்தில்லாமையிற் குற்றுகரத்தை இவ்விலக்

கணத்தால் அலகுபெறுமென்றுகளையச் சீருந்தளையுஞ் சிதையாவாம். இனி உயிரளபெடைக்குச் சொல்லுமாறு. "பல்லுக்குத்தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள், சொல்லுக்குத்தோற்றின்னந் தோன்றினவால், நெல்லுக்கு, நூறேஒநூ றென்பாளுடங்கிடைக்கு மேனமுலைக்குப், பாறேறுமாலன் றளந்தமண்,, இதனுள் நூறேஒநூறென்புழிப் பண்டமாற்றின்கண் உயிரளபெடை யநுகரணம்வந்து வெண்பாவினுள் நாலசைச்சீராயிற்று. அவ்வாறு வருகவென்னும் ஓத்தில்லாமையால் இவ்வாறலகிட்டு உதாரணவாய்பாட்டால், ஓசையூட்டும்பொழுது ஓசையுண்ணாது செப்பலோசை பிழைத்து நிற்குமாதலால், ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தால் அலகுபெறுமென்று நெட்டெழுத்தே போலக்கொண்டு அலகிடச் சீருந்தளையுஞ் சிதையாவாம். வெ "இடைநுடங்கவீங் கோதைமென்றுழவாடகண், புடைபெயரப் போழ்வாய்திறந்து, கடைகடையில், உப்போஒவெனவுரைத்து மீள்வாளொளிமுறுவற், கொப்போநீ வேலியுலகு,, இதனுள் உப்போஒவென் புழிப்பண்டமாற்றின்கண் அளபெடை யநுகரணம்வந்து கலித்தளைதட்டு வெண்பாவழிய நிற்குமாதலின் ஈண்டுயிரளபெடையை, இவ்விலக்கணத்தால் அலகுபெறுமென்று நெட்டெழுத்தே போலக்கொண்டு அலகிடத்தளை சிதையாதாம். இனிக் குற்றியலிகர குற்றியலுகரங்கள், குற்றெழுத்தேபோலவின் றலகுபெறுமாறு. வெ "வந்து நீசேரினுயிர் வாழும்வாராக்கால், முந்தியாய்பெய்த வளைகழலும், முந்தியாங், கோளாளனேகண்டநங் கோல்குறிபாயின்னுமோர் நாளானேநாய்புணருமாறு,, இதனுள்-வந்துநீயென்புழிக் குற்றியலுகரமும், முந்தியாவென்புழிக் குற்றியலிகரமும், வந்து சீருந்தளையுந் திருந்திநிற்புழிக் குற்றெழுத்தின்பயத்தவாய் அலகுபெறுமாறு கண்டுகொள்க. என்னை "தளைசீர்வண்ணந் தாங்கெடவரினே, குறுகியவிகரமுங் குற்றியலுகரமு, மளபெடையாவியு மலகியல்பிலவே,, என்பதியாப்பருங்கலம். ஐகாரநைவேலோருங்குறிலியல்-எ-து-ஒன்றரைமாத்திரை யென்றோதப்பட்ட ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தேபோலக்கொண்டு அலகிடப்பெறும்- எ-று. ஒருமென்பதிடைச்சொல்-என்னை "குறுமையெழுத்தினியல்பேயை காரமொடுமைபி னீங்கியக்கால்,, என்றாராகலின். வ-று. வெ "அன்னையையானோவதவமாவணியிழாய், புன்னையையானோவன்புலந்து.—நடைக்குநிரையேறி நறுந்தார்வழுதி, அடைப்பையாய் கோறுவெனலும், அடைப்பையான், சுளாற்சிறுகோல் கொடுத்தான் றனபெறினும், கொள்ளாதியாங்காண்டலே.—கெண்டையைவென்ற கிளரொளியுண்கணுள், பண்டையளல்லள்படி,, என்னும் இவற்றுள்-ஐகாரக்குறுக்கம், குற்றெழுத்தேபோலக் குறிலோடும், நெடிலோடுங்கூடிநின்று நிரையசையாயினவாறும், த

ளியெனின்று நேரசையாயினவாறுங் கண்டுகொள்க. ஒற்றளபாய்விடினே
ரலகாம் - எ-து-ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்து நேரசையாம் - எ-று.
என்னை "ஆய்தமுமொற்று மளபெழின்புழி, வேறல்செய்துமவ் விதியின
வாகும்,, என்றார் காக்கைபாடினியார். அளபெழாதவிடத்து, ஒற்றுக்கள்
அலகுபெறாதென்பதாம என்னை "தனிநிலையொற்றிவை தாமலகியலா, வ
ளபெடையல்லாக் காலையான. ஈரொற்றாயினு மூவொற்றாயினு, மோரொ
ற்றியல வென்மனார்புலவர். என்றாராகலின். கார்க்கடல்-கார்ச்சேதம்-கதி
ர்ச்செந்நெல்-கடாய்க்கன்று-என, ஈரொற்றுடனிலையாய்நிற்பினுங் குற்
றெழுத்தின் பயத்தவாயலகு பெறாதென்பதூஉம், ஒற்றளபெழினும், மற்
றோரெழுத்தினோடுங்கூடி நிரையசையாகாதென்பதூஉம், பெறப்பட்டது;
வ-று. "நண்ண்டனென்னைக் கண்டுங்கேட்டும்—வெ கண்ண்கருவிளை கா
ர்முல்லைகூறியிறு, பொன்னர்பொறிசுணங்கு போழவாயிலவம்பு, மின்ன்
னுழைமருங்குன் மேதகுசாயலாள், என்ன்பிற மகளாமாறு—எஃஃகிலங்
கிய கையராயின் னுயிர், வெஃஃகுவார்க் கில்லைவீடு,, இவற்றுள்-ஒற்றும்,
ஆய்தமும்; அளபெழுந்து அலகுபெற்றவாறு கண்டுகொள்க. வாருர்வட
முந்தெழு முகிழ்முலைவாணுதலே எ-து-மடவுரைமுன்னிலை.

விட்டிசைத்தல்லான் முதற்கட்டனிக்குறினேரசையென்
றொட்டப்படாநதற் கொண்ணுதாரணமோசைகுன்று
நெட்டளபாய்விடினேர்நேர் நிரையோடு நேரசையாம்
இட்டத்தினுற்குறில்சேரினிலக்கியமோரிணைநவே.

இ-கை. ஒருசார் அசைகட்கெய்தியதோ ரிலக்கணமுணர்த்து - ற்று-
விட்டிசைத்தல்லான் முதற்கட்டனிக்குறி னேரசையென்றொட்டப்படா
து-எ-து-மேற்பொதுவகையாற் றனிக்குறினேரசை யென்றாராயினும், வி
ட்டிசைத்து நின்றவழியல்லது மொழிமுதற்கணின்ற தனிக்குற்றெழுத்
து நேரசையாமென றுடம்படப்பெறாது-எ-று. எனவே விட்டிசையாத
வழி மொழிமுதற்கட்டனிக் குறில்குறிலோடு நெடிலோடுங்கூடி நிரை
யசையாமென்பதாயிற்று. அதற்குண்ணுதாரணம்-எ து-வெ "உண்ணு
ணெளிதிரு ணைகுபுகழ்செய்யான், துன்னருங்கேளிர் துயர்களையான்,
கொன்னே, வழங்கான்பொருள் காத்திருப்பானேல் அஆ, இழந்தானெ
ன்றெண்ணப்படும்,, இதனுள்-அஆ-என்புழி யருவின்கட் குறிப்பாய் மொ
ழிமுதற்கணின்ற குற்றெழுத்து விட்டிசைத்து நேரசையாயினவாறும்,
அல்லாதவழி குறிலோடு நெடிலோடுங்கூடி நிரையசையாயினவாறுங் க
ண்டுகொள்க. வெ "வெறிகமழ்தண்புற வின்வீங்கிபுாளு, மறிமுலைபுண்

ணுமவேண்டிப், பதிமுன்னை, அஉமறியா வறிவிலிமகனே, கொறுமே ய வின்னுட்டைநீ.—அஅவனும இஇவனும உஉவனுங்கூடியக்கால், ஊஊவனை வெல்லாரிகல். இவற்றின்கட் டனிக்குறின் முதற்கண்ணிட்டிசைத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க. இவற்றுள் - அஉ மறியாவென்பது தற்சுட்டுக்குறிப்புச்சொல், நொவென்பது செயவெனெச்சத் திறுதி தொக்கு முதனிலைகுறுகிய பெயற்குறிப்புச்சொல். அஇஉஎ என்பவை சுட்டுவினாவாகிய குறிப்புச்சொல். ஒட்டப்பாவென்று மிகுத்துச்சொல்லியவதனுன், மொழிக்குமுன்றிடத்தும், விட்டிசைத்துவருங் குற்றெழுத்து நேரசையாமென்பதூஉம், விட்டிசைப்பதான் குறிப்பு வலசற்சுட்டுவினு சுட்டெனனு மைந்துமென்றுமென்பதூஉம், குற்றெழுத்து விட்டிசைத்துநின்றவிடத்து மற்றெழுத்தொடு கூடி நிரையசையாகா தென்பதூஉம் பெறப்பட்டது. என்னை "அஇஉஎஒ வைவரு நிய பற்றையவேழ் நெட்டெழுத்தாநேரப்படும்.,, இதனுன் மொழிக்கு முன்றிடத்தும் விட்டிசைத்துவருங் குற்றெழுத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க. இவைதற்சுட்டு ஏவல்வினாவிழிவோர்க.,, என்னை "அஉ குறிப்பே தற்சுட்டல்வழி, யாவையுந் தனிக்குறி லுறைசையாகா, என்மனார் புலவர். ஐசைகுன்று நெட்டளபாயவ்டிதொடைநர். எ-று. நெட்டெழுத்தளபெழுந்து வருமெனினும் இரண்டசையாக வைக்கப்படும். எ - று. ஐசைகுன்றுமென்று மிகுத்துச்சொல்லியவதனுல், முன்றுமாத்திரையின் மிகவுச்சரிப்பினு நேரசையாக வைக்கப்படுமென்க. நிலையொடு நேரசையாமிட்டத்தனுறுகுறிலசேரின எ-று. குற்றெழுத்தொடு புணர்ந்தநெட்டெழுத்து அளபெழுந்தாலவ்விரண்டனையுங்கூட்டி நிரையசையும் நேரசையுமாக வைக்கப்படும். எ-று. இலக்கியமேர்சிதைவே எ - து. "வளிசிதையவழாஅமெழாஅகின், சேடரிசிந்தியகண்,, இப்பாட்டு நேரோதற்கும் நிரைநேராதற்கும் இலக்கியமாமெனக. வளா- என நேரசையாயிற்று. அழாஅல், எழாஅ, எனநின்னிரையாயின. இட்டத்திறுமெனமிகுத்துச்சொலலியவதனுல, பின்னின்றகுறிலொடும், நெடிலொடுங்கூடி அளபெடை நிரையசையாகாதெனக்கொள்க. என்னை "தனிநிலையளபெடை நேரோநேரியற்றே, யிறுதிநிலையளபெட நிரைநேரியற்றே. என்றுரைத்தனர்.

மாஞ்சீரவியுட்புகாகலிப்பாவின்விளங்கனிவந்
தாஞ்சிரடையாவகவலகத்துமல்லாதவெல்லாந்
தாஞ்சீரியங்குந்தளையுமதேவெள்ளைதன்மைகுன்றிப்
போஞ்சீர்கனிபுகிற்புல்லாதயற்றளைபூண்டொழியே.

இ-ளை. சீருந்தளையுஞ் செய்யுளகத்து நிற்பதோர் முறைமையுணர்த்து-ற்று. மாஞ்சீர்கலியுட்புகா-எ-து- தேமாபுளிமாவென்னும், நேரீற்றியற்சீரிரண்டும், கலிப்பாவினுட்புகப்பெறா- எ-று. கலிப்பாவின் விளங்கனி வந்தாஞ்சீரடையா-எ-து. கருவிளங்கனி, கூவிளங்கனி, என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரிரண்டும், கலிப்பாவினுட்புகப்பெறா- எ-று. அகவலகத்தும். எ-து. ஆசிரியப்பாவினுள்ளும், கருவிளங்கனி, கூவிளங்கனியென்னு மிரண்டுசீரும் புகப்பெறா-எ-று. அல்லாதவெல்லாந் தாஞ்சீர மயங்கும்- எ-து- இவை யொழிந்தசீர்களெல்லாம் பாவினுள்ளும், பாவினத்துள்ளும்வந்து மயங்கப்பெறும்-எ-று. தளையுமதே-எ-து-எல்லாத்தளையும், எல்லாப்பாவினுள்ளும், எல்லாப் பாவினத்துள்ளும்வந்து மயங்கப்பெறும்-எ-று. வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ்சீர்கனிபுகில்- எ-து- எல்லாச்சீரும் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும், வந்து மயங்கப்பெறு மென்றாராயினும், வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவிற் புகப்பெறா புகிற்செப்பலோசையழிந்து வேறுபட்டு ஓசையையுண்ணாது கெடும்-எ-று. புல்லாதயற்றளை - எ-து- எல்லாத்தளையும், எல்லாப்பாவினுள்ளும், பாவினத்துள்ளும், வந்துமயங்கப்பெறுமென்றாராயினும், வெண்பாவில் இயற்சீர்வெண்டளையும், வெண்சீர்வெண்டளையுமல்லது வேற்றுத்தளைவிரவாது - எ - று. பூங்கொடியே - எ - து. மகடூஉமுன்னிலை. வ-று. "குடநிலைத்தண்புறவில் - சென்றவாறே,, என்னுந்தரவு கொச்சகக்கலிப்பாவில் நேரீற்றியற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது நிரையீற்றாசிரிய வுரிச்சீரும், வெண்பாவுரிச்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிசசீரும் வந்து, வெண்டளையும், ஆசிரியத்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையு மயங்கிவந்தவாறுகண்டுகொள்க. ஆ- "நெடுவரைச்சாரற் குறுங்கோட்டுப்பலவின், விண்டுவார்தீஞ்சுளை வீங்குகவுட்கடுவன் உண்டுசிலம்பேறி யோங்கியவிருங்கழைப், படிசும்பயிறறுமென்ப, மடியாக்கொலைவி லென்னையர்மலையே,, இவ்வாசிரியத்துள் தன்சீரும், வெண்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிசசீரும்வந்து வெண்டளையும் தன்றளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும், மயங்கிவந்தவாறுகண்டுகொள்க. "மண்டிணிந்தநிலனும, நிலனேந்திய விசும்பும், விசும்புதை வரும்வளியும் வளிதலைஇயதீயும், தீமுரணியநீரும்.—புன்காற்புணர்மருதின் போதரும்பிய புனற்றுமனை—தேன்றுட்டீங்கரும்பின், பூந்தாட்புனற்றுமனை—வார்காற்செங்கழுநீர்.—இக்குறளடி வஞ்சிப்பாக்களுள், வெண்சீரும், தன்சீரும், நேரீற்றியற்சீரும், வந்துவெண்டளையும். தன்றளையும், கலித்தளையும். ஆசிரியத்தளையு மயங்கிவந்தவாறு கண்டுகொள்க. (முழங்குதிரைக்கொற்கைவேந்தன்) என்னும் வெண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும், இயற்சீ

ரும், வெண்சீரும் வஞ்சித்தளையும், ஆசிரியத்தளையும், வெண்டளையும், கலித்தளையும், மயங்கிவந்தவாறு கண்டுகொள்க. "வளர்கொடியனமணைம் விரிவனமல்லிகையொடுமௌவல், களிர்கொடியனகறு விரையனகுலும் லனவகுளம், குளிர்கொடியனகுழை மாதவிகுவிமுகையனகோங்கும் குளிர்கொடியனவுயர் தளிரினொடொழுகின ரனவோடை,, இக்கலியிருத்தத்துள், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும், நேரீற்றியற்சீரும், வஞ்சித்தளையும், ஆசிரியத்தளையும், மயங்கிவந்தவாறு கண்டுகொள்க. நேரீற்றியற்சீர் ஒத்தாழிசைக்கலியுள் வாராதவாறும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கலிப்பாவுள்ளும், ஆசிரியத்துள்ளும், வாராதவாறும், வெண்பாவினுள்ளும், வஞ்சியுரிச்சீர வாராதவாறும், வேற்றுத்தளை விரவாமையும், மேற்காட்டிய செய்யுளகத்தும், பிறவற்றுள்ளுங்கண்டுகொள்க. நேரீற்றியற்சீர் வெண்கலியுள்ளும், கொச்சகத்துள்ளும் வருதலும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகத் துள்ளுருகிவருதலும், செய்யுளோத்துள்ளே சொல்லப்பட்டன. வெ - "குலாவணங்குவில்லெயினர் கோனகண்டன் கோழி, நிலாவணங்கு வெண்மணன்மேனின்று, புலாலுணங்கல், கொள்ளும்புட்காக்கின்ற கோவின்னமயோ நீ பிறர், உள்ளம்புக்காப்பதுனை,, இவ்வெண்பாவினுள் வஞ்சியுரிசசீர்வந்தன வாலோவெனின், திருவள்ளுவப்பயன் நாலடிநானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும், முததொள்ளாயிரமுதலாகிய சான்றோர்செய்யுளுள்ளும், வஞ்சியுரிசசீர் வந்திலாமையானும், வெண்பாவினுள் வஞ்சியுரிசசீர வருகவென்று மோதகில்லாமையானும், வேற்றுத்தளை வெண்பாவினுள் வநதிலாமையானும், இந்தொடக்கத்தன குற்றமல்லது குணமாகாவென்பது காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு, அதுவே இந்நூலுடை யார்க்குமுடன்பாடு. என்னை. "இயறசீர்நேரீற்றுத் தன்றளையடைதல், கலி[illegible]கவியல்பில லே காணுங்காலை, வஞ்சியுள்ளும் வரத்தகாவாயினு[illegible], [illegible]மாரோவிடத் தாகுமென்ப. என்றார் பல்காயனார். நிரைநடுவி[illegible]லா வஞ்சியுரிசசீர், கலியினோடகவலிற் கடிவரையிலவே. என்[illegible]றாகலின். (௩)

இயற்றளைவெள்ளடிவஞ்சியின்பாதமகவலுள்ளான்
மயக்கப்படாவல்லவஞ்சிமருங்கினெஞ்சாவகவல்
கயற்கணல்லாய்கலிப்பாதமுநண்ணுங்கலியினுள்ளான்
முயக்கப்படுமுதற்காலிருபாவுமுறைமையினே.

இ-கை. அடிமயக்க மாமாறுணர்த்து-ற்று. இயற்றளைவெள்ளடி வஞ்சியின்பாத மகவலுள் மயக்கப்படாவல்ல-எ-து. இயற்சீர் வெண்டளையான்வந்த வெண்பாவடியும், வஞ்சியடியும், ஆசிரியப்பாவினுள்வந்து மயங்

ப்பெறும்-எ-று. என்னை "இயற்சீர்வெள்ளடியாசிரியமருங்கி, னிலைக்கு ரிமரபி னிற்கவும்பெறுமே,, என்றார் தொல்காப்பியனார். "வஞ்சிவிரவ லாசிரியமுரித்தே, வெண்பாவிரவினுங் கடிவரையின்றே,, என்றார் பல் காயனார். வ-று. ஆ "அறும்பியலையுட் குறும்பல்சுனைய, உலைக்கல்லன்ன பாறையேறிக், கொடுவில்லெயினர் பகழிமாய்க்கும், கவலைத்தென்பவ வர்தேர்சென்றவாறே, அது மற்றவலங்கொள்ளாது, நொதுமற்கலுழு மிவ்வழுங்கலூரே,, இதனுள்- அறும்பியலையுட் குறும்பல்சுனைய-எ-து. இ யற்றளைவெள்ளடி-இதனை அறும்பியலையுட் குறும்பல்சுனைய குறுந்தொடி யூஉஞ்செல்சுரம் எனவுச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க. ஆ "இருங்கடலுடுத்த பெருங்கண்மாநிலத், துடைநிலைநடுவண திடைபிறரின்றித், தாமேயாண்ட வேமங்காவலர், இடுதிரைமணலினும் பலரேசுடு பிணக், காடுபதியாகப் போகித்தத்தம், நாடுபிறர்கொளச் சென்றுமாய்ந் தோரே அதனால், நீயுங்கேண்மதியத்தைவீயா, துடம்பொடுநின்ற வுயி ருமில்லை, மடங்கலுண்மை மாயமோவன்றே, கள்ளிவேய்ந்த முள்ளியம புறங்காட்டு, வெள்ளில்போகிய வியலுளாங்கண், உப்பிலாவவிப் புழுக்க ல்கைக்கொண்டு பிறர்க்குநோக்கா, திழிபிறப்பினோ னீயப்பெற்று, நில , கலனுக விலங்குபலிமிசையும், இனனுவைகலவாராமுனனே, செய்ந்நி முன்னியவினையே, முந்நீர்வரைப்பக முழுதுடன்றுறந்தே,, இதனுள் உ ப்பிலாவவிப் புழுக்கல் கைக்கொண்டு பிறர்க்கு நோக்கா-எ-ம். இழிபிறப் பினோ னீயப்பெற்று-எ-ம்-வஞ்சியடி விரவிவந்த வாறுகண்டுகொள்க. ம யக்கப்படுமென்னுது மயக்கப்படா வல்லவென்றிருகால் விலக்கிசசொல் லியவதனால் வெண்சீர்விரவிய இயற்றளை வெள்ளடியும், கலியடியும், ஆசி ரியத்துள்ளருகி வரப்பெறு மெனக்கொள்க. வ-று. ஆ "அங்கண்மதிய மரவின்வாய்ப்பட்டெனப், பூசல்வாயாப் புலம்புமனைக்கலங்கி, ஏதின்மா க்களு நோவர்தோழி, யென்றுநோவாரில்லை, தண்கடற்சேர்ப்பனுண்ட வென்னலக்கே,, இதனுள்-அங்கண்மதிய மரவின்வாய்ப்பட்டென-எ-து- வெண்சீர்விரவிய வியற்றளைவெள்ளடி, இதனை அங்கண்மதிய மரவின் வாய்ப்பட்டெனப், பொங்கியபூசல்பெரிது. எனவுச்சரித்து வெள்ளடியா மாறுகண்டுகொள்க. ஆ "குருகுவெண்டாளி கொடுபுயத்துண்டென, மா வழங்குபெருங்காட்டு கழகளிறுகாணுது, மருள்பிடி திரிதருஞ்சாரல், அ ருளாளுகுத லாயிழைகொடிதே,, இதனுள் இரண்டாமடி கலியடி, இதனை மாவழங்கு பெருங்காட்டு மழகளிறுகாணுது, தீவழங்குசுழல் விழிக்கட் சீயஞ்சென்றுழலுமே. எனவுச்சரித்துக் கலியடியாமாறுகண்டுகொள்க வஞ்சிமருங்கி னெஞ்சாவகவல் கலிப்பாதமுங்கண்ணும்- எ-து. வஞ்சிப்பா வினுள் ஆசிரியவடியும், கலியடியும், விரவிவரப்பெறும். எ-று- எஞ்சாவ

கவலென்று சிறப்பித்தவதனால், வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும், கலியடியும், வெள்ளடியும், அருகியன்றி வாராவெனக்கொள்க. கயற்கணல்லாய்-எ-து-மகடூஉமுன்னிலை. பட்டினப்பாலையென்னும் வஞ்சி நெடும்பாட்டினுள் ஆசிரியவடி பயின்றுவந்தன, கலியடியும் வெள்ளடியும் அருகினவெனக்கொள்க. நேரிழைமகளிருணங் கண்கவரும், என்றித்தொடக்கத்தன ஆசிரியவடி, (வயலாமைபுழுக்குண்டு வறளடம்பின்மலர்மிலைந்து) எ-து-வஞ்சியடி இதனை வயலாமைபுழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து கயனுட்டக்சடைசியர்தங் காதலரோடாண்மணர்தனரோ எனவுச்சரித்துக் கலியடியாமாறுகண்டுகொள்க. (கோழியெறிந்த கொடுங்காற்கனங்குழாய்) எ-து-வெள்ளடி, இதனைகோழியெறிந்த கொடுங்காற்கனங்குழை யாழிகுழ்வையக்கணி. எனவுசசரித்து வெள்ளடியாமாறுகண்டுகொள்க. கலியினுள் முயங்கப்படுமுதற்காவிருபாவும். எ-து- கலிப்பாவினுள், வெண்பாவடியும், ஆசிரியவடியும் புக்குமயங்கப்பெறும்-எ-று. முறைமையினே-எ-து-முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும்-எ-று. "ஆசிரியப்பாவி னயற்பாவடிமயங்கும் ஆசிரியம் வெண்பாகலிக்கண்ணும், ஆசிரியம், வெண்பாக்கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின், ஒண்பாவடி விரவாவுற்று,, இதனை விரித்துரைத்துக்கொள்க. காமர்கடும்புனலென்னு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவினுள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் மயங்கினவாறுகண்டுகொள்க. ஆல் இரண்டும் அசை. (௬)

அருகிக்கலியோடகவன்மருங்கினைஞ்சீரடியும்
வருதற்குரித்தென்பர்வான்றமிழ்நாவலர்மற்றொருசார்
கருதிற்றடையேகடையிணைபின்கடைககூழையுமென்
றிரணத்தொடைக்குமொழிவரிடைப்புணர்வென்பதுவே.

இ-சை. ஒருசாரடிக்கும், தொடைக்குமெய்தியதோ ரிலக்கணமுணர்த்து-ற்று - அருகிக்கலியோடகவன் மருங்கினைஞ்சீரடியும் வருதற்குரித்தென்பர்வான்றமிழ்நாவலர்-எ-து-ஒரு சார்கலிப்பாவினுள்ளும், ஆசிரியப்பாவினுள்ளும், ஐஞ்சீரடியு மருகிவரப் பெறுமென்றுசொல்லுவர் புலவர் - எ-று. வ-று. க "அணிகிளர் சிறுபொறிமவிர் துத்திமாநாகத்தெருந்தேறித், துணியிரும்பனிமுந்நீர் தொட்டுழந்துமலைந்தனையே,, இக்கலிப்பாவில் முதலடி ஐஞ்சீரடி வந்தவாறு கண்டுகொள்க. ஆ "உமணர்ச்சேர்ந்து கழிந்தமருங்கி னகன்றலை, ஊர்பாழ்த்தன்ன வோமையம்பெருங்காட், டின்றுவென்றீராயின், இனியவோபெரும தமியேற்குமனையே,, இவ்வாசிரியத்துள் முதலடி ஐஞ்சீர் வந்தவாறு கண்டுகொள்க. சிறியகட்பெறினேயென்னு மிணைக்குறள் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடிவந்

தென்றெனக்கொள்க. இவ்வாறே "வெண்டளைவிரவியு மாசிரியவிரவியு, மைஞ்சீரடியு முளவெனமொழிப,, என்றார் தொல்காப்பியனார். வெண்பாவினுள் ஐஞ்சீரடி வரப்பெறுமெனக்கொள்க. "ஐஞ்சீரடுத்தலு மண்டிலமாகலும், வெண்பாயாப்பிற் குரியவல்ல,, என்று நந்தத்தனார் அடிநூலிலெடுத்தோதினார், மற்றொருசார் கருதிற்கடையே கடையிணைபின் கடைகூழையுமென் றிரணைத்தொடைக்கு மொழிவரிடைப்புணரொன்பது வே-எ-து-ஒருசாராசிரியர் முரண்டொடையைக் கடைமுரணும், கடையிணை முரணும், பின்முரணும், கடைக்கூழைமுரணும், இடைப்புணர்முரணுமென்றுவேண்டுவர்-எ-று. இரணைத்தொடை யெனினும், பகைத்தொடை யெனினும், முரண்டொடையெனினும், ஒக்கும் எனனை "மொழியினும் பொருளினு முரணத்தொடுப்பி, னிரணைத்தொடையென் றெய்தும் பெயரே. மறுதலையுணாப்பினும் பகைத்தொடையாகும் என்றாராகலின். அவற்றுள் கடைமுரணுவது அடிதோறு மிறுதிச் சீரக்கண்மறுதலைப்படத்தொடுப்பது, கடையிணைமுரணுவது-கடையிருசீரக்கண்ணும் மறுதலைப்படத்தொடுபபது, பின்முரணுவது-இரண்டாஞ்சீரக்கண்டும், நான்காஞ்சீரக்கண்ணும், மறுதலைப்படத்தொடுப்பது, கடைக்கூழை முரணுவது-முதற்சீரக்ணின்றியொழிந்த மூன்றுசீர்க்கண்ணும் மறுதலைபபடத்தொடுப்பது, இடைபபுணர் முரணுவது நடுவிருசீர்ககண்ணும் மறுதலைப்படத்தொடுப்பது. வ-று. ஆ "கயன்மலைப்பன்ன கண்ணிணைகரிதே, கடமுலைதிவளுந் தனிவடம்வெளிதே, நூலினுண்ணிடைசிறிதே, ஆடமைத்தோளிக்கல்குலோபெரிதே,, இஃது அடிதோறுமிறுதிசசீர்க்கண் மறுதலைப்படத் தொடுத்தமையாற்கடைமுரண். ஆ "மீனறேர்ந்தருந்திய கருங்கால்வெண்குருகு, தேனார்ஞாழல் விரிசினைகுழூஉம், தண்ணந்துறைவன் றவிர்ப்பவுந்தவிரான், தேரோகாணலங் காண்டும், பீரோவண்ணமுஞ்சிறுநுதற்பெரிதே" இது அடிதோறுங் கடையிருசீர்கண்ணும் மறுதலைப்படத்தொடுத்தமையால் கடையிணைமுரண். ஆ "சாரலோங்கியதடந்தாட்டாழை, கொய்மலர்குவிந்து தண்ணிழல்விரிந்து, தமியேமிருந்தனமாகநின்றுறுதன், நலனுடைப்பணிமொழி நன்குபலபயிற்றி, வீங்குதொடிப்பணைத்தோ ளெகிழத், துறந்தோனல்லனம் மேனியோதே" இது அடிதோறுங் கடைச்சீரும், இரண்டாஞ்சீரும், மறுதலைப்படத்தொடுததமையாற்பின்முரண். ஆ "சாவியங்கருங்கட் செவ்வாய்ப்பைந்தொடி, பூவிரிசுரிமென்கூந்தலும், வேய்புரைதோளு மணங்குமா லெமக்கே,, இதுமுதற்சீரொழிந்த மூன்றுசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால் கடைக்கூழைமுரண். ஆ "போதுவிரிகுறிஞ்சி நெடுந்தண்மால்வரைக், கொதையிற்றாழ்ந்த வோங்கல்வெள்ளருவி, காந்தளஞ் செங்குலைப்பகஞ்

கூட்டாளி, வேரல்விரிமலர் முகையொடுவிராஇப், பெருமலைச்சிறு நீழத் குறலகவர்ந், தின்னுவாயினினியோர்மாட்டே,, இஃதுஇடையிருசீரும் மறுதலைபடத் தொடுத்தமையர் லிடைப்புணர்முரண்.—இவ்வாறுசொன்னோர் கையுனர்முதலாகிய வாசிரியரொனகொள்க. இனி இரண்டுதொடைக்கு மென்றவுமையால் ஒழிந்தமோனை, இயைபு, எதுகை, அளபெடையென்னுந் தொடைநான்கிற்குமிவ்வாறே யொட்டிக்கொள்க. அவை கூடிவழங்குமாறு. கடைமோனை, கடையிணைமோனை, பின்மோனை, கடைக்கூழைமோனை, இடைப்புணர்மோனை-எ-ம்-கடையியைபு, கடையிணையியைபு, பினனியைபு, கடைக்கூழையியைபு, இடைப்புணரியைபு எ-ம்-கடையெதுகை, கடையிணையெதுகை, பின்னெதுகை, கடைக்கூழையெதுகை, இடைப்புணரெதுகை-எ-ம்-கடையளபெடை, கடையிணையளபெடை, பின்னளபெடை, கடைக்கூழையளபெடை, இடைப்புணரளபெடை-எ-ம்-வருங்கொள்க. இவற்றிற் கிலக்கியம்யாப் பருங்கல விருத்தியுட்கண்டுகொள்க. (ரு)

வருக்கநெடிலினம்வந்தாலெதுகையுமோனையுமென்
றுருக்கப்பெயரானுரைக்கப்படுமுயிராசிடையிட்
டிருக்குமொருசாரிரண்டடிமூன்றுமெழுத்துமொன்றி
நிரக்குமெதுகையென்றுலுஞ்சிறப்பிலநேரிழையே.

இ-கை. ஒருசாரெதுகைக்கும் மோனைக்குமெய்தியதோரிலக்கண முணர்த்து-ற்று வருக்கநெடிலினம் வந்தாலெதுகையு மோனையுமென் றுருக்கப் பெயரானுரைக்கப்படும் எ-து-வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும், எதுகையும், மோனையுமாயவந்தால் அவற்றைவருக்கவெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை, எ-ம் வருக்கமோனை, நெடின்மோனை, இனமோனை, எ-ம். பெயரிட்டுவழங்கப்படும்-எ-று. (வ்-று) வெ. "நீடிணர்க்கொம்பர்க் குயிலாலத்தூதிப், பாடுமெவண்டஞ்சியகலும்பருவத்துத், தொடார்தொடி நெகிழ்த்தாருள்ளார் படரொல்லாப், பாடமைசேக்கையுட்கண்,, இது-டகரமெய் வருக்கவெதுகை. "அறத்தாறிதுவென—னிடை,, இது றகரமெய்வருக்கவெதுகை. "ஆவாவென்றே ஒருசாரார்,, என்பதிரண்டாமெழுத்தொன்றுதாயினும் இரண்டாமெழுத்தின்மேலேறிய நெடிலாய் புமைநோக்கி நெடிலெதுகையென்று வழங்கப்படும். இனி இனவெதுகை மூன்றுவகைப்படும், வல்லினவெதுகையு மெல்லினவெதுகையும், இடையினவெதுகையுமென, அ-று. வெம்புக்கார்தகவிலா ரொன்பதவரல', ரொசசத்தாற் சாணப்படுஉம்,, இதுவல்லினவெதுகை. வெ. "அன்பினுமார்வமுடைமையதுவீனு நண்பென்னு

காடாச்சிறப்பு, இது-மெல்லினவெதுகை. வெ. "எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யாவிளக்கே விளக்கு,, இது இடையினவெதுகை. வருக்கமோனைமுதலாகிய மூன்றும்வருமாறு, ஆ "பகலேபல்பூங்கானற்கிள்ளையோப்பியும், பாசிலைக்குளவியொடு கூதாளம்விரைஇப், பின்னுப்பிணியவிழ்ந்த நன்னெடுங்கூந்தல், பீரங்கப்பெய்து தேம்படத்திருஇப், புனையிரோதி செய்குறிநசைஇப், பூந்தார்மார்ப புனத்துட்டோன்றிப், பெருவரையடுக்கத் தொருவேலேந்திப், பேயுமறியாமா வழக்குபெருங்காட்டுப், பைங்கணுழுவைப் படுபகைவெரீஇப், பொங்குசினந்தணியாப் பூநுதலொருத்தல், போகாதுவழங்கு மாரிருணடுநாள், பௌவத்தன்னபாயிருணீந்தி, இப்பொழுதுவருகுவையாயின், நற்றார்மார்பநீண்டலெங்கதுப்பே,, இதுபகரமெய்வருக்கமோனை "ஆர்கலியுலகத்து - ஒழுக்கமுடைமை,, இதமுதலெழுத்தொன்றாயினும், முதலெழுத்தின்மேலேறிய நெடிலொப்புமைநோக்கி நெடின்மோனையென்று வழங்கப்படும். இனி இனமோ மூன்று வகைப்படும். வல்லினமோனையும், மெல்லினமோனையும், இடையின மோனையுமென. வ-று. ஆ "கயலேருண்கண்கலுழாளும், சுடர்புரைதிருநுதல்பசலைபாயத், திருந்திழையுமைத்தோளரும்படருழப்பப், போகல்வாழியையபூத்த, கொழுங்கொடி யணிமலர்தயங்கப், பெருந்தண்வாடை வருஉம்பொழுதே,, இஃதெல்லாவடியுமுதற்கண்ணே வல்லெழுத்துவந்தமையான் வல்லினமோனை. மெல்லினமோனையும், இடையினமோனையும் வந்தவழிக்கண்டுகொள்க. என்னை "வருக்கநெடிலினம் வகையாரண்டே, நெடியபிறவுமினத்திறலாகும்,, என்றார் பிறருமெனக்கொள்க. ஒருசகப்பெயரானென்று சிறப்பித்தவதனால் ஒருசாராசிரியர் தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை, என்றும், தலையாகுமோனை, இடையாகுமோனை, கடையாகுமோனை, என்றும், வேண்டுவரெனக்கொள்க. என்னை. "சீர்முழுதொன்றிற் றலையாகெதுகை, யோரெழுத்தொன்றி னிடைகடைபிறவே,, என்றாராகலின் இச்சூத்திரத்தான் மோனைக்கும் இவ்வாறே விரித்துரைத்துக்கொள்க. வ-று. 'சிலைவிலங்கு-போழ்து,, எ-து-தலையாகெதுகை. "அகரமுதல-புலகு,,எ-து-இடையாகெதுகை. "தக்கார்-காணப்படும்,, எ-து-கடையாகெதுகை. வெ. 'பற்றுகபற்றற்றான் பற்றினைப்பற்றைப், பற்றுகபற்றுவிடற்கு,, எ-து. தலையாகுமோனை "மாவும்புள்ளும்,, எ-து-இடையாகுமோனை. "பகலே பல்பூங்கானல்,, எ-து-தலையாகுமோனை "மாவும்புள்ளும்,, எ-து- இடையாகுமோனை. "பகலேபல்பூங்கானல்,, எ-து - கடையாகுமோனை உயிரளபெடையிட்டிருக்கு மொருசாரிரண்டடி மூன்றுமெழுத்துமொன்றி, விரக்கு மெதுகையென்றலுஞ்சிறப்பில-எ-து-உயிரொதுகை, ஆசெதுகை, இ

டையிட்டெதுகை, இரண்டடியெதுகை மூன்றாமெழுத்தொன் றெது
கையென்றொருசாரெதுகையு முளவாயினும் பெரியதோர் சிறப்பில்லெ
னக்கொள்க. நேரிழையே-எ-து-மகரவுமுன்னிலை. வ-று. ஆ. "துனியொ
டுமயங்கிய தூங்கிருணடுநாள், அணிகிளர்தாரோ யருஞ்சுரநீந்தி, வடிய
மைமையெஃகம் வலன்வயினேந்தித், தனியேவருதி நீயெனின், மையிருங்
கூந்த லுய்தலோவரிதே,, இஃதிரண்டாமெழுத் தொன்றாதாயினும், இர
ண்டாமெழுத்தின்மேலேறிய வுயிரொன்றிவந்தமையால் உயிரெதுகை.
இனி ஆசெதுகை. ய ர ல ழ வொற்று நான்கும் ஆசாய்வருமெனக்கொள்க
என்னை "யரலழவென்னு மீரிரண்டொற்றும், வரன்முறைபிறழாது வந்
திடையுயிர்ப்பினஃ, தாசிடை யெதுகையென் றறைதல் வே
ண்டும்" என்றாராகலின்—.வ-று. விரு "காய்மாண்டதெங்கின் பழம்வீ
ழக்கமுகின்னெற்றிப், பூமாண்டதீந்தேன் றொடைகீறிவருக்கைபோழ்ந்து,
தேமாங்கனிசிதறி வாழைப்பழங்கள் சிந்துமே, ஏமாங்கதமென் றிசையாற்
றிசைபோயதுண்டே,, இது யகரவொற்றிடை வந்தஆசெதுகை "மாக்
கொடியானையுமெனவற்பந்தரும், கார்க்கொடி முல்லையுங் கலந்துமல்லி
கைப், பூங்கொடிப்பொதும் பருங்கானநாறலுர, தூகசடிகமழ்ந்துதான்
றுறக்கமொத்ததே,, இதுரகர வொற்றிடைவந்த ஆசெதுகை. வெ "ஆ
வேறுருவினவாயினுமாபயந்த, பால்வேறுருவினவல்லவாம், பால்போல்,
ஒருதன்மைத்தாகுமற நெறியாபோல, உருவுபலகொளலீங்கு,, இதுலகர
வொற்றிடைவந்தஆசெதுகை. வெ "அந்தரத்துள்ளே யகங்கைபுறங்கை
யா, மந்திரமேபோலுமிவ்வாழ்க்கை அந்தரத்து, வாழ்கின்றேமென்று
மதிதன்மின்வாழ்நாளும், போகின்றதுளையேபோன்று,, இதுழகரவொற்
றிடைவந்தஆசெதுகை. "ஆர்கலியுலகத்து,, இது ஆகிடையிட்டுவந்த வ
ல்லினவெதுகை, பிறவும்வந்தவழிக்கண்டுகொள்க. இடையிட்டெதுகை
வருமாறு "தோடாரெல்வளை நெகிழநாளு, நெய்தலுண்கண்பைதலுழப்
ப, வாடாவவ்வரிபுதைஇப் பசலையும். வைகறொறும்பையப்பெருகி நீடா
ரிவனென நீண்மனங்கொண்டார் கேளார்கொல்லோ காதலர்தோழி - வா
டாப்பௌவ மறன்முகந்தெழிலி பருவம்பொய்யாது வலனேர்புவளைஇ
ஓடாமலையன்வேலிற்கடிதுமின்னுமிக்கார் மழைக்குரலே இஃதுஅடிதோ
றும் இடையிட்டுவந்தமையால் இடையிட்டெதுகை. இதுதொல்காப்பி
யனார்காட்டியபாட்டு என்னை. ஈரடிவண்ண மிடையிட்டுவந்தவெதுகைத்
தாகும். என்றாராகலின். இரண்டடியெதுகைவருமாறு துவைக்குந்துளி
முந்நீர்க்கொற்கைமகளிர் அவைப்பதம்பல்லிற் கழுகொவ்வாமுத்தம் ம
ணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும்வேலின், அணங்குமுழுதமு மன்னவா
ர்பாடல் இதுமுன் இரண்டடியு மோரெதுகையாய்ப் பின் இரண்டடியெ

துணைக இரண்டோருங்கியன்றபின் மூரண்டேனுந்தொடையிரண்டிலவுமை ங் கூறுவாராகலின். மோனைக்குமவ்வாறேயொட்டிக்கொள்க. வ-று-திரு ந்துகண்டக ராலற்றவட்டவர் ஆகங்கண்டகத்தாலற்றவன்பினர் பாகங் கொண்டே பயோதரஞ்சேர்த்தினார் பாகங்கொண்டு பயோதரநண்ணினார் இதனுள் இரண்டடியும் ஒருமோனையாய்ப் பின்னிரண்டடியு மற்றொரு மோனையாய் வந்தமையால் இரண்டடிமோனை, வெ. பவழமும்பொன்னு ங்கூவை இயமுதநின் திகழருமபீனறனபுன்னை. பொய்ம்மையும் வாய்மை யிடைந்தபுணைதீர்ந்த நன்மைபகருமெனின் இவை- மூன்றாமெழுத்தொன் றெதுகை. இரக்குமெதுகையென்று சிறப்பித்தவதனால், விட்டிசை வல் லொற்றெதுகையென்றும் விட்டிசைமோனையென்றும் வேண்டுவாருமுள ரெனக்கொள்க. வ-று. வெ. பற்றிபலகாலும் பான்மறியுண்ணுமை நோ அலையனின்னுட்டைநீ. இதுவல்லொற்றடுத்தாற்போல விட்டிசைத்தகு ற்றெழுத்தினோடு புணர்ந்தமையால் விட்டிசை வல்லொற்றெதுகை. வெ ண்பா. அ்அவனும் இஇவனும் உஉவனுங்கூடியக்கால் எஎவனைவெல்லா ரிகல் இது முதலெழுத்திரண்டடிக்கண்ணும் விட்டிசைத்து வந்த மையு ல் விட்டிசைமோனை. இவை யெல்லாஞ் சிறப்பிலவெனக்கொள்க. இன் னு மொருக்கப்பெயரானுரைக்கபடு மென்று சிறப்பித்தவதனால் பாவி னங்களெல்லாத் தொடையானும் வருமென்றாராயினும் பெரும்பான்மை யுந்தலையாகுமோனையிற்றிரிந்தும் தலையாமெதுகையிற்றிரிந்தும் வாரா வென்பதூஉம் செந்தொடையொழித்தெல்லாததொடைக்கும் இனவெழு த்து வரததொடுப்பதூஉம் வழியெதுகைவரததொடுப்பதூஉம் வழிமுர ண்வரத்தொடுப்பதூஉம், சிறப்புடைத்தெனக்கொள்க. இனவெழுத்துப் பெற்று மோனைமுதலாகிய தொடையுந்தொடைவிகற்பமு போலாரை, வேறுபடததொடுப்பது மருட்செந்தொடை எனக்கொள்க. இனவெழுத் தாமாறு தானமொத்தகுறிலும் நெடிலுந் தம்முளினமாம் அவை- அகர ஆகார ஐகாரஔகாரங்க டம்முளினமாம். இகர ஈகார எகர ஏகாரங்க ள்தம்முளினமாம். உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முளினமாம். இ வையேறிய வுயிர்மெய்க்கும் இவ்வாறேகொள்க, ஒற்றினுள்- சகர தகரங் கள் தம்முளினமாம். ஞகர நகரங்கள் தம்முளினமாம். மகர வகரங்கள் தம்முளினமாம். இவற்றை அதுவென்று வழங்குவாருமுளர். என்னை. வெ. அகரமோடாகார மைகாரமௌவாம் இகரமோ டீகாரமெ ஏ உகர மோ டோகாரமொ ஓ ஞநமவதச்சகரம் ஆகாதவல்லவநு. என்றாராகலின் அவற்றுட்சிலவருமாறு. வெ. ஈத்துவக்குமின்ப மறியார்கொல் தாமுடை மை வைத்திழக்கும்வன்கணவர் அமிழ்தினுமாற்ற வினிதேதம்மக்கள் சிறுகையளாவியகூழ். இவை யினவெழுத்துப்பெற்று மோனைமுதலாகி

யதொடையும் தொடைவிகற்பமும் போலன்மை வேறுபடத் தொடுத்த மையான் மருட்செந்தொடை. பிறவுமன்ன. இனிவழியெதுகை வருமாறு. க-றை மண்டலம் பண்டுண்ட நின்மேடர் வரகுணன் றெண்டியின் வாய்க்-கண்டலர் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கனமகர-நுண்டலங் கெண்டையிரண்டொடு தொண்டையுங் கொண்டோர்திங்கள் மண்டல மவ்வண்டலம்புக்கொண்டுறுழ வருகின்றதே கொங்குதங்குமுதலாயினவுங்கொள்க. அநுப்பிராசமென்னும் வடமொழியை வழியெதுகையென்பது தமிழ்வழக்கு. இனிவழிமுரண்வருமாறு. விருசெய்யவாய்ப்பசும்பொனேலைச்சீரடிப்பரவையல்குல் ஐயநுண்மருங்குனோவவடிகொண்டகுவவுகொங்கை வெய்யவாய்த்தண்ணெனீலம் விரிந்தென விலங்கிநீண்ட மையவாமழைக்கட்கூந்தன் மகளிரைவருகவென்றான் க-றை ஒருமால்வரைநின்றிருசுடரோட்டி முந்நீர்க்கிடந்த பெருமானிலனுஞ் சிதுவிலைத்தாவுண்டுபேதையர்கண் பொருமாதவித்தொங் கலெங்கோன் புரவலன்பூம் பொதியிற் கருமாவிழிவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழைக் கே"மோனையெதுகையிற்றிரிந்து பாவுமினமும்வாராமை மேற்காட்டியவற்றுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

சுருங்கிற்றுமூன்றடியேனைத்தரவிருமூன்றடியே
தரங்கக்கும்வண்ணகக்குந்தரவாவதுதாழிசைப்பா
சுருங்கிற்றிரண்டடியோக்கமிரட்டிசுரும்பிமிரும்
தரங்கக்குழலாய் சுருங்குந்தரவினிற்றாழிசையே.

இ-கை. தரவுதாழிசைகட்கு அடிவரையறையுமாறுணர்த்து-ற்று. சுருங்கிற்று மூன்றடியேனைத்தரவு-எ-து. அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவும், வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவும், ஒழிந்தல்லாதகலிப்பாவிற்குத் தரவுமூன்றடியே சிறுமை. பெருமையாடுவோனது பொருண்முடிவுகுறிப்பே வரையறையில்லை. எ-று. இருமூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்குந் தரவாவது. எ-து. அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், பெருக்கசுருக்கமில்லை, ஆறடியேதரவாவது. எ-று. சுருங்கிற்றுமூன்றடியேனைத்தர வென்றாராயினும், வெள்ளைக்கிரண்டடியென்னுங் காரிகையுள், கலிப்பாவிற்கு நான் கடிசிறுமைசொன்னமையால் தரவுகொச்சகக்கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமைவருவதெனக்கொள்க. தாழிசைப்பாசுருங்கிற்றிரண்டடியோக்கமிரட்டி-எ-து. பொதுவகையாற்றாழிசைசொல்லிப் போந்தாராயினும், தாழிசைகட்கிரண்டடி சிறுமை, நான்கடிபெருமை, இடைமூன்றடியானும்வருவது. எ-று. சுரும்பிமிருந்தரங்கக்குழலாய்—எ-து. மகடூஉமுன்னிலை சுருங்குந்தரவினிற்றாழிசையே-எ-து. தரவடியிற்றாழிசை

யடி சுருங்கிவருவது-எ-று. இவற்றிற்கிலக்கியமேற் காட்டியவற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

பொருளோடடிமுதனிற்பதுகூனதுவேபொருந்தி
இருள்சேர்விலாவஞ்சியீற்றினுநிற்குமினியொழிந்த
மருடாவிகாரம்வகையுளிவாழ்த்துவசைவனப்புப்
பொருள்கோள்குறிப்பிசையொப்புங்குறிக்கொள்பொலங்கொடியே.

இ-கை. மேற்சொல்லப்பட்ட பாக்கட்கெல்லா மெய்தியதோரிலக்கணமுணர்த்து-ற்று. பொருளோடடிமுதனிற்பதுகூன். எ-து. அடிமுதற்கட்பாவினது பொருளைத்தழுவித்தனியேநிற்பது கூனெனப்படும். எ-று. அதுவே பொருந்தியிருள்சேர்விலா வஞ்சியீற்றினுநிற்கும். எ-து. அக்கூன் வஞ்சிப்பாவினதடியின் இறுதிக்கண்ணும் நிற்கப்பெறும். எ-று. ஈற்றினுமென்றவும்மையால், வஞ்சிப்பாவினடி நடுவினுங் கூன்வரப்பெறுமெனக்கொள்க. இருள்சேர்விலாவஞ்சியென்று சிறப்பித்தவதனால், வஞ்சியடியின் நடுவும்இறுதியும், அசைகூனாய்வருவது சிறப்புடைத்து, சீர்கூனாய்வரினும், உகரவீறு பெற்றிய நேரீற்றியற் சீரானல்லது வாராவெனக் கொள்க. அசைச்சீரெல்லாப்பாவினுள்ளும் அருகியல்லது கூனாய்வாரா தெனக்கொள்க. எனவே வெண்பா, ஆசிரியம், கலியென்னுமூன்றினிடையு மிறுதியுங்கூன்வரப்பெறாதெனக்கொள்க. என்னை. "அடிமுதற் பொருளைத் தானினிதுகொண்டு, முடியநிற்பது கூனெனமொழிப,, வஞ்சியினிறுதியுமாகுமதுவே, யசைகூனாகு மென்மனார்புலவர்.,, என்னை, பல்காயனார். கூனைத்தனிச்சொல்லென்று வழங்குவாருமுளர். என்னை "அடிமுதற்பொருள் பெறவருவது தனிச்சொலஃ, திறுதியும் வஞ்சியு ளியலுமென்ப,, என்றாராகலின். கொச்சகக்கலியுள் ஓரடிமுழுதுங் கூனாய்வரப்பெறும், அவை சிறப்பிலவெனக்கொள்க. வ-று. வெ. "உதுக்கா ண், சுரந்தானுவண்மைச் சுவானமாப்பூதன். பரந்தானப் பல்புகழ்ப்பாடி. இரந்தார்மாட், டின்மையகல்வதுபோலவிருணீங்க, மின்னுமினிதேர் மழை,, இவ்வெண்பாவினுள் அடிமுதற்கண் உதுக்காணெனக் கூன்வந்தவாறுகண்டுகொள்க. ஆ "அவரோ. கேடில்விழுப்பொருடரு மார்பாசிலை, வாட்டாவள்ளியங் காடிறந்தோரே, யானே, தோடாரெல்வளை நெகிழவேங்கிப், பாடமைசேக்கையுட் படர்கூர்ந்திசினே, அன்னவளியவ ளென்றதுமாமழை, இன்னும்பெய்யமுழங்கி, மின்னுந்தோழியென் னின்னுயிர் குறித்ததே. என இவ்வாசிரியப்பாவின் அடிமுதற்கண் - அவரோ-எ-ம். யானே-எ-ம். கூன்வந்தவாறுகண்டுகொள்க. க. "உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவேபிறழினும், இருந்தகைய விறுவனாமே லெரிபோலச் சுடர்விடுமே, சிறுந்தகையார் சிறுதகைமை சிறப்பெனினு

ம் பிறழ்வின்றி, உறுதகைமைப்புலகினுங் கோசொப்பாகித்தோன்றுவே"
இக்கலிப்பாவினுள், அடிமுதற்கண் உலகினுளெனக் கூன்வந்தவாறு கண்டுகொள்க. வ. "உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும், பிற்கொடுத்தார் முற்கொளவும், முறைதிரிவழியொழுகுமென்ப, அதனால், நற்றிற நாடு தன்மை, பற்றறயாவையும் பரிவறத்துறந்தே.—இவ்வஞ்சிப்பாவினுள் அடிமுதற்கண் உலகேயெனச் சீர் கூனாய்வந்தவாறும், "மாவழங்கலின் மயக்குற்றனவழி,, என இவ்வஞ்சியடியி னிறுதிக்கண் வழியென, அசைகூனாய் வந்தவாறும், "கலங்கழாலிதுறை, நுங் கலக்குற்றன,, என இவ்வஞ்சியடியி னிடையிற்றுறையென, அசைகூனாய்வந்தவாறுங் கண்டுகொள்க. "தேரோடத் துகள்கெழுமினதெருவு,, இவ்வஞ்சியடியின திறுதிக்கட்டெருவு என வுகரவிறுதியாகிய இயற்சீர் கூனாயினவாறுகண்டுகொள்க. காமர் கடும்புனலென்னுங், கொச்சகக்கலியுட் சிறுகுடியீரோ சிறுகுடியீரோ. எனவோரடியால், கூன்வந்தவாறுகாண்க- பிறவுமன்ன. இனியொழிந்த மருடூர்விகாரம் வகையுளிவாழ்த்து வசைவனப்புப் பொருள்கோள் குறிப்பிசையொப்புங் குறிக்கொள் - எ-து - மேலெழுத்தசைசீர்பந்தமடிதொடை பாவினங்கூறுவனென் றதிகாரம்பாரித்த காரிகையுள் ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கந்தீர வகுக்கப்பட்ட விகாரமும், வகையுளியும், வாழ்த்தும், வசையும், வனப்பும், பொருளும், பொருள்கோளும், குறிப்பிசையும், செய்யுளொப்புமையு மாமாறு உபதேச முறைமையானுணர்க.- -எ-று. பொலங்கொடியே- எ-து - மகடூஉமுன்னிலை. அவற்றுள்-விகாரம் அறுவகைப்படும், வலித்தலும், மெலித்தலும், விரித்தலும், தொகுத்தலும், நீட்டலும், குறுக்கலுமென. என்னை. "அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை, வலிக்கும்வழிவலித்தலு மெலிக்கும்வழிமெலித்தலும், விரிக்கும்வழிவிரித்தலுந், தொகுக்கும்வழி தொகுத்தலும், நீட்டும்வழி நீட்டலுங், குறுக்கும்வழி குறுக்கலும், நாட்டல்வலிய வென்மனார்புலவர்,, என்றார் தொல்காப்பியனார். வ-று. "குறுந்தாட்பூதஞ்சுமந்த, அறக்கதிராழியெம் மண்ணலைத்தொழினே.,, இதனுள் குறுந்தாளெனற்பாலதனைக் குறுந்தாளென வலிக்கும்வழி வலித்தவாறும், "தண்டையினக்கிளி யடிவோள்பண்டைய ளல்லண்மானோக்கினளே,, இதனுள், தட்டையெனற் பாலதனைத் தண்டையெனமெலிக்கும்வழி மெலித்தவாறும். வெ. "வெண்மணலெக்கர் விரிதிரைதந்தநீர், கண்ணுடை மண்டிலத் தூதாமி, ஒத்திழியும், தண்ணந்துறையூர் தகவிலரே தற்சேர்ந்தார், வண்ணங்களை ப்பிழியாதார்,, இதனுள் தணடுறைவ ரெனற்பாலதனைத், தண்ணந்துறைவரென விரிக்கும்வழி விரித்தவாறும். வெ. "பூத்தாட்புறவிற் புனைமதில்கைகோடார், காத்தவிற் காவல ரேனையார், பார்த்தருர்,வெ

ணடார்வணக்கி விறன்மதிமுன் கோடல், வேண்டுமாம் வேண்டார்மகன்,, இதனுள்-வேண்டாதாரைவணங்கி யெனற்பாலதனை வேண்டார்வணக்கி யெனத் தொகுக்கும்வழி தொக்குநதவாறும், வெ. "பாசிழையாகம் பசப்பித்தான்பைந்தொடி, மாசேலனென்று மனங்கொளீஇ, மாசேனன், சேயிதட்கண்ணி தருதலாற்சேர்ந்தியென், றைய்தீர நெஞ்சின்மேல்வைத்து,, இதனுள் பசிழையெனற் பாலதனைப் பாசிழையென நீட்டும்வழி நீட்டியவாறும், வெ. "யானையெழிதசத்திருந்த விலங்கிலைவேற்றென்னன், திருத்தாமனறென் றேனறியேனா,, இதனுள் தீயேனெனற்பாலதனைத் தியேனெனக்குறுக்கும் வழிக்குறுக்கினவாறுங்கண்டுகொள்க.—பிறவுமன்ன. மரூஉவிகாரமென்று சிறப்பித்தவதனால், வரலாற்றுமுறைமையோடு கூடிப்பொருந்தி வாராநின்றன வல்லது துவைக்குப்பாலில்லையெனற்பாலது தூவைக்குப பாலில்லையென்றாற்போலப் புணர்க்கப்படாதென்க. இனனும்மரூஉவிகாரமென்று சிறப்பித்ததனால், தலைக்குறையும், இடைக்குறையும், கடைக்குறையும், வருவனவுமுள.—அவையும் வரலாற்று முறைமையோடு கூடி வழங்கப்படுமெனக்கொள்க.—வ-று. "மரையிதழ்புரையு மஞ்செஞ்சீறடி,, இதனுள் தாமரையெனற்பாலதனை மரையெனத் தலைக்குறைந்து வழங்கினவாறும், "வேதினவெரிநி னோதி முதுபோத்து,, இதனுள் ஓந்தியெனற்பாலதனை ஓதியென இடைக்குறைந்து வழங்கினவாறும், "நீலவிசும்பினுமினோராய், வானிலை மலர்ந்தன புன்கொடிமுசுண்டை,, இதனுள் ஆரலெனற்பாலதனையாலென இடைக்குறைந்து வழங்கினவாறும். "நீலுண்டுகிலிகை கடுப்ப,, இதனுள் நீலமுண்டுகிலிகைகடுப்ப எனறபாலதனை நீலுண்டுகிலிகைகடுப்பவெனக் கடைக்குறைந்து வழங்கினவாறுங் கண்டுகொள்க. பிறவுமன்ன. அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை யென்றவழி நான்குசொல்லாவன-இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல், எனவிவை, என்னை. "இயற்சொற்றிரிசொற் றிசைச்சொல்வடசொலென், றனைத்தேசெய்யுளீட்டச்சொல்லே,, என்றாராகலின். அவற்றுள் இயற்சொல்லாவன, சோறு, கூழ், பால், பாளிதம், எனபன. என்னை. "இயற்சொற்றாமே யியம்புங்காலை, செந்தமிழ்நிலத்து வழக்கொடுசிவணித், தம்பொருள்வழாமையிசைக்குஞ்சொல்லே,, என்றாராகலின். அவைநடக்கும் எல்லையாவையோவெனின்-வையையாற்றின்வடக்கும், மருதயாற்றின்றெற்கும், கருவூரின்கிழக்கும், மருவூரின்மேற்குமாகிய நான்கெல்லைக்குட்பட்ட சோணாடென்ப. என்னை. "மன்றவாணன் மலரடிவணங்கித், தென்றமிழ்நங்கைசெவ்வணியசெய்த, வடியவர்கூட்டமு மாதிசங்கமும், படியின்மாப்பெருமைபரவுஞ்சோழனும், சைவமாதவருந் தமிழ்சசினிருக்கு, மம

யறுசோழவளநாடென்ப,, என்றாராகலின். திரிசொல்லாவன - அடுக்கல், பிறங்கல், ஓங்கல் விலங்கல், விண்டு, குவடெனவிவை, மலை யென்னும் ஒருபொருள் குறித்தவேறுசொல். உந்தியென்பது - ஆற்றிடைக் குறையும், கொப்பூழ், சுழி, தேருருளும், யாழநரம்புறுப்பும், எனுமிவை வேறுபொருள்குறித்த ஒருசொல் என்னை "ஒருபொருள்குறித்த வேறு சொல்லாகியும், வேறுபொருள்குறித்த வொருசொல்லாகியு, மிருபாற் றென்பதிரிசொற்கிளவி,, என்றாராகலின். திசைச்சொல்லாவன, பயிலை பஞ்ஞையென்றும், கிளியைக் கிள்ளையென்றும் தாயைத்தள்ளையென்றும், நாயை ஞமலியென்றும்- வழங்குமவையாம். என்னை "செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத்தினும், தங்குறிப்பினவே திசைச்சொற்கிளவி,, என்றாராகலின். செந்தமிழ்நிலத்தைச்சேர்ந்த பன்னிருகொடுந்தமிழ் நிலமாவன, வெ "தென்பாண்டி குட்டங் குடங்கற்காவேண்பூழி, பன்றியருவாஅதன்வடக்கு, நன்றாய, சீதமலாடுபுனனாடுசெந்தமிழ்சேர், ஏதமில்பன்னிருநாட்டெண். இதைவிரித்துரைத்துக்கொள்க. வடசொல்லாவன, குங்குமம், மூலம், சங்கு, சந்தனம், என்பனவாம் என்னை "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்தசொல்லாகுமே — சிதைந்தனவரினு மியைந்தனவரையார்,, என்றார்தொல்காப்பியனார். வகையுளி-எ-து-முன்னும்பின்னும், அசைமுதலாகிய உறுப்புகள் நிற்புழி யறிந்து குற்றப்படாமல் வண்ணமறுத்தலெனக் கொள்க. என்னை-வெ "அருமேறுக்கு நீராசைசீரடிக்கட், பொருளோனுக்காதோசையேநோக்கி, மருணீக்கிக், கூட்டவுங் கூறபா தலரவுங் கொள்ளுடியற்றல், வாய்ந்தவகையுளியின்மாண்பு,, என்றாராகலின். வ-று, வெ- "கடியாபூங்கோதை கடாயினென்றிண்டோர், சிறியார்தஞ்சிற்றில் சிதைத்து,, இதனை-கடிவார்- எ-ம் பூங்கோதை-எ-ம்-கடாயினன்-எ-ம்-அலகிடின். ஆசிரியத்தளையும், கலித்தளையுந்தட்டு, வெள்ளைத்தன்மை குன்றுமாதலால் - கடியார்பூவென்று தேமாங்காயாகவும், கோதையென்றுசதமாவாகவும், கடாயினனென்று, கருவிளமாகவும் அலகிட்டுக்கொள்க. வெ "மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார், நிலமிசைநீடுவாழ்வார்,, இதனைநிலமிசை-எ-ம்-நீடு-எ-ம்-வாழ்வார்-எ-ம்-அலகிடின் ஆசிரியத்தளைதட்டு, வெண்பாவி னிறுதிக்கண் அசைச்சீராகற்பாலது இயற்சீராய்,நிற்றலில் வெள்ளைக்கோரசைச் சீருமொழிசேர்பிறப்புமொண்காசுமிற்ற சீருடைச்சிந்தடியே முடிவா மென்னும், இலக்கணத்தோடு மாறுபடுமாதலின் நிலமிசை எனக்கருவிளமாகவும், நீடுவாழ் எனக்கூவிளமாகவும்- வார்-என நாளென்னும். நேரசைச்சீராகவும் அலகிட்டுக்கொள்க. வெ "பாடுநர்க்குமாடுநர்க்கும் பண்டுதாங் கொண்டவர்க்கும் ஊடுநர்க்குங் கூடுநர்க்குமொத்தலால்- நீடுநீர்

கல்வய லூர நறுஞ்சாந்தணியகலம் புல்லலினூடலினிது,, இதனுள்-மேகர நகரங்கள் பிரிந்திசைத்தனவாயினும்- இரண்டினையுங்கூட்டி நிரையசையாக அலகிடச்சீருந்தளையுஞ் சிதையாவாம். அல்லாவிடின்- நாலசைச்சீராய் வண்ணமழிந்து ஓசையுண்ணுதுகெடும்- பிறவுமன்ன, வாழ்த்துஇருவகைப்படும் மெய்வாழ்த்தும்- இருபுறவாழ்த்துமெனவ - று. வெ" "கார்நறுநீலங் கடிக்கயத்துவைகலும்- நீர்நிலைநின்றபயன்கொலோ- கூர்நுனைவேல்- வண்டிருக்கநக்கதார் வரமான்வழுதியார்- கொண்டிருக்கப்பெற்றகுணம்,, இதுமெய்வாழ்த்து. வெ. "பண்டுமொருகாற்றன்மைநதொடியைக்கோட்பட்டு - வெங்கடம் வில்லேற்றிக்கொண் டிழந்தான்,, தென்களந்தைப் பூமாண்டிருமகளுக் கின்னும்புலம்புமால் வாமான்றேர்வையையார்கோ.,, இஃதிருபுறவாழ்த்து. வசையும் இருவகைப்படும்- மெய்வசையும் இருபுறவசையுமென. வ-று. வெ- "தந்தையிலைச்சும்' டன்றுப் தொழிலிதான்பார்ப்பான் எந்தைகமிஞங்ஙனம்பட்டது கொல்'' முந்தை அவியுணவினூர்தெரியினுவதாங்கொல்லோ- கவிகண்ணனூர்தம் பிறப்பு" இது மெய்வசை. வெ. படையொடு போகாது நின்றெறிந்தானென்றும் கொடையொடு நல்லார்கட்டாழ்ந்தான் படையொடு- பாடிவழங்குந்தெருவெல்லாந்தான் சென்று கோடிவழங்குமகன்,, இஃதிருபுறவசை. இனிவனப்பு எட்டுவகைப்படும் அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என. என்னை அம்மையழகு தொன்மை தோல்விருந் தியைபுபுலனிழைபெனவனப்பெட்டே. என்றாராகலின். அவற்றுள் - அம்மையாவது, சிலவாய் மெல்லியவாய சொற்களால் ஒள்ளியவாய பொருண்மேற் சிலவடியாற் சொல்லியது என்னை. "சின்மென்மொழியாற் சீர்புனைந்தியாப்பி, னம்மைதானே ~ டிகிமிர்வின்றே.,, என்றாராகலின். வ-று. வெ. "அறிவினுருகுவதுண்டோ பிறிதினேய் தன்னேய்போற் போற்றக்கடை,, அழகென்பது, செய்யுட்சொல்லாகிய திரிசொற்களானேசை யினிபவாகப் புணர்க்கப்பட்டது. என்னை. "செய்யுண்மொழியாற் சீர்புனைந்தியாப்பி னவ்வகைதானே யழகெனப்படுமே,, என்றாராகலின். வ-று. ஆ. "துணியிரும்பௌவங்குறையவாங்கி, அணிகிளரடுக்கன் முற்றியவெழிலி, காலொடுமயங்கிய கனைஇருண்டுநாள், யாங்குவந்தனையோ வோங்கல்வெற்ப, நெடுவரைமருங்கிற் பாம்பெனவிழிதரும், கடுவரற் கலுழிநீந்தி, வல்லியம்வழங்கும் கல்லதர்நெறியே,, தொன்மை-எ-து- பழையதாகி நிகழ்ந்தபெற்றிபுனைக்கப்படுவது. என்னை. "தொன்மைதானே, யுரையொடுபுணர்ந்த பழமைமேற்றே,, என்றாராகலின். வ-று. "செறிதொடியுவகைகேளாய் செஞ்சுடர்த்தெறுகதிர்ச்செல்வன்,, என்பதூஉம், பாரதம், காங்

தம் போல்வனவுங்கொள்க. தோல்-எ-து-இழுமென்னு மெல்லியவாகி ய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச்சொற்களானும், பலவடியாய்க் கிடப்பனவுமென விருதிறத்தவாம். என்னை. "இழுமெ ணும்மொழியால் விழுமிய துநுவலினும், பரந்தமொழியா லடிநிமிர்ந்தொழு கினும், தோலெனமொழிப தொன்னெறிப்புலவர்,, என்றாராகலின்.வ-று. "பாயிருள்பரப்பகங்குறையப்பாம்பின், ஆயிரமணிவிளக் கழலுஞ்சேக் கைத், துணிதருவெள்ளந் துயில்புடைபெயர்க்கும், ஒளியோன்காஞ்சி யெளிதெனக்கூறின், இம்மையிலலை, மறுமையில்லை, நீமையில்லை, செய் வோரில்லை, செய்பொருளில்லை, அறிவோரியாரஃ திறுவழியிறுகென,, இது மார்க்கண்டேயனாராகாஞ்சி-இஃதிழுமென மொழியால் விழுமியது நுவன்றது, "நிருமைதலைஇய-செனறவாறே,, இதுபரந்தமொழியாலடி நிமிர்ந்தொழுகியது.—விருந்து-எ-து-புதியவற்றின்மேற்று அஃதிப்பொ ழுதுள்ளாரையாப்பாடுவது. என்னை. "விருந்துதானே, புதியதுபுனைதந் யாப்பின்மேற்றே,, என்றாராகலின் அவை வந்தவழிக் கண்டுகொள்க. இயைபு-எ-து-ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள வென்னும் பதினொரு பு ள்ளியு மீறாகவந்தபாட்டு. என்னை. ஞகாரமுதலா ளகரவீற்றுப், புள்ளி யிறுதியியைபெனமொழிப.,, என்றாராகலின். அவையும் வந்தவழிக்க ண்டுகொள்க.—புலன்-எ-து-இயற்சொல்லாற் பொருடோன்றச் சொல்ல ப்படுவது. என்னை. "தெரிந்தமொழியாற் செவ்விதிற்கிளந்து- தேர்தல் வேண்டாது குறித்ததுதோன்றிற் - புலனெனமொழிப புலனுணர்ந்தோ ரே.,, என்றாராகலின். வ-று. "பார்க்கடன்முகந்த பருவக்கொண்மூ- வார்சசெறிமுரசின் முழங்கியொன்னார் - மலைமுற்றின்றே வயங்குதுளி சிதறிச் - சென்றவடிருமுகங் காணக்கடுந்தேர் - இன்றுசெலக்கடவுமதி பாகவுறுக்காண் - மாவொடுபுணர்ந்தமாஅல்போல - இருப்பிடி யுழைய தாகப் - பெருங்காடுமடுத்த காமாநனிறே,,—இழைபு-எ-து-வலலொற்றி யாதுநீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெணணி அடிவகுக்கப்ப ட்ட குறளடிமுதலாப் பதினேழுநிலத் தைந்தடியு முறையானே யுடை த்தாய் ஓஙகிய சொற்களால் வருவது. என்னை. "ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடக்காது - குறளடி துதலா வைந்தடிகாறு - மோங்கியமொ ழியா னுங்கனமொழியி - னிழைபினிலக்கணமியைந்ததாகும்.,, என்றாரா கன். செய்யுளியலுடையார் நாற்சீரடிதன்னையே - நான்கெழுத்துமுத லா வாறெழுத்தின்காறும் - உயர்ந்தமூன்றடியுங் குறளடியென்றும் - ஏ ழெழுத்துமுதலா ஒன்பதெழுத்தின்காறும் - உயர்ந்த மூன்றடியுஞ் - சிந் தடியென்றும் - பத்தெழுத்துமுதலாப் பதினான்கெழுத்தின்காறும் - உ யர்ந்த ஐந்தடியும் - அளவடியென்றும் - பதினைந்தெழுத்து முதலாப் பு

தினேழெழுத்தின்காறு முயர்ந்த மூன்றடியும் - நெடிலடியென்றும் - ப
தினெட்டெழுத்து முதலா இருபதெழுத்தின்காறு முயர்ந்த மூன்றடியுங்
கழிநெடிலடியென்றும் - இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லை
யென்றும் - வேண்டுவர். அவ்வெழுத்தெண்ணுமிடத்து குற்றியலிக
ரமும் - குற்றியலுகரமும் - ஆய்தமும் - ஒற்றுமொழித்துநின்ற உயிரும
உயிர்மெய்யுங்கூட்டி யெண்ணப்படும். என்னை. வெ. "குற்றிகரங் குற்று
கரமென் றிரண்டுமோய்தமுமா - ஒற்றுமென வொருநான்கொழித்துக்- கற
றோர் - உயிருமுயிர்மெய்யு மோதினர்கொள்க - செயிர்தீர்ந்த செய்யு
ளடிக்கு,, "நாற்சீரொண்ட டியெனப்படுமே,,—நாலெழுத்து முதலா
வாறெழுத்தெல்லை - யேறியநிலத்த குறளடியெனப - ஏழெழுத்தென்ப
சிந்தடிக்களவே - யீரெழுத்தேற்ற மவ்வழியான.—பத்தெழுத்தென்ப
நேரடிக்களவே - யொத்தநாலெழுத் தேற்றலங்கடையே—மூவைந் தெழுத்
தே நெடிலடிக்களவே. யீரெழுத்துமிகுதலு மியல்பெனமொழிப—மூ
வாறெழுத்தே கழிநெடிற்களவே - யீரெழுத்தேற்ற மவ்வழியான.,
வெ. ஈரிரண்டு மோரேழு மீரைந்து மூவைந்தும் - பாரிபனற நாற்சீரப
தினெட்டும் - ஓரா - விளையும் நினைமு நிலத்துக்குறள்சிந் - தளவுகழி
நெடிலோடைந்து - எனமுறைசுவின். ஆ. போந்துபோந்து சார்ந்துசார்
ந்து - தேர்ந்துதேர்ந்து மூசிநொந்து - வண்டிருமு விண்டுவீங்கி - நீர்வா
ய்கொண்டு நீண்ட நீலம் - ஊர்வாயூதை வீசவூவாய- மதியோவண்டோ
டொலகுமாலை - நன்மணங்கமழும் பனிநெல்லூர - அணைமேயாமெனமேரு
ளா யரிநெடுங்கண் - இணையிரோதி யேந்திளவனமுலை - இருபமாமல
ரிடையெழுந்தமாவின - நறுந்தழை துயல்வருஉஞ் செறிந்தேந்தல்குல்
அலரிமடையனைசூழ வரிபடைசிலம்பின-மணிமருளவள்ளர்குழல வளரிள
மபிறை நுதல், ஒளிநிலவுயங்கிழ புருவுடைமகளொடு கனிமுழவுமு
ழங்கிய வணிநிலவுமணிநகர இருந்தளவு மலரளவு கருப்புலவுறுமொதா
டை-கலனளவு கலனளவு கலனளவு கலனளவு-பெருமணம்புணர்ந்தனே
யென்ப-அஃதொரு மேனறப்பிறழிருவதன்றே இனிப்பொருள்கோளெ
ன்பது உம்மைத்தொகை. பொருளும் - பொருள்கோளுமென - என
னை வெ " அருளல்லதியாதெனிற் கொல்லாமைகோறல் பொருளல்லத
வ்வூனறினல்.. இதனுள் அருளும் அருளல்லதும் என உம்மைதொக்கா
றபோலக்கொள்க. அகப்புறப்-பொருளாவன- குறிஞ்சிக்கலி முத
லிய அகமும் அகப்புறமும் [illegible] பாடாண் பாட்டு முதலிய புறமும்
புறப்புறமுமாம். அவை அவ்விலக்கணங்கூறிய நூல்களிற் கண்டுகொ
ள்க. இனிப்பொருள்கோள் ஒன்பதுவகைப்படும், நிரனிறைமொழிமா
றும் சுண்ணமொழிமாற்றும் அடிமறிமொழிமாற்றும் அடிமொழிமாற்

றும் பூட்டுவிற்பொருள்கோளும் புனல்யாற்றுப் பொருள்கோளும் அளை
மறிபாப்புப்பொருள்கோளும் தாப்பிசைப்பொருள்கோளும் கொண்டு
கூட்டுப் பொருள்கோளுமென இவற்றுள் நிரனிறை யிரண்டுவகைப்படும்
பெயர்நிரனிறையும் வினைநிரனிறையுமென. அவற்றுள் பெயர்நிரனிறை
வருமாறு. வெ (கொடிகுவளை கொட்டைநுசுப்புண்கண்மேனி, மதிபவ
ளமூழ்த்த முகம்வாயமுறுவல் பிடிபிணை மஞ்ஞைநடைநோக்குச்சாயல் வ
டிவினளேவஞ்சிமகள்) இனிவினைநிரனிறைவருமாறு. (காதுசேர் தாழ்
குழையாய்கன்னித்துறைசேர்ப்ப போதுசேர் தார்மார்பபோர்ச் செழிய
நீதியால் மண்ணமிர்தமங்கையர்தோணயாற்றுறையேற்றூர்க்கு நுண்ணி
யவாயபொருள்) எ-ம-வெ. (அடல்வேன்மாநோக்கிரின் முகங்கண்டே,
உட்லுமிரிந்தோடுபு மலரும்பார்க்கும கடலுளகனையிருளு மாம்பலும்
பாம்பும் தடமதியமாமென்றுதாம்) இனிமுறைநிரனிறை எதிர்நிரனிறை
மயக்கநிரனிறை பலகையெண்ணிரனிறை குறையெண்ணிரனிறை என்
றுவேண்டுவாருமுளர். அவற்றுள், அடிநிரனிறைவருமாறு-விரு (கூ
ற்றுவனையின் மதனையரசகாகோவைக் கூனிலவைக்குஞ்சரத்தை யிஞ்சி
மூன்றை ஏற்றுலகின்புறவுருவ மாளத் தோள்களிறவெறிபட விமையப்
பெணவெருவவேவக காற்றெறிலாயனத்தால்னவிரலாற்கற்றைக் கதிர்
முடியாறகர நலத்தாறகணையாற்பின்னும் ஊற்றழியவுதைத்தரிதருநெறி
தந்தசுடி யுரிதனெரித்தானவனெமனை யுடையகோவே) சுண்ணமொழி
மாற்று-வெ. (சுரையாழ வம்மிதப்பவரை யானைக்குநிலை முயற்
குநிலையெனப கானகநாடன்சுனை) இதனுள-சுரையென்பதனோடு மிதப்ப
வென்பது பொருள்கொள்ளவும. அம்மியெனபதனோடு ஆழவென்பது
பொருள்கொள்ளவும யானையென்பதனோடு நிலையென்பது பொருள்கொ
ள்ளவும முயலெனபதனோடு நீத்தென்பது பொருள்கொள்ளவும் வந்த
மையாற்சுண்ணமொழிமாற்று. இனி அடிமறிமொழிமாறறு. (சூரல்ப
மபிப நீவரலாறே) எனனும் ஆசிரியம்வெண்டிற்றோடியான் முதலாகச்
சொன்னாலும ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையாலடிமறிமொ
மாற்று —இனி அடிமொழிமாற்று-வெ. (ஆலத்துமேலகுவளை குளத்துள
வாலினெடியகுரங்கு)—என்பதனுள ஆலத்துமேலகுரங்குகுளத்துள கு
வளையென்று இரண்டடியிலமொழிமாற்றிப் பொருள் கொண்டமையால்
அடிமொழிமாற்று. இனிப்பூட்டுவிற்பொருளகோள்-வெ. (திறந்திடுமி
ன்றீயவைபிற்காண்மோதர் இறந்துபடிற்பெரிதாமேதம் உறந்தையாகோ
ன-தண்ணாரமார்பிற்றமிழர்பெருமானைக் கண்ணாரக்காணக்கதவு) இதனு
ள திறந்திடுமின் என்பதனோடு கதவு-எ-து- நோக்குடைத்தாய்ப்பொரு
ள்கொண்டமையாற் பூட்டுவிற்பொருள்கோள் — இனிப்புனல் யாற்றுப்

பொருள்கோள்-வெ- (அலைப்பான் பிறிதுயிரையாக்கலுங்குற்றம் விலைப் பாலிற்கொண்டூன்மிசைதலுங்குற்றம் சொலற்பாலவல்லாதசொல்லலுங் குற்றம் கொலைப்பாலுங்குற்றமேயாம்) இஃதடிதோறும பொருளற்றுவ ந்தமையாற்புனல்யாற்றுப்பொருள்கோள். இனியளைமறிபாப்புப்பொருள் கோள்-விரு. (தாழ்ந்தவுணர்வினராந்தாழுடைந்துதண்டுன்றித் தளா வார்தாமும் சூழ்ந்தவினையாககைசுடவிளிந்துநாற்கதியிற்சுழல்வாரா தாமு ம் வீழ்ந்தபிணிநலியமுன் செயதவினையென்றே முனிவார்தாமும் வாழு ந்தபொழுதினேவானெய்துநெறிமுன்னி முயலாதாரே.) இதனுள்வாழ் ந்தபொழுதினே வானெய்துநெறிமுன்னிமுயலாதாரென்னு மிறுதிச்செ ல் இடையு முதலுஞ்சென்று பொருள்கொண்டமையால் அளைமறி பாப் புப்பொருள்கோள். — இனிதாப்பிசைப்பொருள்கோள்- வெ. (உண் ணாமையுள்ளதுயிர்நிலை யூனுண்ண அண்ணாத்தலசெயயாமளறு) இதனு ள் ஊனை யுண்ணாமை யுள்ளதுயிர்நிலை எ-ம- ஊனையுண்ண வண்ணா த்தல் செய்யாதளறு-எ-ம்- நடுநின்ற ஊனென்னுஞ்சொல்முதலும இறுதி யுஞ்சென்று பொருள் கொண்டமையால் தாப்பிசைப்பொருள்கோள — இனிக்கொண்டுகூட்டுப் பொருள்கோள்.—வெ. (தெங்கங்காயபோலத் திரண்டுருண்டபைங்கூந்தல் வெண்கோழிமுட்டையுடைத்தன்னமா மே னி அஞ்சனத்தன்னபசலைதணிவாமே வங்கத்துச்சென்றார்வரின்) இதனு ள்-அஞ்சனத்தன்னபைங்கூந்தலெனவும் தெங்கங்காய்போலத்திரண்டுரு ண்டவெண்கோழி முட்டையுடைத்தன்னபசலையெனவும் சொற் களைக் கொண்டு கூட்டிப்பொருள்கொண்டமையால் கொண்டுகூட்டுப் பொருள் கோள்.—வெ. (ஆரியமன்னர்பறையினெழுந்தியம்பும் பாரிபறம்பினமே ற்றண்ணுமை காரி, விறன்முள்ளூரவேங்கைவீ தாறுறுங்தோளாள நறுனள்ளூருள்ளதலர்) இதனுள்-தண்ணுமைநாணுநமோள்-எ-ம-நிறம்வே ங்கைவீ-எ-ம்-அலர் ஆரியமன்னாபறையினெழுந்தியமபும்-எ-ம- சொற் களைக்கூட்டிப் பொருளகொண்டமையால் இதுவுங்கொண்டுகூட்டுப்பொ ருள்கோள். பிறவுமன்ன. இனிக்குறிப்பிசை-எ - து- எழுத்தல்லோசை யான்வந்தமூற்கும், ஈளையும், இலதையும், அநுகரணமுமுதலாகவுடை ன செய்யுளகத்துவந்தால் அவற்றைசசெய்யுண்டை யழியாமல் அசையு ம் சீரும், அடியும் தொடையும், பிழையாமல் அலகிட்டு வழங்கப்படுமெ னக்கொள்க. வ-று-வெ- (ஈறலங்கொன்றைமலர்மிலைந்துஃகுவஃ மெ ன்றுதிரியுமிடைமகனே சென்று, மறியாட்டையுண்ணுமல் வண்ணகயா வுல்லை, அறியாயோவண்ணுக்குமாறு) ஒழிந்தனவும் இட்டுக்காட்டுர்ட டிய வசிமூரியுட்கண்டுகொள்க-என்னை. (எழுத்தல்லிசையசைமெ சிர்தளை சிதைக்கவும்படுமைனநேர்ந்திசினோரே) என்றாராகலின். இ

ஒப்பு-எ-து-மேற்சீரும் தளையும் அடியும் வரையறுக்கப்பட்டவாவும் பாவி
ன்முன்சொன்ன பெற்றியிற்றிரிந்து மிக்குங்குறைந்தும் வந்தா லவற்றை
யொருபுடையொப்புமைநோக்கி முடிந்தசெய்யுட்களின்பாற்படுத்து வழ
ங்கப்படும்-எ-று. வ-று. (கோழியுங்கூவின குக்கில்குரல்காட்டும் தாழியு
ணீலத்தடங்கண்ணீர் போதுமினோ ஆழிசூழ் வையத்தெம் மண்ண லடியேத்தி
க் கூழைநனையக்குடைந்துங் குளிர்புனல் ஊழியுமன்னவா மென்றே
லோரெம்பாவாய்) மேல்நாற்சீர்நான்கடியாய் வருவதுகலிவிருத்தமென்று
வரையறுத்துச்சொன்னார். இஃதைந்தடியான் வந்ததாயினும் ஒருபுடை
யொப்புமைநோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்து வழங்கப்படுமெனக்
கொள்க. இதனைத்தரவு கொச்சகமெனினுமிழுக்காது. (சுற்றுநீர் சூழ்
கிடங்கிற் பொற்றாமரைப்பூம்படப்பைத், தெண்ணீர்நல்வயலூரன் கேண்
மை யல்லிருங் கூந்தற்கலராகுமே) மேல்வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச்சி
றுமை யென்றெடுத்தோதினார். இஃதிரண்டடிச் சிறுமையான் வந்தா
யினும் ஒருபுடையொப்புமைநோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்தே வழ
ங்கப்படுமெனக்கொள்க. பிறவும்புராணகவிஞராற்பாடப்பட்ட இலக்கி
யங்களையும் இவ்விலக்கணத்தா னொருபுடையொப்புமைநோக்கி யொன்றன்
பாற்படுத்து வழங்கப்படுமெனக்கொள்க. ஒப்புமென்ற வும்மையால் வண்
ணமும் புணர்த்துரையும், அடியின்றிநடப்பனவும் ஓரடியா னடப்பனவும்
பாட்டும் உரையும் நூலும் மந்திரமும் அங்கதமும் பிசியும் முதுசொல்
லும். வாழ்த்துமாமாறும் எண்ணாந்துகொள்க.—அவற்றுள் வண்ணம் நூ
றுதிறத்தனவாம். அவைசொல்லுமாறு தூங்கிசைவண்ணம் ஏந்திசை
வண்ணம் அடுக்கிசைவண்ணம் பிரிந்திசைவண்ணம் மயங்கிசைவண்ண
மென்னுமிவ்வைந்தினையு முதல்வைத்து அகவல்வண்ணம் ஒழுகிசைவ
ண்ணம் வல்லிசைவண்ணம் மெல்லிசைவண்ணமென்னு மிந்நான்கினையு
ம் இடைவைத்துக் குறில்வண்ணம் நெடில்வண்ணம் வல்லிசைவண்ண
ம் மெல்லிசைவண்ணம் இடையிசைவண்ணம் என்னுமிவ்வைந்தினையுங்
கடைவைத்துக்கூட்டியுறழ நூறுவண்ணமும் பிறக்கும். என்னை-க-று
(தூங்கேந்தடுக்கல் பிரிதன்மயங்கிசை வைத்துப் பின்னும் பாங்கேயகவ
லொழுகல் வலிமெலிப்பாற்படுத்திட் டாங்கேகுறினெடில்வல்லின மெல்
லினமோடிடையைத் தாங்காதுறழத் தரத்தாம்வண்ணநூறுந்தலைப்படுமே)
என்றாராகலின். அவற்றின்விரியாவன- குறிலகவற்றூங்கிசைவண்ணம்
நெடிலகவற்றூங்கிசைவண்ணம் வலியகவற்றூங்கிசைவண்ணம் மெலிய
கவற்றூங்கிசைவண்ணம் இடையகவற்றூங்கிசைவண்ணம். எ-ம் குறி
லொழுகற்றூங்கிசைவண்ணம் நெடிலொழுகற்றூங்கிசைவண்ணம் வலி
யொழுகற்றூங்கிசைவண்ணம் மெலியொழுகற் றூங்கிசைவண்ணம் இ

டயொழுகற் றூங்கிசைவண்ணம் - எ-ம் குறில்வல்லிசைத் தூங்கிசை வண்ணம் நெடில்வல்லிசைத்தூங்கிசைவண்ணம் வலிவல்லிசைத்தூங்கிசைவண்ணம் மெலிவல்லிசைத்தூங்கிசைவண்ணம் இடைவல்லிசைத் தூங்கிசைவண்ணம்-எ-ம்-குறின்மெல்லிசைத் தூங்கிசைவண்ணம் நெடின்மெல்லிசைத்தூங்கிசைவண்ணம் வலிமெல்லிசைத்தூங்கிசைவண்ணம் மெலிமெல்லிசைத்தூங்கிசைவண்ணம் இடைமெல்லிசைத் தூங்கிசைவண்ணம், எ-ம். தூங்கிசைவண்ணம் (உம்) குறிலகவலேந்திசைவண்ணம் நெடிலகவலேந்திசைவண்ணம் வலியகவலேந்திசைவண்ணம் மெலியகவலேந்திசைவண்ணம் இடையகவலேந்திசைவண்ணம் எ-ம் குறிலொழுகலேந்திசைவண்ணம் நெடிலொழுகலேந்திசைவண்ணம் வலியொழுக லேந்திசைவண்ணம் மெலியொழுகலேந்திசைவண்ணம் இடையொழுகலேந்திசைவண்ணம் எ-ம், குறில்வல்லிசை யேந்திசைவண்ணம் நெடில்வல்லிசையேந்திசைவண்ணம் வலிவல்லிசையேந்திசை வண்ணம் மெலிவல்லிசை யேந்திசைவண்ணம் இடை வல்லிசை யேந்திசைவண்ணம் எ-ம் குறின் மெல்லிசை யேந்திசைவண்ணம் நெடின்மெல்லிசையேந்திசைவண்ணம் வலிமெல்லிசை யேந்திசைவண்ணம் மெலிமெல்லிசை யேந்திசைவண்ணம் இடைமெல்லிசை யேந்திசைவண்ணம் எ-ம் ஏந்திசைவண்ணம் (உம்) குறிலகவலடுக்கிசைவண்ணம் நெடிலகவலடுக்கிசைவண்ணம் வலியகவலடுக்கிசைவண்ணம் மெலியகவலடுக்கிசைவண்ணம் இடையகவலடுக்கிசைவண்ணம் எ-ம் குறிலொழுகலடுக்கிசைவண்ணம் நெடிலொழுகலடுக்கிசைவண்ணம் வலியொழுகலடுக்கிசைவண்ணம் மெலியொழுகலடுக்கிசைவண்ணம் இடையொழுகலடுக்கிசைவண்ணம் எ-ம் குறில்வல்லிசை யடுக்கிசைவண்ணம் நெடில்வல்லிசையடுக்கிசைவண்ணம் வலிவல்லிசை யடுக்கிசைவண்ணம் மெலிவல்லிசை யடுக்கிசைவண்ணம் இடைவல்லிசையடுக்கிசைவண்ணம் எ-ம் குறின்மெல்லிசை யடுக்கிசைவண்ணம் நெடின்மெல்லிசை யடுக்கிசைவண்ணம் வலிமெல்லிசை யடுக்கிசை வண்ணம் மெலிமெல்லிசையடுக்கிசைவண்ணம் இடை மெல்லிசை யடுக்கிசைவண்ணம் எ-ம் அடுக்கிசைவண்ணம் (உம்) குறிலகவற் பிரிந்திசைவண்ணம் நெடிலகவற்பிரிந்திசைவண்ணம் வலியகவற்பிரிந்திசைவண்ணம், மெலியகவற்பிரிந்திசைவண்ணம் இடையகவற்பிரிந்திசைவண்ணம்-எ - ம் குறிலொழுகற் பிரிந்திசைவண்ணம் நெடிலொழுகற்பிரிந்திசை வண்ணம் வலியொழுகற் பிரிந்திசைவண்ணம் மெலியொழுகற் பிரிந்திசைவண்ணம் இடையொழுகற்பிரிந்திசைவண்ணம் எ - ம் குறில்வல்லிசைப் பிரிந்திசைவண்ணம் நெடில்வல்லிசைப்பிரிந்திசைவண்ணம் வலிவல்லிசைப் பிரிந்திசைவண்ணம் மெலிவல்லிசைப் பிரிந்திசைவண்ணம் இடை வல்லிசைப்பி

ரிந்திசைவண்ணம், எ-ம்-குறின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம் நெடின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம் வலிமெல்லிசைப் பிரிந்திசை வண்ணம் மெலிமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், இடைமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், எ-ம்- பிரிந்திசைவண்ணம் (௨௰) குறிலகவன்மயங்கிசை வண்ணம், நெடிலகவன்மயங்கிசை வண்ணம், வலியகவன் மயங்கிசை வண்ணம், மெலியகவன்மயங்கிசைவண்ணம், இடையகவன்மயங்கிசைவண்ணம் எ-ம் குறிலொழுகன்மயங்கிசைவண்ணம் நெடிலொழுகன்மயங்கிசை வண்ணம் வலியொழுகன்மயங்கிசைவண்ணம், மெலியொழுகன்மயங்கிசை வண்ணம் இடையொழுகன்மயங்கிசைவண்ணம் எ-ம் குறில்வல்லிசை மயங்கிசைவண்ணம் நெடில்வல்லிசை மயங்கிசைவண்ணம், வலிவல்லிசை மயங்கிசை வண்ணம் மெலிமெல்லிசைமயங்கிசை வண்ணம், இடைவல்லிசை மயங்கிசைவண்ணம், எ-ம் குறின்மெல்லிசைமயங்கிசை வண்ணம் நெடின்மெல்லிசை மயங்கிசைவண்ணம், வலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், மெலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், இடைமெல்லிசை மயங்கிசை வண்ணம் எ-ம் மயங்கிசைவண்ணம். (௨௰) ஆக வண்ணம் நூறு, இவ்வாறு விரித்துரைத்தாரவிநயனார். இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் வண்ணம் இருபதென்பர். என்னை (வண்ணந்தாமே நாலைந்தென்ப) அவைதாம், (பாஅவண்ணந் தாஅ வண்ணம் வல்லிசைவண்ண மெல்லிசை வண்ணம் இயைபு வண்ணமளபெடை வண்ண, நெடுஞ்சீர்வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ் சித்திரவண்ண நலிபுவண்ணம் அகப்பாட்டுவண்ணம் புறப்பாட்டு வண்ணம் ஒழுகுவண்ண மொரூஉவண்ண, மெண்ணுவண்ண மகைப்புவண்ணந், தூங்கல்வண்ண மேந்தல்வண்ண, முருட்டுவண்ண முடுகுவண்ணமென் றாங்கவையென்ப வறிந்திசினோரே) என்றாராகலின். அவற்றுள், "பாஅவண்ணஞ், சொற்சீர்த்தாகி, நூற்பாற்பயிலு நோக்கிற் றென்ப) வ-று. "அவற்றுள். குற்றெழுத்தென்ப) எ-ம் "தாஅ வண்ண மிடையிட்டுவந்த வெதுகைத்தாகும்) வ-று. "உள்ளார்— காடிறந்தோரே) எ-ம். வல்லிசைவண்ணம் வல்லெழுத்துமிகுமே) வ-று. "முட்டாட்டாமரைத்-துஞ்சி) எ-ம். மெல்லிசைவண்ண மெல்லெழுத்துமிகுமே வ-று. "பொன்னினன்னபுன்னை நுண்டாது) எ-ம். இயைபு வண்ணமிடையெழுத்துமிகுமே. வ-று. "வால்வெள்ளருவிகாமிசையிழியவும் தாள்வல்லுழுவைவிடரினியம்பவும், வாழ்கிருளியம் வகாமிசையுழலவும், வேலொளிவிளக்கினவர்வரின், மீளாதோளிவாழ்கிற்பெயரே) எ-ம் அளபெடைவண்ணமளபெடைபயிலும். வ-று. "கணண்டன னைக்கண்டுகேதடும்) உ-ம். "நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்) வ-று. "மாவூராதே, மாவாராதே) எ-ம். குறுஞ்சீர்வண்ணங் குற்றெழு

மைப்பயிலும்) வ-று. "உறுப்புப்பெயலெழிலி தொகுபெயல்பொழிய, சிறுகோ
டு பயங்கொப்பொ திதளேயலி௴, குறுகியபருவமிதுவென மறுகுப்பு, செறிதொ
குகுடனது புலனறியாழிந்த) எ-ம். "சித்திரவண்ணங்குறியவு நெடியவு
மொத்துநேர்ந்தடுக்கி பயிலுறக்கமெதன்ப) வ-று. "சூல்பம்பிய—நீவர.
லறு) எ-ம். "நலிபுவண்ணமாமதம் பயிலும்) வ-று. (அஃகாமை செல்
வத்திற் கியாதெனின்வெக்காமை, வேண்டும் பிறன்கைப்பொருள்) எ-ம்.
அகப்பாட்டுவண்ணமுடியாதனை போன்று முடிந்ததன்மேற்றே) வ-று. ப
ன்மீனுணங்கற்படுபுள்ளோப்பியும், புன்னைநுணைட்டது நம்மொடுதொகுத்
தும், பன்னாள்வந்து பணிமொழிபயிற்றியு, மணத்தற்கோவ்வாள் றணந்து
புறமாறி, யினையனாகியிங் குறைந்துறந்தோன் பொய்தலாயத்துப் பொலன
றொடிமகளிர், கோடியாவெண்மணலேறி, யோடுகலங்காணும் துறைவன்.
றோழி) எ-ம், (புறப்பாட்டு வண்ணமுடிந்தது போன்று முடியாதாகும்)
வ-று. (இன்னுலைகலவாராமுன்னே—முழுதுடன்றுரங்கே) எ-ம. ஒழு
குவண்ணமோசையினொழுகும) வ-று. (அம்மவாழி தோழி காதலரினனே
பரிக்குமினவாடையொடு புன்கணமாலையன் பின்றுசலிய வுய்யலளிவ
ளென்றுரைச்சொல்லிச் செல்லுநர்ப்பெறினே சேயவல்ல வின்னினிபிரந்
தமன்னவா பொன்னணிநெடுநேோ பூண்டமாவே) எ-ம். (ஒரூஉவண்ண
மொரீஇத்தொடுக்கும்) வ-று. சிறியகட்பெறினே — உயிர்தவப் பலவே)
எ-ம் (எண்ணுவண்ணமெண்ணுப்பயிலும்) வ-று. (நன்னெனறைநாகரே
ரும்பூணர்ந்தம் துன்னருங்கடுந்திறலகங்கன்கட்டி பொன்னணிவல்விற் போ
ன்றுறையென்றுங்கு) எ-ம். அகைப்புவண்ணம றுத்தறுத் தொழுகும)
வ-று. (வாராராயினும்வரினுமவர்நமக் கியாராகிபரோதோழி -எ-ம். (அ
கைத்தல் அறுத்தல) தூங்கல் வண்ணம்வஞ்சிபயிலும்) வ-று. (யானுட
த்தானுணர்த்தயானுணராவிட்டதற்பின் றுனூடயானுணர்த்தத் தானுண
ரான்றேனூடு) எ-ம் ஏந்தல்வண்ணஞ் சொல்லியதுசொல்லிச் சொல்லிய
துசிறக்கும்) வ-று. (வைகலும—வைத்துணராதார,) (உருட்டு வண்ண
மராகந்தொடுக்கும்) வ-று. (உருகெழுமுருகியமுருமெனவதிர்தொறு ம
ருகெழுசிறகொடுமண்வரு மணிமயில) எ-ம். முடுகுவண்ண மடியிறந்
தொழுகும்) வ-று. (நெறியநெறிசெறிகுறிபுரிதிரி) எ-ம். வருமெனக்கொள்க
இனிப்புனைந்துரையிரண்டுவகைப்படும். பெரியதனைச் சுருக்கிச்சொல்லு
தலும் சிறியதனைப்பெருகச் சொல்லுதலுமெனை. என்னை (உரைக்கப்படு
ம்பொருட்கொத்தனவெல்லாம் புகழ்ச்சியின்மிக்க புனைந்துரையாகும்
என்றாராகலின். வ-று. வெ (அடையார்பூங்கோதைக்கல்குலு நோன்று
ம் புடையார்தனமுலையுந்தோள்றும் இடையாதும் கண்டுகொள்ளா தாயி
னுங்காரிகைநீர்மையாட் குண்டாகவேண்டுநுசுப்பு) இது பெரியதனைச்சு

ருக்கிற்று. (அவாப்போல்கன்றதனல் குன்மேற்சான்றோர் உசாப்போல
வுண்டேமருங்குல் உசாவினைப் பேதைகருணாப்பான் பிழைப்பிற் பெருநி
னுவே கோதைக்கொம்பன்னாள் குயம்) இது சிறியதனைப் பெருக்கிற்று).
(பொன்மலிகச்சிப்பூமலிகூடல் மாரியீகை மணிமாடம் என்னும் தொடக்கத்
தனவுமது. இனி அடியின்றி நடப்பன பாட்டொழிய நூலும் மந்திரமு
ம் சந்தோபிசிதமும் முதுசொல்லும் அங்கதமும் வாழ்த்து மென்னுமி
வை ஓரடியானும் பலவடியானும் வரப்பெறும். என்னை (செயிர்தீர் செ
ய்யுடெரியுங்காலை யடியினீட்டத் தடிருபெற்றியலும். ஓரடியானுமோரோ
விடத்தியலும் அவைதாம பாட்டுநூலேமந்திரமேபிசியே முது சொல்லங்
கமம் வாழ்த்தொடுபிறவு மாகுமென்ப வறிந்திசினோர் என்றாராகலின
இனி நூலாவது மூவகைத்தாய மூவரினடை பெற்றுநால்வகைப் பயத்த
தாய் எழுவகையாசிரியமதவிகற்பத்ததாய்ப் பத்துவகைக்குற்றந்தீர்ந்து பத்
துவகைக்குணத்ததாய்ப் பதின்மூன்றுவகையானுமைபெற்று முப்பத்தி
ரண்டு தந்திரவுத்தியோடும் புணர்ந்ததெனக்கொள்க. அவற்றுள் மூவ
கையாவன தந்திரம் சூத்திரம் விருத்தியெனவிவை முதனூல் வழிநூல்
சார்புநூலெனினுமமையும் மூவரினடைபெறுதலென்பது அவைமூன்று
நடத்துமாசிரியர்மூவரெனக் கொள்க நால்வகைப்பயனாவன அறம், பொ
ருள், இன்பம், வீடெனவிவை. எழுவகையாசிரியர் மத விகற்பமாவன,
உடன்படல் மறுத்தல் பிறர்தம்மதமேற்கொண்டுகளைதல் தா னாட்டித்
தனாது நிறுத்தல் இருவர்மாறுகோளொருதலைதுணிதல் பிறர்நூற்குற்றங்
காட்டல் பிறிதொடுபடா தன்மதங்கொளல் என்னுமிவை. பத்துவ
கைக்குற்றமாவன குன்றக்கூறல் மிகைபடக்கூறல் கூறியதுகூறல் மாறு
கொளக்கூறல் வழூஉச்சொற்புணர்த்தல் மயங்கவைத்தல் வெற்றெனத்
தொடுத்தல் மற்றொன்றுவிரித்தல் சென்றுதேய்ந்திறுதல் நின்றுபயனி
ன்மை எனவிவை. பத்துவகைக்குணமாவன சுருங்கச்சொல்லல் விள
ங்கவைத்தல் நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் ஓசையுடைமை
ஆழமுடைத்தாதல் முறையின்வைப்பு உலகமலையாமை விழுமியதுபயத்
தல் விளங்குதாரணத்ததாகுதல் எனவிவை. பதின்மூன்றுவகை யுமை
யாவன சூத்திரந்தோற்றல் சொல்வகுத்தல் சொற்பொருளுரைத்தல் வி
னுதல் விடுத்தல் விசேடங்காட்டல் உதாரணங்காட்டல் ஆசிரியவசனங்
காட்டல் அதிகாரவரவுகாட்டல் தொகுத்துமுடித்தல் விரித்துக்காட்டல்
துணிவுகூறல் பயனொடுபுணர்த்தல் எனவிவை. முப்பத்திரண்டுதந்தி
ரவுத்தியாவன நுதலிப்புகுதல் ஒத்துமுறைவைப்பு தொகுத்துச்சுட்டல்
வகுத்துக்காட்டல் முடித்துக்காட்டல் முடிவிடங்கூறல் தானெடுத்து
மொழிதல் பிறன்கோட்கூறல் சொற்பொருள் விரித்தல் தொடர்சொற்பு

ணர்த்தல் இரட்டுறமொழிதல் ஏதுவின்முடித்தல் ஒப்பின்முடித்தல் மாட்டெறிந்தொழுகல் இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல் முன்மொழிந்துகோடல் பின்னதுநிறுத்தல் விகற்பத்தின்முடித்தல் முடிந்ததுமுடித்தல் உரைத்துமென்றல் உரைத்தாமென்றல் ஒருதலைதுணிதல் எடுத்துக்காட்டல் எடுத்தமொழியினெய்தவைத்தல் இன்னதல்லதிதுவென மொழிதல் எஞ்சியசொல்லினெய்தக்கூறல் பிறநூன்முடிந்ததுதானுடன்படுதல் தன்குறிவழக்குமிகவெடுத்துரைத்தல் சொல்லின்முடிவினப்பொருண்முடித்தல் ஒன்றினமுடித்தறன்னினமுடித்தல் உய்த்துணரவைப்பு எனவிவை இவ்வாறுசொன்னார் பாடலனாரென்னுமாசிரியரெனக்கொள்க தந்திர வுத்தி முப்பத்திரண்டினும் பலவென்பாருமுளர். (அ)

எழுத்துப்பதின்மூன் றிரண்டசைசீர் முப் பதேழ்தளையைந்
திழுக்கிலடிதொடைநாற் பதின்மூன் றைந்துபாவினமூன்
றொழுக்கியவண்ணங்க ளாறொன்பதொண்பொருள்கோளிருமூ
வழுக்கில்விகாரம் வனப்பெட்டு யாப்புள்வகுத்தனவே

இ—ள். இந்நூலுள் வகுத்த பொருளெல்லாந் தொகுத்துணர்த்துற்று. எழுத்துப்பதின்மூன்றாவன குற்றெழுத்து நெட்டெழுத்து உயிரெழுத்து குற்றியலிகரம் குற்றியலுகரம் ஐகாரக்குறுக்கம் ஆய்தம் மெய்யெழுத்து வல்லினம் மெல்லினம் இடையினம் உயிர்மெய் அளபெடை எனவிவை. இரண்டசையாவன நேரசை நிரையசை எனவிவை. சீர்முப்பதாவன ஈரசைச்சீர்நான்கும் மூவசைச்சீரெட்டும் நாலசைச்சீர் பதினாறும் ஓரசைச்சீரிரண்டுமென்விவை. ஏழ்தளையாவன நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளை இயற்சீர்வெண்டளை வெண்சீர் வெண்டளை ஒன்றியவஞ்சித்தளை ஒன்றாவஞ்சித்தளை கலித்தளை யென்விவை. ஐந்தடியாவன குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி யெனவிவை. தொடைநாற்பத்துமூன்றாவன அடிமோனை அடியெதுகை அடிமுரண் அடியியைபு அடியளபெடை அந்தாதித்தொடை இரட்டைத்தொடை செந்தொடையென எட்டும் இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடைவிகற்பமுமெனவிவை. ஐந்துபாவாவன வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பா வெனவிவை. இனமூன்றாவன தாழிசை துறை விருத்தமெனவிவை. ஒழுக்கியவண்ணமாறாவன குறிலகவற்றூங்கிசைவண்ணமுதலாக மேற்காட்டிப்போந்தன. ஒன்பதொண்பொருள்கோளாவன நிரனிறை சுண்ணமொழிமாற்று முதலியன. இருமூவழுக்கில் விகாரமாவன வலிக்கும்வழிவலித்தன முதலியன. வனப்பெட்டாவன அம்மைமுதலியன. யாப்புள்வகுத்தனவே என்-து யாப்பருங்கலமென்னும் யாப்பின்கட் சொல்லப்பட்டன எ - று ஏகாரமீ

ற்றலை ஐந்திழுக்கிலடியென்று சிறப்பித்தவதனால், திணைவழுவும், பால்வழுவும், மரபுவழுவும், வினாவழுவும் விடைவழுவும், காலவழுவும், இடவழுவுமென்று சொல்லப்பட்ட ஏழுவழுவும் படாமற்புணர்க்கப்படுமெனக்கொள்க. வழுக்கில்விகாரமென்று சிறப்பித்தவதனால், எழுத்துக்குற்றம், சொற்குற்றம். பொருட்குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றம், ஆனந்தக்குற்றமென்னும் ஆறுகுற்றமும்படாமற் புணர்க்கப்படுஞ் செய்யுட்களெனக்கொள்க. அவற்றுள்-எழுத்துக்குற்ற முதலிய ஐந்தும், அவ்வவ்விலக்கணநூல்களா லறிந்துகொள்க. ஆனந்தக்குற்றமாவன. எழுத்துமுதலியதிரிதல். என்னை "எழுத்துநிலைதிரிந்த வெழுத்தானந்தமும், சொன்னிலைதிரிந்தசொல்லானந்தமும், பொருணிலைதிரிந்தபொருளானந்தமும், யாப்புநிலைதிரிந்த யாப்பானந்தமும், நடைபெறுபுலவர்காட்டினரவையே,, என்றாராகலின். அவற்றுள்-எழுத்தானந்தம்வருமாறு. வெ. "ஆழியிழைப்பப்பகல்போமிரவெல்லாம, தோழிதுணையாநந்துயர்தீரும், வாழி, நறுமாலைதாராய் திரையவோவென்னும், செறுமாலைசென்றடைந்தபோது,, இதனுள்-திரையவோவென்று இயற்பெயரைச் சார்ந்தளபெழுந்தமையால் எழுத்தானந்தம். என்னை "இயற்பெயர்சார்ந்தியெழுத்தளபெழினே, யியற்பாடில்லா வெழுத்தானந்தம்,, என்றாராகலின். சொல்லானந்தம்வருமாறு வெ. "என்னிற்பொலிந்த திவண்முகமென்றெண்ணித், தன்னிற்குறைபடுப்பப்படுப்பான்றண்மதியம், மின்னி, விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல்விசயன், எரிந்திலங்கு வேலினெழும்,, இதனுள்-தலைமகன்மேல் எரிந்ததென்னுஞ் சொற்புணர்ந்தமையால் சொல்லானந்தம. என்னை "இயற்பெயர்மருங்கின் மங்கலமழியத், தொழிற்சொற்புணர்ப்பினதுசொல்லானந்தம்,, என்றாராகலின். பிறவுமிவந்தவழி கண்டுகொள்க. வெ. "இந்திரனேபோலு மிளஞ்சாத்தனைசாத்தற்கு, மந்தரமேபோன்றிலங்கு மல்லாகம், மந்தரத்தில், தாழருவிபோனறுளது தார்மாலையம்மாலை, ஏழுலகுநாறுமிணர்,, இதனுள்-சாத்தனென்னுங் கீழ்மகனை-அரசனை உவமித்தாற்போல உவமித்தமையால் இறப்ப உயர்ந்த வானந்தவுவமை. வெ - "வள்ளெயிற்றுப்பேழ்வாய் ஞமலிக்குமான்குழாம், எள்ளியிரிந்தாற்போலெவ்வழியும், வளைற்கு, மாலாக்கடலன்ன மண்பரந்தவாட்டானை, மேலாருமேலார்விரைந்து,,—இதனுட் புலியினோடு வமிக்கப்படுகின்ற தலைமகனாகியவீரனோடு நாயை உவமித்தமையால் இறப்பவிழிந்தவானந்தவுவமை. என்னை "இறப்பவிழிந்தது மிறப்பவுயர்ந்தது, மறத்தகைவழீஇய வானந்தவுவமை,, என்றாராகலின். அலங்காரக்குற்றமாவது-வெ. "வெண்டிங்கள்போல்றிலங்கு வெண்சங்குசங்கோ

யணைதுலைகுதாழைவளர்தோடு, விண்டெக்கும், கள்ளரவிநாறுங் குன்கழிசூழ் கானகத்தெம், உள்ளாவிவாட்டுமுரு., இதனுள, வெண்ணை ணன்போலுஞ்சங்கு, சங்குபோலுந்தாழைப்பூவென்று உவமைக்குவமை சொன்னமையால் அடுத்துவரலுவமையென்னும் அலங்காரக்குற்றம் வ ன்னே. "உவமைக்குவமை யில்லெனமொழிப,, என்றாராகலின். இனி எல்லாக்குற்றமுந் தீர்ந்தசெய்யுள்வருமாறு. ஆ "தாமரைபுரையுங் காமர் சேவடி, பவளத்தன்ன மேனித்திகழொளி, குன்றியேய்க்கு முடுக்கைக் குன்றின், நெஞ்சுபகவெறிந்த செஞ்சுடர்நெடுவேற், சேவலங்கொடியோ ன் காப்ப, வேமவைகலெய்தின்றாலுலகே.,,

முன்றாவது-ஒழிபியல்- முற்றிற்று.

சீரொடுவிட்டிசைமாஞ்சீரியற்றளைசேர்ந்தருகி
வாரடர்கொங்கைவருக்கஞ்சுருங்கிற்றுவான்பொருளும்
சீரியதூய்கேந்தடுக்குசசிறந்தவெழுத்தும்ன்றே
யாருமொழிபியற்பாட்டின்முதனினைப்பாகுமன்றே.

யாப்பருங்கலக்காரிகை மூலமும், உரையும்முற்றிற்று.

இந்நூலிற்சொல்லாத கட்டளைக்கலிப்பாவுக்கிலக்கணம்.

சூ, "நாச்சீர்முன்வரு நாற்சீரடியே, நேரு முதனிரை முதனிரனிற யானே, பதினொழுத்தும பன்னிரொழுத்து, மியைந்தவையடியாய ந்தஃதிரட்டித், தொத்துநான்கிறுவது கட்டளைககலிபபா,, வ-று. "சொ ல்லினீரிவ ராசைப்பட்டாரொன்று - சொன்னசொற்பொருள் வேறுசொ ண்டையையோ, புல்லுவாரெவ்விதத்தினு மென்றுள்ளம் - பூரிதமேயிரு ந்தேன் மடமங்கைமீர, செல்லுலாமபொழிற்கூவககருறை- திருவிறகோ லரினுமருளாமையால், அல்லதேதுதிகம்பர ரொன்பொரு- ளறையினவண கணராவரொன்மட்டுமே,,—இதுநேரசைமுதலாவந்தசெய்யுள். "மதிக ந கேர்முக மாதுகுயிலிந்து, வாதுசிந்து பகைசெய்வேமனம், கொதிகரு ருலையாகும்விழுமெழுவ - கோட்டி கொள்ளு மதனப்பயலையே, துதிசெ ம் பாங்கியர்ப்பார்த்துச் செவ்வாய்துடி - துடிகருங்கைவளை சோரும்பணி யிருக், ததிக்கும்பார்க்குங்கண் டாய்திருச்செந்தில்வாழ் - சந்தனுகல கந்தசுவாமியே,, இது நிரையசைமுதலா வந்தசெய்யுள்.

யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறு சோற்றானு
நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவருமன்னே
அருங்கலை யிரும்பா ணரகன்மண்டைத் துளைய
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண பார்வை சோர
அஞ்சொ னுண் டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
திருநிறத் தியங்கிய வேலே
அரசர்க் கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்பா டுநரு மில்லை
பாடுநர்க் கொன்றீ குநரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.

இஃது இடையிடையே யிருசீரடியு முச்சீரடியுமாய் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா. காமருசீரொன்று சிறப்பித்தவதனால் ஆசிரியப்பா நான்கிற்கும் ஏயென்னுமசைச்சொல்லானிறுவது சிறப்புடைத்து, பிறவெழுத்து மீறுய்வரப்பெறுமாயினுமெனக் கொள்க.

சூத்திரம்.

அகவ லிசையன வகவன் மற்றவை
ஏஓஈஆ வென்னையென் றிறுமே.

என்றார் தொல்காப்பியனார். எல்லாவடியு மொத்து நடைபெறு மாயினிலைமண்டிலம் எ-து எல்லாவடியுந் தம்முள்ளளவொத்து நாற்சீரடியாய்வருவது நிலைமண்டில வாசிரியப்பா எ - து.

நிலைமண்டிலவாசிரியப்பா.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

இஃதெல்லாவடியும் நாற்சீராயளவொத்து வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா. மண்டிலமெனினும், நிலைமண்டிலமெனினு மொக்கும். நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு என்னென்னு மசைச்சொல்லானிறுவது சிறப்புடைத்து மற்றொருசாரொற்றினானும் உயிரினானும், ஈறாய்வரவும் பெறுமெனக்கொள்க.

சூத்திரம்.

ஒத்த வடித்தா யுலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே
என்னென் கிளவியை யீறாப் பெறுதலு
மன்ன பிறவு மந்த நிலைபெற
நிற்கவும் பெறூஉ நிலைமண் டிலமே.

என்றாராகலின், நடுவொதியந்தத் தடைதருபாதத்தகவ லடிமறி மண்டிலமே எ-று. எல்லாவடியுமுதனடுவிறுதியாக வுச்சரிப்பினு மோசையும் பொருளும் பிழையாதுவருவ தடிமறிமண்டில ஆசிரியப்பா எ-று.

சூத்திரம்.

மனப்படு மடிமுதலாயிறின் மண்டிலம்.
என்ப தியாப்பருங்கலம்.

சூத்திரம்.

உரைப்போற் குறிப்பி னுணர்வகை யன்றி
யிடைப்பான் முதலீறென் றிவைதம்முண்
மதிக்கப் படாதன மண்டில யாப்பே.

என்றார் காக்கைபாடினியார்.

அடிமறிமண்டிலவாசிரியப்பா.

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிரா ரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சாரனாட நீவர லாறே.

இஃதெல்லாவடியு முதனடு விறுதியாக வுச்சரிக்க, ஓசையும் பொருளும் பிழையாதுவந்த அடிமறிமண்டில ஆசிரியப்பா.

உதாரண முதனினைப்பு.

நேரிசை யாகு நிலத்திலை மென்ப திணைக்குறட்பா
நீரின் சிறிய நிலைமைய தாநிலை மண்டிலப்பா
வேரலென் றுகும்விரைமலர்க் கோதைவில் லோர்நுதலாய்
சூரல்பம் மென்ப தடிமறி யாகத் துணிந்தனரே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே ஆசிரியப்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதநினைத்துக்கொள்க. (அ)

ஆசிரியப்பா வினம்.

தருக்கிய ருழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறெல் சீரகவல்
விருத்தங் கழிநெடி லுன்கொத் திறுவது மெல்லியலே.

ஆசிரியத்தாழிசையும், ஆசிரியத்துறையும், ஆசிரியவிருத்தமு மாமாறுணர்த்து தனுதலிற்று.

தருக்கியருழிசை மூன்றடி யொப்பன எ-று. தருக்கியவென்று சிறப்பித்தவதனால், அவை ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருவன சிறப்புடையன தனியேவரப்பெறுமாயினுமெனக் கொள்க.

சூத்திரம்.

மூன்றடி யொத்த முடிவின வாய்விடி
னொன்ற வகவற் றழிசை யாகும்.

என்ப தியாப்பருங்கலம்.

ஆசிரியத் தாழிசை.

கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்று நம்மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ

பாம்புகயி றக்கடல் கடைந்த மாயவன்
ஈங்கு நம்மானுள் வருமேலவன் வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லி நம்மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.

இவையொரு பொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

ஆசிரியத் தாழிசை.

வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ண நின்னிணை கழறொழுதனம்.

இது தனியேவந்த ஆசிரியத்தாழிசை, நான்கடியா யெருத்தடி நைந்து மிடைமடக்காயுமிடை யிடையே சுருக்கடியாயுந் துறையாம எ-து, நான்கடியாய் ஈற்றியலடிகுறைந்து வருவனவும, நான்கடியா யீற்றய லடிகுறைந்திடை மடக்காய்வருவனவும் நான்கடியா யிடை யிடைகுறைந்து வருவனவும், நான்கடியாயிடையிடைகுறைந் திடை மடக்காய் வருவனவும், ஆசிரியத்துறை எ-று. நான்கடியா யென்பதனை யெல்லாவற்றினோடுங் கூட்டி யிடைமடக்காயென்பதனை யொருகா லிருதலையுங் கூட்டி மத்திமதீபமாகப் பொருளுரைத்துக்கொள்க. சீர்வரையருத்திலாமையால் எனைத்துச்சீரானும் அடியாய்வரப் பெறுமெனக் கொள்க.

ஆசிரியத் துறை.

கரைபொரு கான்யாற்றங் கல்லதரெம் முள்ளி வருவிரான்
அரையிருள்யாமத் தடுபுலி யேறஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறு நுங்கைவேலஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுதலஞ்சுதும் வாரலையோ.

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத்துறை.

இஃதுமது.

வண்டுளர்பூந்தார் வளவகெழு செம்பூட் சேய்வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித் தனைந்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி வந்துநம் [தோன்யாரே
பணைடைப்பதிவி னவிப்பாகு படமொழிந்து படாந்தோ ன
[னறே.

இது நான்கடியாய் ஈற்றயலடிகுறைந் திடைமடக்காய் வந்த

இடைஇடைதுறையு மாசிரியத்துறை.

கொன்றூர்ந் தமைந்த குருமுகத் தெழினிறக குருதிக்
கோட்டின விருந்தாட பெருவகைக
குன்றுமென வன்றுமெனக் குமுறு நின்றன
கொடுந்தொழில வேழம

வென்றூர்ந் தமைந்த விரகிகொள் பிளபிளறந்
துளங்குவா ளிலங்கெயிற றழலுளைய
பருஉத்தகா ளிருப்பொன்னன வெகுருவ
கூழ்ச்சுழலா நீறன சுழிக்கண யாளி

சென்றூர்ந் தமைந்த சிறந்தி வயாவுருகிர்ப்
பொறியெருத் தெறுழ்வலி புலவுநா றழல்வாய்ப்
புகைவாமெனக் கனலாமெனப புகையா நின்றன
புலிமா னேற்றை

என்றுங் கிவையிவை யியங்கவி னெந்திறத்
தினிவகல் வேண்டலந் தனிவர லெனத்தலை

விலக்கலி னிறுவரை மிசையெறி குறும்பிடை
யிதுவென் னெனவது நோனூர் கரவிரவிடைக்
களவுளமது கற்றோரோதுங் கற்பன்றே.

இது நான்கடியாய் முதலடியு மூன்றாமடியும் பதினொன்கு சீரா யல்லாத வடியிரண்டும் பதினாறுசீரா யிடையிடைகுறைந்துவந்த ஆசிரியத்துறை.

ஆசிரியத் துறை.

இரங்குயின் குழவா லின்னிசையாழ் தேனு
அரங்கமணி பொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்கமணி பொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்சமென்செய்த திளவேனில்.

இது நான்கடியா யிடையிடைகுறைந்திடை மடக்காய்வந்த ஆசிரியதுறை.

சூத்திரம்.

கடையத னயலடி கடைதபு நடையபு
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
யிடையிடை குறையவு மகவற் றுறையே.

என்பு தியாப்பருங்கலம். குறைவிறுல்சீரகவல் விருத்தங்கழி நெடி லொன்கொத்திறுவது எ - து, கழிநெடிலடி நான்காய்த் தம்மு ள் ஒத்துவருவன ஆசிரியவிருத்தம் எ-று. குறைவிறுல்சீரென்று சிறப்பித்தவதனால் எண்சீரின் மிக்கசீரான்வந்த அடியெல்லாஞ் சிற ப்பிலவெனக் கொள்க.

அறுசீராசிரிய விருத்தம்.

விடஞ்சூழரவி னிடைநுடங்க மின்வாள் வீசிவிளையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிஙகன் கதிர்வேல்பாடு மாதங்கி

வடஞ்சேர்கொங்கைமலைதாந்தாம்வடிக்கண்ணீலமலர்தாந்தாந்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்மைத்தண்
[ணுமையே.

இஃதறுசீர்க்கழி நெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். கணி கொண்ட எ-து. எழுசீர்க்கழி நெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். மூவடிவினுல் எ-து. எண்சீர்க்கழி நெடிலடியான்வந்த ஆசிரிய விருத்தம். இடங்கையெஞ்சிலை எ-து, ஒன்பதின்சீர்க்கழி நெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம். கொங்குதங்கு எ-து, பதின்சீர்க்கழி நெடிலடியான்வந்த ஆசிரியவிருத்தம்.

சூத்திரம்.

கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின் தகவலாகும்.

என்ப தியாப்பருங்கலம். மெல்லியலே எ-து மகமேஉமுன்னிலை.

உதாரண முதனினைப்பு.

கன்று குணில்வா னுறத்தா ழிசையாங் கனைபொருகான்
என்றதும் வண்டுளர் பூந்தா ரிரங்கு குயின்முழவாக்
கொன்றூர்ந் தமைந்த வகவற் றுறைகுறை யாவிருத்தம்
பின்றாழ் குழலி விடங்கணி மூவடி வாதியவே

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே ஆசிரியப்பாவினினங் கட்டுக்காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (௧)

நேரிசையோத்தாழிசை-அம்போதரங்கவோத்தாழிசை.

தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமா
யிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோன்

மரபொன்று நேரடி முச்சீர் குறளடி வேமடுப்ப
தரவொன்று மல்குல தமபோ தரவகவொத் தாழிசையே.

துள்ளலோசைத்தாய் நேரீற்றியற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சி யுரிச்சீரும் வாராது, நிரைமுதலாகிய வெண்பா வுரிச்சீர்மிக்கு நேரடித்தாய்க் கலித்தளையும், அயற்றளையுந்தட்டுத் தரவுதாழிசையென்னு முதலுறுப்பும், அராகம், அம்போதரங்கம், தனிச்சொல் சுரிதகமென்னுந் துணையுறுப்புமுடைத்தாய், ஒத்தாழிசைக்கலி வெண்கலி கொச்சகக்கலியென்னும் வேறுபாட்டாற்கிடந்த, கலிப்பாக்களை உறுப்பினானும், ஓசையானும், பொருளானும, பெயர்வேறுபாடுணர்த்துவா னெடுத்துக்கொண்டார், அவற்றுள், இக்காரிகை, நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவும், அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவுமாமா றுணர்ந்துதனுதலிற்று.

தரவொன்று தாழிசைமூன்று தனிச்சொற்சுரிதகமாய் நிரலொன்றினேரிசை யொத்தாழிசைக்கலி எ - து முன்னொருதரவுவந்து, அதன்பின்பு மூன்றுதாழிசைவந்து, அதன்பின்னொரு தனிச்சொல் வந்து, அதன்பின்னாசிரியத்தானாவது, வெண்பாவானாவது, ஒருசுரிதகவுறுப்புப்பெற்றுவருவது நேரிசையொத்தாழிசைக் கலிப்பா எ-று. தரவெனினும், எருத்தமெனினுமொக்கும். தாழிசையெனினும், இடைநிலைப்பாட்டெனினுமொக்கும். தனிச்சொலெனினும், விட்டிசையெனினும், கூனெனினும், தனிநிலையெனினுமொக்கும். சுரிதகமெனினும், மடக்கியலெனினும், வாரமெனினும், வைப்பெனினும் போக்கியலெனினுமொக்கும்.

சூத்திரம்.

தந்து முன்னிற்றலிற் றரவேதாழிசை
யொத்தாழ்ந் திறினஃ தொத்தாழிசையே

தனிதர நிற்றலிற் றனிச்சொற் குனிதிரை
நீர்ச்சுழி போலநின்று சுரிந்திறுதலிற்
சோர்ச்சியில் புலவர் சுரிதகமென்ப.

என்று காரணக்குறிசொன்னரு முளரெனக்கொள்க. இனித் தரவுதாழிசைகட் கடிவரையறையாமாறு சுருங்கிற்று மூன்றடியென் னுங் காரிகையுட்போகநிச் சொல்லுதும்.

நேரிசையொத்தாழிசைக் கலிப்பா.

தரவு.

வானெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந்த கைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெருங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ,

தாழிசை.

சூருடைய கடுங்கானஞ் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே,

தாழிசை.

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே,

தாழிசை.

சிலம்படைந்த வெங்கானஞ் சிறிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே.

இவை மூன்றுந் தாழிசை. எனவாங்கு தனிச்சொல்.

சு ரி த க ம்.

அருளொன் றிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.

இது சுரிதகம். தரவுமூன் றடியாய்த் தாழிசைமூன் றுமிரண்டடி யாய்த் தனிச்சொற்பெற்று மூன் றடியாசிரியச் சுரிதகத்தாலிற்ற நே ரிசை யொத்தாழிசைக் கலிப்பா, வெள்ளைச்சுரிதகத்தாலிற்றன யாப் பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

சூ த் தி ர ம்.

தரவு தாழிசை தனிச்சொற் சுரிதக
மெனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி.

என்றாராகலின்.

சூ த் தி ர ம்.

தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொ லிடைகிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின் தொத்தா ழிசைக்கலி.

என்றார் மயேச்சுரர். நீர்த்திரைபோன் மரபொன்றுநேரடி முச் சீர் குறணடுவேமடுப்பத்து அம்போதரங்க வொத்தாழிசை எ - து, கரைசாரக் கரைசார வொருகாலைக் கொருகாற் சுருங்கிவருகின்ற நீர்த்தரங்கம்போல நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகிய[illegible]சை யடிகளைத் தாழிசைக்குந் தனிச்சொற்கு நடுவேதொடுத்துத் தரவு தாழிசை அம்போதரங்கம் தனிச்சொல் சுரிதகமென்னும் ஐந்துறு ப்புடைத்தாய்வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா எ-று. அரவொன்றுமல்குல் எ-து. மகடூஉமுன்னிலை.

மரபொன்று நேரடியென்று சிறப்பித்தவதனால். அசையடிதான் ஈரடியா லிரண்டும், ஓரடியானான்கும், மூச்சீரானெட்டும், இருசீராற் பதினாறுமாய்வருவது சிறப்புடைத்து, எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்டன, நான்குமெட்டுமாகச் சுருங்கி வரப்பெறுமாயினு மெனக்கொள்க.

சூத்திரம்.

ஈரடி யிரண்டு மோரடி நான்கு மூச்சீரெட்டு
மிருசீ ரிரட்டியு மச்சீர்குறையினு மம்போதரங்கம்.

என்றாராகலின். அம்போதரங்கமெனினும், அசையடியெனி னும்பிரிந் திசைக்குறளெனினும், சொற்சீரடியெனினும், எண்ணெ னினுமொக்கும.

சூத்திரம்.

அனைய வாகியவசையடி நான்குந்
தனியொடு தாழிசை யிடைவரு மென்ப.

அவற்றைப் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் ணென்று பெயரிட்டு வழங்குவாருமுளர்.

அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா.

தரவு.

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கோலமலி தடக்கையோய்,

தாழிசை.

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபணிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியோடு முடியிறப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ,

தாழிசை.

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ,

தாழிசை.

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துநிறம் வேறாக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ,

நாற்சீரடியம்போதரங்கம்-உ.

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்,

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை,

நாற்சீரோரடியம்போதரங்கம்-சு.

கிண்கலர் கதிர்முடி கனலுஞ் சென்னியை,

தன்சுட ருறுபகை தவிர்த்த வாழியை,
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை,
வலிமிகு சகட மாற்றிய வடியினை,

முச்சீரோரடி-ச.

போரவுணர்க் கடந்தோய் நீ,
புணர்மருதம் பிளந்தோய் நீ,
நீரகல மளந்தோய் நீ,
நிழறிக ழைம் படைப்போய் நீ,

இருசீரோரடி-அ.

(க) ஊழி நீ, (உ) உலகு நீ, (ங) உருவு நீ, (ச) அருவு நீ,
(ரு) ஆழி நீ, (சு) அருளு நீ, (எ) அறமு நீ, (அ) மறமு நீ,

தனிச்சொல். எனவாங்கு.

சுரிதகம்.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று புரிகட லுலகமுழுதுடன்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே.

இது சுரிதகம், இஃதெட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்ட முச்சீரடியும், இருசீரடியும். நான்குமெட்டுமாய்வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

நலங்கிளர் திருமணியு நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரி மானெருத்தஞ் சோனையின்மேல்
இருபுடையு மியக்கரச ரிணைக்கவரி யெடுத்தசைப்ப
விரிதாமந் துயல்வருஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டரற்ற நாற்காதம வகைமாண வுணர்ந்தோங்கும
தண்டளிர்ப்பூம பிண்டிக்கீழ்க் கைபெறவீற் றிருந்தனையே.

என்னும் அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவினுளெட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்ட அம்போதரங்கங் குறையாதே வந்தவாறு யாப்பருங்கலவிருத்தியுட் கண்டுகொள்க.

சூ த் தி ர ம்.

நீர்த்திரை போலே நிரலே முறைமுறை
யாக்கஞ் சுருங்கி யசையடி தாழிசை
விட்டிசை விரியத் தொடுத்துச சுரிதகந்
தரக்கித் தொடுத்த தரவினோ டெனவும்
யாப்புற் றமைந்த வம்போத ரங்கம்.

என்றார் காக்கைபாடினியார்.

உதாரணமுதனினைப்பு.

வாணெடுங் கண்பனி நேரிசை யாகு மதர்த்திருண்டு
சேணுற வோடிக் குழையிட றிச்செறிச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடையநல்லாய்
ஏணுங் கெடலரு மாமுனி யமபோ தரங்கமென்னே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின்வழியே நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (க0)

வண்ணகவொத் தாழிசைக்கலிப்பா-வெண்கலிப்பா.

அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி யான்றவைதட்
டிசைதன தாகியும் வெணபா வியைந்துமின் பான்மொழியாய்
விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே.

வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவும், வெண்கலிப்பாவுமா மாறுணர்த்துதனுதலிற்று.

அசையடி முன்னரராகம்வந் தெல்லாவுறுப்புமுண்டேல் வசையறு வண்ணகவொத் தாழிசைக்கலி எ-து, அம்போதரங்கவுறுப்பிற் குந் தாழிசைக்கு நடுவே அராகவுறுப்புப்பெற்றுத் தரவு, தாழிசை, அராகம, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகமென்னுமா றுறுப் பினையுமுடைத்தாய் வருமெனினது வண்ணகவொத்தாழிசைக் கலி ப்பா வெனப்படும் எ-று. அராக மெனினும், வண்ணகமெனினும், முடுகியலெனினும், அடுக்கியலெனினுமொக்கும், வசையறுவண்ண கமென்று சிறப்பித்தவதனல், அராகவுறுப்புத்தானளவடி முதலா கிய எல்லாவடியானும், வரப்பெருமெனக்கொள்க. அடிவரையறை யாவது சிறுமைநான்கடி பெருமையெட்டடி இடையைந்தடியானும், ஆறடியானும், ஏழடியானும், வரப்பெறுமெனக்கொள்க.

சூத்திரம்.

அளவடி முதலா வனைத்தினு நான்கடி
முதலா யிரட்டியு முடுகிய னடக்கும்.

என்றாராகலின்.

வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

தரவு.

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்
றிளங்குமணிக் கிண்கழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப் [று

பருஉத்தடக்கை மதயானைப் பகட்டெழி லெரிகுஞ்சிக்
குருஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழுவார்க்கு மல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்,

தாழிசை.

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் பிரியாத மரபொத்தாய் காவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருநதடந்தோள் வனப்பழிய
வணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ,

தாழிசை.

அன்பினா லமிழ்தளை இ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமிழியையாய்க்
கருவரைத்தோள் கதிரப்பிக்குங் காதலுங் காதலோ,

தாழிசை.

பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளினின் றகுதியுந் தகுதியோ,

அராகம்.

தாதுறு முறிசெறி தடமலரிடையிடை தழலென விரிவன பொழில், போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி, தீதுறு திறமறு கெனநனி முனிவன துணை

யொடு பிணைவன துறை, மூதுறு மொலிகலி நுரைதரு திரை
யொடு கழிதொடர் புடையது கடல,

நாற்சீரிரண்டடியம்போதரங்கம் இரண்டு.

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி யிராவருதல வேண்டாமென் றுரைத்திலமோ,
கருநிறத் தடுதொழிற கராமபெரி துடைமையால்
இருணிறத் தொரு கான விராவார லென்றிலமோ.

நாற்சீரோரடியம்போதரங்கம் நான்கு.

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே,
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே,
அரற்றொடு கழிந்தன்றா லாிருளு மாயிழைக்கே,
நயப்பொடு கழிந்தன்றா னவதுவு நன்னுதற்கே,

முச்சீரோரடியம்போதரங்கம் எட்டு.

அத்திறத்தா லசைந்தன தோள்.
அலர்தற்கு மெலிந்தன கண்,
பொய்த்துரையாற புலர்ந்தது முகம்,
பொன்னிறந்தாற் றொலைந்தன முலை,
அழலினு லசைந்தது நகை,
அணியினு லொசிந்தன விடை,
குழலினு லவிர்ந்தது முடி,
குறையினாற் கோடிற்று நிறை.

இருசீரோரடியம்போதரங்கம் பதினாறு.

உட்கொண்ட தகைத்தொருபால்,
கட்கொண்ட டளித்தொருபால்,
பரிவுறாஉந் தகைத்தொருபால்,
இரவுறாஉந் துயரொருபால்,
மெலிவுறாஉந் தகையொருபால்,
பொலிவுசென் றகன்றொருபால்,
காதலிற் கதிர்ப்பொருபால்,
ஏதில்சென் றணைந்தொருபால்,
உலகறிந்த வலத்தொருபால்,
கழிவெய்தும் படித்தொருபால்,
படர்வுறாஉம் பசப்பொருபால்,
இளிவந்த வெளிரொருபால்,
விளப்புவந் தடைந்தொருபால்,
பொறைவந்து கூர்ந்தொருபால்,
கட்படாத் துய ரொருபால்,
இயனணிற் செறிவொருபால்,

தனிச்சொல். எனவாங்கு.

சுரிதகம்.

இன்னதிவ் வழக்க மித்திற மிவணல
மென்னவு மூன்றுட் டின்று யாகிக்

கலந்த வண்மையை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇத் தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகெனும் புணர்ச்சி தானே.

இது ஆறுறுப்புங் குறைவின்றிவந்த வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா.

சூத்திரம்.

அச்சொ லப்பட்ட வுறுப்போ டராகவடி
வைத்த நடையது வண்ணகமாகும்.

என்றார் காக்கைபாடினியார். வான்றளை தட்டிசைதனதாகியும் வெண்பாவியையந்தும், விசையறு சிந்தடியாலிறுமாய்விடின் வெண்கலியே எ-து, கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியும், வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும்வந்து ஈற்றடி முச்சீரானிறுமெனின் அது வெண்கலிப்பாவென்றும் கலிவெண்பாவென்றும் வழங்கப்படும் எ-று, இன்பான்மொழியாய் எ-து, மகடூஉமுன்னிலை.

விசையறு சிந்தடியென்று சிறப்பித்தவதனால், வேற்றுத்தளை தட்டுருகிவரவும்பெறும்.

கலித்தளையினைந்த வெண்கலிப்பா.

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையால் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையால்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடெடுகட் டிவையுரைத்த

தொன்மைசான் மிருகுணத்துத் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.

இது தன்றளையானுந், துள்ளலோசையானும், வந்தமையான் வெண்கலிப்பா.

கலி வெண்பா.

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடர்ச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லிரே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக் [ஞ
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்ட
செய்தானக் கள்வன் மகன்.

இது வெண்டளைதட்டு வெள்ளோசைதழுவி யொருபொருண் மேல் வந்தமையாற் கலிவெண்பா.

சூத்திரம்.

ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி முடிவது கலிவெண் பாட்டே.

என்றார் தொல்காப்பியனார்.

சூத்திரம்.

வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா வியலது வெண்கலி யாகும்.

என்றார் காக்கைபாடினியார். இனிப் பிறதளையான்வரு

வெண்கலிப்பா.

ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்துயவெள்
தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல
சீர்மலி கொடியிடை சிறந்து.

இது ஆசிரியத்தளையானும், தன்றளையானும்வந்த வெண்கலிப்பா, பிறவும் யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

உதாரண முதனினைப்பு.

நின்று விளங்கு மணிப்பசும் பொன்னிற மாறுறுப்பும
ஒன்றிய வண்ணக வொத்தா ழிசைகலி யோசைகுன்றாத்
துன்றிய வாளார் மழையுஞ் சுடர்த்தொடீஇ யேர்மலரும
என்றிவை வெண்கலிப் பாவிற் கிலக்கிய மேந்திழையே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவிற்

அ

கும், வெண்கலிப்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (கக)

கொச்சகக்கலிப்பா.

தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கணவம பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே.

தரவு கொச்சகக்கலிப்பாவும், தரவிணைக் கொச்சகக்கலிப்பாவும், சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவும், பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவும், மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவு மாமாறுணர்த்துதனுதலிற்று.

தரவே தரவிணைதாழிசை தாமுஞ் சிலபலவாய் மரபேயியன்று மயங்கியும் வந்தன எ-து, ஒருதரவுவந்தும், இரண்டுதரவுவந்தும், தாழிசை சிலவந்தும், தாழிசை பலவந்தும் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம் தனிச்சொல், சுரிதகமென்னு மாறுறுப்பும் தம்முண்மயங்கியும், வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடு மயங்கியும் வருவனவெல்லாங் கொச்சகக்கலிப்பாவென்று பெயரிட்டு வழங்கப்படும் எ-று. சொல்லின் முடிவினப்பொருண் முடித்தல் எ-து, தந்திரவுத்தியாகலின் தரவு கொச்சகமுதலாயின அப்பெயரானே வழங்கப்படுமெனக்கொள்க. ஒருதரவுவந்தால் தரவுகொச்சகக்கலிப்பாவென்றும், தரவிரண்டாய்வந்தால் தரவிணைக்கொச்சகக்கலிப்பாவென்றும், சில தாழிசைவந்தால் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவென்றும், பலதாழிசைவந்தால் பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவென்றும, தம்முண் மயங்கியும், பிறவற்றினோடு மயங்கியும் வருவனவெல்லா மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவென்றும் வழங்கப்படும். தாமுமென்று மிகுத்துச்சொல்லியவதனால் தனிச்சொல்லும், சுரிதகமும்

இடையிடை வரப்பெறுமெனக்கொள்க, மரபேயியன்றுமென்று சிற ப்பித்தவதனால், வரலாற்றுமுறைமையோடுங்கூட்டிக் கலியுறுப்பில் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும், கலியுள் வாராவென்ற நேரீற்றியற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும், ஐஞ்சீரடியும் வந்தொத்தாழிசைக் கலிப்பாக்களோடொவ்வாது வரு வனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவென்று வழங்கப் படும் எ-று, வாங்கமைத்தோள் குழலாய் எ - து, மகடூஉமுன்னிலை கொண்டவான்பெயர் கொச்சகமே எ - து, இறுதிவிளக்கெனக் கொள்க எ - று.

தரவு கொச்சகக்கலிப்பா.

தரவு.

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போன்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே.

இது சுரிதகமில்லாது முடிந்தது.

தரவு கொச்சகக்கலிப்பா.

தரவு.

சூடுநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தொன்றப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப,

தனிச்சொல் - எனவாங்கு

சுரிதகம்.

ஆனொடு புல்லிப் பெரும்புதர் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.

இது தனிச்சொல்லுஞ் சுரிதகமும், பெற்றுவந்த தரவுகொச்சகக் கலிப்பா.

தரவிணைக் கொச்சகக்கலிப்பா.

தரவு.

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாம
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே,

எனவாங்கு - தனிச்சொல்

தரவு.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் துறப்புண
கிணைமலர்த்தாரருளுமே லிதுவிதற்கோர்மாறென்று [டாங்
துணைமலர் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே,

அதனால் - தனிச்சொல்

சுரிதகம்.

செவ்வாய்ப்பேதை யிவடிறத்தெவ்
வாறுங்கொளலெண் ணெண்ணியவாறே.

இது இடையிடைத் தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தா லிற்ற தரவிணைக் கொச்சகக்கலிப்பா, சுரிதகமில்லாதது வந்தவழிக் கண்டுகொள்க.

சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

தரவு.

பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின்
மேற்றோன்றிக், குருஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்

ர் புடைசூழப், படைப்பரிமான் றேரினொடும் பரந்தவவு
றுகினிடைக், கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார்
ாமானே,

ஆங்கொருசார்

தாழிசை-க.

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங்கைக் காணாத காரணத்தான் மயங்கினரே,

ஆங்கொருசார்,

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே,

ஆங்கொருசார்,

ால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே,

அஃதான்று-தனிச்சொல்,

சுரிதகம்.

கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்
நின்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி

மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

இது நான்கடித்தரவும், மூன்றடித்தாழிசை மூன்றும், சுரிதகமுமாய் இடையிடைத் தனிச்சொற்பெற்று நேரிசையொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிதுவேறுபட்டு வந்தமையாற் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

தரவு.

தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முனைநாட்கட்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறையுகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ,

தாழிசை-சு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ,

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில விருப்பாளோ,

அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ,

நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ,

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ,

'சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ

ஏனவாங்கு - தனிச்சொல்,

சுரிதகம்.

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற வரியன வெறுக்கையு மற்றே
அதனால்
விழுமிய நறுமதி வாழி
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.

நாலடித்தரவும், இரண்டடித் தாழிசையாறும், தனிச்சொல்லும், நான்கடிச் சுரிதகமும்பெற்றுவந்த பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

தரவு-உ.

மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
துரைநிவந் *தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூறு மேமஞ்சார் துறைவகேள்,

மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சார் துறைவகேள்,

தா ழி சை - ௪.

கொடிபுரையு நுழைநுசிப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோ
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால், [ள

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் தெரியலனே யென்றியால்,

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றுருசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்,

கனைவரலாற் றிருகளைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யெனறியால்,

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்,

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்,

அ த னா ல் - த னி ச் சொ ல்,

அ ரா க ம்-௪.

அடும்பயி லிறும்பி னெடும்பணை மிசைதொறும்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு,

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்,

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொரு கடல்,

அலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலங்கெறி காலொடு புலம்பின பொழில்,

தாழிசை - க.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருமென் கேண்மையு நிறுப்பாயோ,

ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ,

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ,

மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுனையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்,

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்,

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

எனவாங்கு - தனிச்சொல்

அம்போதரங்கம் - அ.

பகைபோன்றது துறை, தகையிழந்தன தோள்,
பரிவாயின குறி, தலைசிறந்தது துயர்,
நகையிழந்தது முகம், புகைபரந்தது மெய்,
நனிகாணிற் றுளம், பொறையாயிற்றென் னுயிர்,

அதனால் தனிச்சொல்.

சுரிதகம்.

இனையது நினையா லினையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொல்லைய

பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிக்கவித் துன்னிய நோயே.

இது தாவிரண்டும், தாழிசையாறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், பெயர்த்தும ஆறுதாழிசையும், தனிச்சொல்லும், இருசீரோரடியெட்டம்போதரங்க வுறுப்பும்பெற்று நான்கடி ஆசிரியச் சுரிதகத்தாலிற்றுக் கலிகோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும், வந்தமையான் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா. வெண்பாவினேடும், ஆசிரியத்தினேடும்வந்த மயங்கிசைக் கொசசகக்கலிப்பா யாப்பருங்கலவிருத்தியுள் காமர்கடும்புனலென்னும் பழம்பாட்டிற் கண்டுகொள்க. இன்னுமரபே மியன்றுமென்று சிறப்பித்தவதனல், ஒரு போகுமுதலாவுடையனவற்றை யெல்லா மிதனற் பெயர்கொடுத்துக் கொசசகமென்று வழங்கப்படுமெனக் கொளக.

சூ த் தி ர ம்.

எருத்திய வின்றி யிடைநிலை பெற்று
மிடைநிலை யின்றி யெருத்துடைத் தாயு
மெருத்த மிரட்டித் திடைநிலை பெற்று
மிடைய திரட்டித் தெருத்துடைத் தாயு
மிடையு மெருத்து மிரட்டிற வந்து
மெருத்த மிரட்டித் திடைநிலை யாறு
யடக்கியல் காறு மமைந்த வுறுப்பிற்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயுந்
தரவொடு தாழிசை யம்போத ரங்க
முடுகியல் போக்கிய லென்றிவை யெல்லா
முறை தடுமாற மொழிந்தவை யின்றி
யிடையிடை வெண்பா சிலபல சேர்ந்து

மற்றும் பிறபிற வொப்புறுப் பில்லன்
கொச்சக மென்னுங் குறிப்பின வாகும்.

என்றார் காக்கைபாடினியார்.

சூத்திரம்.

தரவே தரவிணை தாழிசை சிலபல
வரன்முறை பிறழ வயற்பா மயங்கியுந்
தனிச்சொற பலவா யிடையிடை நடந்து
மொத்தா ழிசைகலி யுறுப்பினிற் பிறழ
வைத்த முறையான் வண்ணக விறுவாய்
மயங்கி வந்தனவு மியங்குநெறி முறைமையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர்.

ஓதப் பட்ட வுறுப்பு வகையெல்லா
மேதப் படாமற் கலிக்கியல் பெய்தி
மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும்
வண்ண முடியுந் தொடையு மயங்கியு
மடுக்கிய லந்தந் தொடுத்தன பல்கியுங்
கலிவயிற் கடிந்த சீரிடை மிடைந்து
நாற்சீ ரிறந்த சீரொடு சிவணியு
முச்சீ ரிருசீ ரம்போ தரங்க
மச்சீர் முடிவிடை யழிவில தழுவியுங்
கொச்சகக் கலியெனக் கூறவும் படுமே.

கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய விரண்டுந் தேவ பாணியுந்

தரவே யொழியினுந் தாழிசை யொழியினு
மிருவகை மூத்திறத் தெண்ணே நீங்கினு
மொருபோ கென்ப வுணர்ந்திசி னோரே
என்றாராகலின்
தரவின் றாகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு
மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு
மடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப.

என்றார் தொல்காப்பியனார். இவற்றிற் கிலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

உதாரண முதனினைப்பு.

குடநிலைத் தண்செல்வப் போர்க்கதக் கண்ணன் றரவுகுன்றா
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பருஉத்தடக்கை
இடமிக வாஞ்சிஃ றாழிசை தண்மதி யோர்பலவாய்
மடலவிழ் கோதை மணிகிளர் ராகு மயங்கிசையே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே கொச்சகக் கலிப்பாக் கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (கஉ)

கலிப்பாவினம்.

அடிமறை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிடைப்பிற்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே

நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யிரிரண்டாய
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே.

கலித்தாழிசையும், கலித்துறையும், கலிவிருத்தமுமாமாறுணர்த்துதனுதலிற்று.

அடிவரையின்றி யளவொத்துமந்தடி நீண்டிசைப்பிற் கடிதலில்லாக் கலித்தாழிசையாகும் எ - து, இரண்டடியும், பலவடியும்வந்து, ஈற்றடிமிக்கு, அல்லாதவடி தமமுளொத்தும், ஒவ்வாதும்வருவது கலித்தாழிசை எ-று. கடிதலில்லாக் கலித்தாழிசையென்று சிறப்பித்தவதனால், ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவருவது சிறப்புடைத்து, தனியே வரப்பெறுமாயினு மெனக்கொள்க.

கலித்தாழிசை.

கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்
ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்
மென்றினை காத்து மிருபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்.

இவையிரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தது.

கலித்தாழிசை.

வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போதி னெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போதி னெழாலாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறேவாழி வெண்டிங்காள்.

இஃது ஈற்றடிமிக்கு ஏனையடிமூன்று மொத்துவந்த அளவொத்து மென்ற வும்மையால் ஈற்றடிமிக்கு ஏனையடியொவ்வாது வரப்பெறு மெனவுங்கொள்க.

கலித்தாழிசை.

பூண்ட பூமறையறைப் பூக மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.

இஃதீற்றடிமிக்கு இரண்டாமடி குறைந்து முதலடியும், மூன்று மடியும், ஒத்துவந்தது சீர்வரையறுத்திலாமையால் ஏனைத்துச்சீரானு மடியாய் வரப்பெறுமெனக்கொள்க.

சூ த் தி ர ம்.

அடியெனைத் தாகியு மொத்துவந் தளவிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே.

என்ப தியாப்பருங்கலம்.

சூ த் தி ர ம்.

அந்தடி மிக்குச் சிலபல வாயடி
தந்தமு ளொப்பன தாழிசை யாகும்.

என்றாராகலின். கலித்துறையே நெடிலடிநான்காய் நிகழ்வது எ-து, ஐஞ்சீரடி நான்காய்வருவது கலித்துறை எ - று.

கலித்துறை.

யானுந் தோழியு மாயமு மாடுங் துறைநண்ணித்
தானுந் தேரும் பகனும் வந்தென் னலனுண்டான்

தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே.

வென்றான் வினையின் றொகையாகி விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின்னெழி யாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்.

இவை நெடிலடிநான்காய் வந்தது.

நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை

என்ப தியாப்பருங்கலம்.

ஐஞ்சீ ரடியி னடித்தொகை நான்மையோ
டெஞ்சா தியன்றன வெல்லாங் கலித்துறை.

என்றாகலின் நேரடியீ ரிரண்டாய் விடினதுவாகும் விருத்தம எ-து, நாற்சீரடி நான்காய்வருவது கலிவிருத்தம் எ - று. திருத்தகு மெல்லியலே எ-து, மகடூஉ முன்னிலை.

கலிவிருத்தம்.

வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலில்
ஆய்தலி லொண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தனர் மன்னர்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்.

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டேத்தமுந்
தாம்பழுத் துள்சில தவள மாடமே.

அளவடி நான்கின் கலிவிருத் தம்மே.
என்ப தியாப்பருங்கலம்.

உதாரணமுதனினைப்பு.

கொய்தினை யாய்தினை யென்றினை வாள்வரி பூண்டபறை
எய்திய தாழிசை யானும்வென் றானுங் கலித்துறையே
மைதிக ழோதி வரிநெடுங் கண்ண வனமுலையாய்
மெய்தரு வேய்தலை தேம்பழுத் தென்ப விருத்தங்களே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே கலிப்பாவினங்கட்குக் [illegible]டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க. (கரு)

வஞ்சிப்பா - வஞ்சிப்பாவினம்.

குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே.

வஞ்சித்தாழிசையும், வஞ்சித்துறையும், வஞ்சிவிருத்தமும், வஞ்சிப்பாவிற் கினமாமாறுணர்த்துதனுதலிற்று.

குறளடிநான்கின் மூன்றொருதாழிசைகோதில் எ-து, இருசீரடி நான்காய் மூன்றுசெய்யுள் ஒருபொருண்மேலடுக்கிவருவன வஞ்சித்தாழிசையாம் எ-று. கோதிலென்று மிகுத்துச்சொல்லியவதனால், அவையொரு பொருண்மேல் மூன்றடுக்கி யல்லது வாராவெனக் கொள்க.

வஞ்சித்தாழிசை.

"மடப்பிடியை மதவேழந்
தடக்கையான் வெயின்மறைக்கும்"

இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்.

பேடையை யிரும்போத்துத்
தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்.

இரும்பிடியை மதவேழம
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.

(இ)வை இருசீரடிநான்காய் ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந் தமையால் வஞ்சித்தாழிசை. வஞ்சித்துறையொருவாது தனிவருமாய் விடின் எ-து, இருசீரடிநான்காய் ஒருபொருண்மேலொன்றாய் வருவது வஞ்சித்துறை எ-று.

வஞ்சித்துறை.

மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்.

இது குறளடிநான்காய் ஒருபொருண்மேற் றனியேவந்தது.

சூத்திரம்.

குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரிற்
றுறையென மொழிப துணிந்திசி னோரே.

சிந்தடிநான்கறை தருகாலைவிருத்தம் எ - து, முச்சீரடி நான் காய்வருவது வஞ்சிவிருத்தம் எ - று.

வஞ்சிவிருத்தம்.

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்க ணிவள்வாழுமே.

இது சிந்தடிநான்காய் வந்தது.

சூத்திரம்.

சிந்தடி நான்காய் வருவன வஞ்சி
யெஞ்சா விருத்த மென்மனார் புலவர்.

என்பதியாப்பருங்கலம். தனிச்சொல்வந்து மறைதலில் வாரத திறைவிறும் வஞ்சி எ-து, குறளடிவஞ்சிப்பாவும், சிந்தடிவஞ்சிப்பாவும், தனிச்சொற்பெற்று ஆசிரியச்சுரிதகத்தாலிறும் எ-று. மறைதலில் வாரமென்று சிறப்பித்தவதனுல், வஞ்சிப்பா ஆசிரியச்சுரிதகத்தா லிறுவதல்லது வெள்ளைச்சுரிதகந்தா லிறப்பெறுதெனக் கொள்க.

குறளடி வஞ்சிப்பா.

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்

தனிச்சொல். நாலும்,

சூரிதகம்.

மகிழ்தூஉங் கூரன்
புகழ்தலாளுப் பெருவுண் மையனே.

சிந்தடி வஞ்சிப்பா.

கோடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளேயன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனுகி
எயினடுவ ணினிதிருந் தெவ்வுயிர்க்கும்
பயில்படுவினை பத்திமையிற் செப்பினேன்

தனிச்சொல். புனையெனத்,

சூரிதகம்.

திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி விடுநனி யெளிதே.

சூத்திரம்.

தூங்க லிசையன வஞ்சி மற்றவை
யாய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே.

என்பதியாப்பருங்கலம். அமுதேஎன்பதும், வஞ்சிக்கொடியே என்பதும் மகடூஉமுன்னிலை.

உதாரண முதனினைப்பு.

மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் றூழிசையாம்
புணா கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுளையாம்

தடப்பெருஞ் சோலை விருத்தம தாகுந் தயங்குவஞ்சிக்
கொடித்தொடி யூந்தா மனைகொடி வால னுதாரணமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே வஞ்சிப்பாவினங்கட்கும் காட்டிய இலக்கியங்களை முந்துணிந்துகொள்க. (கரு)

மருட்பா.

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவென னும்வையகமே

மருட்பாவாமா றுணர்த்துதனுதலிற்று. இதன்பொழிப்பு, புறநிலைவாழ்த்தும், கைக்கிளையும், வாயுறைவாழ்த்தும், செவியறிவுறூஉ மென்னும், நான்குபொருண்மேலும், வெண்பாமுதலாக ஆசிரியமீறாக வருமெனின் அதனை மருட்பாவென்று வழங்குவர் புலவர் எ-று வண்பான்மொழி மடவாய் எ-து, மகடூஉமுன்னிலை.

சூத்திரம்.

வெள்ளை முதலா வாசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்.

மருட்பா.

தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமலரை
முன்றின் முகைவிரியும் முத்தநீர்த்—தண்சோணாட்டுக்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்புறங் காப்ப
என்றுந் திரா நண்பிற் றேவர்
சீர்சால செல்வமொடு பொலிமதி சிறந்தே.

இது வழிபடுதெய்வநிற் புறங்காப்பப் பழிதீர்செல்வமோ டொருகாலைக் கொருகாற்சிறந்து பொலிமினென்றமையாற் புறநிலைவாழ்த்து மருட்பா.

சூத்திரம்.

வழிபடு தெய்வநிற் புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

என்றார் தொல்காப்பியனார்.

கைக்கிளை மருட்பா.

திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும்—அரிபரந்த
சேயித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.

சூத்திரம்.

காட்சி முதலாக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை யதுதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே.

வாயுரைவாழ்த்து மருட்பா.

பலமுறைய மேம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறையி னுண்ட நிகரில்லார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா

இலங்கு மெறிபடையு மாற்றலு மன்பும்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலன்செய் புனைகலனே டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத லியிருங் காண்மடர்--நினைத்தக்க
கூறியவெம் மொழிநினைழ யாது
தேறிநீ ரொழுகிற் சென்றுபயன் றருமே.

இது மெய்ப்பொருள் சொன்னமையால் வாயுறைவாழ்த்து மருட்பா.

சூத்திரம்.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தன்றே.

என்றார் தொல்காப்பியனார்.

செவியறிவுறூஉ மருட்பா.

பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரோடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிறல்
ஆளி நிமிர்தோட் பெருவழுதி யென்னுன்றும்
ஈர முடையை யென்வாய்ச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு

வருகாத லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத்தெளியல்
அமைத்த வரும்பொரு ளாறின்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற்சென்று
மன்ற மறுக வகழாதி யென்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப்பட் டேற்க வறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறிந்த வறிவினாய்—மற்றும
இவையிவை வீயா தொழுகு நிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் வியந்தொழுகுதல் கடனென வரசர்க்குணர்த்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா.

சூத்திரம்.

செவியுறைதானே பொங்குதலின்றிப் புரையோர் நாப்ப ணவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே.

என்றார் தொல்காப்பியனார், என்றிப் பொருண்மிசையென்று மிகுத்துச்சொல்லியவதனால், இந்நான்கு பொருண்மேலுமன்றி மருட்பா வரப்பெறுமெனக்கொள்க.

சூத்திரம்.

புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்

வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப.

என்றார் தொல்காப்பியனார். பண்பார் புறநிலையென்றும், ஒண்பரச்செவியறிவென்றுஞ் சிறப்பித்தவதனால் புறநிலைவாழ்த்தும, வாயுறைவாழ்த்தும், செவியறிவுறூஉம் இவ்வாறன்றி வெண்பாவேயாயும், ஆசிரியமேயாயும் வரப்பெறும். கலியும், வஞ்சியுமாய் வரப்பெறாவெனக்கொள்க.

சூ த் தி ர ம்.

கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா
வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉமென் றவையு மன்னே.

பாங்குடைக்கைக்கிளையென்று சிறப்பித்தவதனால், கைக்கிளையெல்லாப் பாவானும் வரப்பெறும், மருட்பாவேயாய் வருகவென்னும் யாப்புறவில்லையென்றும், கைக்கிளை வெண்பாமுதலாக வாசிரியமீறாக வரும்வழி ஆசிரியவடியிரண்டேயாய் அவற்றுள் ஈற்றயலடி முச்சீராய்வருமென்றும், வெண்பாவடியும், ஆசிரியவடியும், ஒத்துவருவன சமனிலைமருட்பாவென்றும், ஒவ்வாதன வியனிலைமருட்பாவென்றும் வழங்கப்படும். ஊனமில்லா வெண்பாவென்று சிறப்பித்தவதனால் வேற்றுவண்ணம் விரவாதுவெள்ளை வண்ணமெல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத்தாய், மங்கலமரபிற்றாய், அவ்வாறே வேற்றுத்தளையும் அடியும், சீரும், விரவாமையால், எல்லாப்பாவினுள்ளும் வெண்பா சிறப்புடைத்தென்று முன்வைக்கப்பட்டதென்பது அறிவித்தற்கு வேண்டப்பட்டது.

வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போல்

ஆசிரியல் பாவு மரசர் வியன்பாவும்
ஓதியவா றேத மருட்பாவா யோங்கிற்றே
பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையாற்
பண்ணின்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவல்
இசை மருட்கு மில்லை யினம்.

உதாரண முதனினைப்பு.

தென்ற லிடையுந் திருநுதல் வேர்வரும் பன்முறையென்
றொன்றிய பாவும்பல் யானையு மென்பவொண் போதமைந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்குஞ் செவியறி விற்கு மிலக்கியமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின்வழியே மருட்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

செய்யுளியல் செய்யுண்முதனினைப்பு.

வெண்பா வடம்பட வீரடி யொன்றுட னேரிசையும்
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
றண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே.

செய்யுளியல் முற்றிற்று.

மூன்றாவது.

ஒழிபியல்.

அலகொழிப்பு.

சீருந் தளையுஞ் சிதையிற் சிறியஇ உஅளபோ
டாரு மறிவ ரலகு பெறாமைய காரணைவேல்
ஓருங் குறிலிய லொற்றள பாய்விடி னோரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிழ்முலை வாணுதலே.

இவ்வியலென்ன பெயர்த்தோவெனின், உறுப்பியலுள்ளும், செய்யுளியலுள்ளும் சொல்லா தொழிந்தவைகளை யுணர்த்தினமையால் ஒழிபியலென்னும் பெயர்த்து. இவ்வியலுள் இக்காரிகையென்னுதலிற்றோ வெனின், ஒருசார ரெழுத்துகட் கெய்தியதோ ரிலக்கண முணர்த்துதனுதலிற்று.

சீருந்தளையுஞ் சிதையிற்சிறியஇஉ அளபோடாரு மறிவாரலகு பெறாமை எ - து, சீருந்தளையுங் கெடவந்தவிடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு காரியம்பெறா எ-று. ஒற்றளபாய்விடி னோரலகாமென் றுரைத்தமையால், ஈண்டு யிரளபெடை கொள்ளப்பட்டது. ஆருமறிவரென்று மிகுத்துச்சொல்லியவதனால் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஒற்றியல்பினவாய் நிற்கும். உயிரளபெடைகள் நெட்டெழுத்தியல்பினவாய் நிற்கும், லவிடேயிடத்தெனக்கொள்க. எனவே எதிரது மறுத்தலென்னும் இலக்கணத்தாற் சீருந்தளையுந் திருந்தநிற்புழிச் சிறியஇஉ அளபோ ருமறிவாரலகுபெறு மென்பதாயிற்று இன்னும், ஆருமறிவரென்று

மிகுத்துச்சொல்லியவதனுல். அவையலகு காரியம்பெறும்போது குற்றியலிகரமும், குற்றியலுகரமும், குற்றெழுத்தின்பயத்தவாம். உயிரளபெடை யலகுகாரியம் பெறுமாறு தங்காரிகையுட் போக்கிச் சொல்லுதும்.

குற்றிய லிகரம்.

சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்க ஞெனப்
பெறுநன்றி பின்னும பெரிதென் — றுறுநன்றி
தானவாய்ச் செய்வதுந் தான்மன் றென்பவே
வானவா முள்ளத் தவர்.

இதனுள், இன்றிவர்க்கியாமென்புழி குற்றியலிகரம்வந்து வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீராயிற்று. வெண்பாவினுள் வஞ்சியுரிசசீர் விரவுமென்னும், ஒத்தில்லாமையால் வெண்பா வழியசிற்குமாதலால், ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெறுதென்று களையச் சீர்சிதையாதாம்.

குற்றிய லிகரம்.

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

இவற்றுள், குழலினிதியாழினிதென்புழி, ஆசிரியத்தளையும், அருளல்ல தியாதெனில், என்புழிக்கலித்தளையுந்தட்டு வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ்சீர் கனிபுகிற்புல்லாத யற்றளையென்னும் இலக்கணத்தோடும் வெள்ளையுட்பிறதளை வாராவல்லன, வெல்லாத்தளையு மயங்கியும்வழங்கும். என்னுமிலக்கணத்தோடும், மாறுகொள்ளுமாதலால், ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெ

ருமென்று களையச்சீருந்தளையும சிதையாவாம். இனிக் குற்றியலுகர த்திற்குச் சொல்லுமாறு.

குற்றிய லுகரம்.

கொன்று கோடுநீடு குருதி பாயவும்
சென்று கோடுநீடு செழுமலை பொருவன
வென்று கோடுநீடு விறல் வேழம்
என்று மூடுநீடு பிடியுள போலும்
அதனால்
இண்டிடை யிரவிவ ணெறி வரின்
வண்டுண் சோதை யுயிர்வா ழலளே.

ஈரடி வஞ்சிப் பாவினுட் குற்றுகரம்வந்து, ஐந்தசைச சீரும், ஆறசைசசீருமாயின. இவ்வாறு வருகவென்னும் ஒத்தில்லா மையிற் குற்றுகரத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெறுமென்று களையச் சீருந்தளையுஞ் சிதையாவாம், இனி உயிரளபெடைக்குச் சொல்லுமாறு.

உயிரளபெடை.

பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோன்றினவாள்--நெல்லுக்கு
நூறோஒநூ றென்பா னுடங்கிடைக்கு மென்முலைக்கும்
மாறோமா லன்றளந்த மண்.

இதனுள் நூறோஒநூறென்புழிப் பண்டமாற்றின்கண் அளபெ டை யநுகரணம்வந்து வெண்பாவினுள் நாலசைச்சீராயிற்று, அவ் வாறு வருகவென்னும் ஒத்தில்லாமையால் இவ்வாறலகிட்டு உதார ணவாய்பாட்டால் ஓசையூட்டும்பொழுது ஓசையுண்ணாது செப்ப

லோசை பிழைத்து நிறகுமாதலால், ஈண்டு உயிரளபெடையை இவ விலககணத்தால் அலகுபெறுமென்று நெட்டெழுத்தேபோலக்கொ ண்டு அலகிடச சீரும் தளையுஞ் சிதையாவாம்.

வெண்பா.

இடை முடஙக வீங்கோதை பினறும வாட்கண
புடைபெயரப் போழவாய் திறந்து—கடைகடையில
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற
தொப்போ நீர்வேலி யுலகு.

இதனுள் உப்போஒவென்புழிப் பண்டமாற்றின்கண் அளபெ டை யநுகரணம்வந்து கலித்தளைதட்டு வெண்பாவழிய நிற்குமாத லின ஈண்டுயிரளபெடையை இவவிலக்கணத்தால் அலகுபெறுமெ னறு நெட்டெழுத்தே போலக்கொண்டு அலகிடத் தளை சிதையா தாம இனிக் குற்றியலிகர குற்றியலுகரங்கள், குற்றெழுத்தேபோல நின் றலகுபெறுமாறு.

வெண்பா.

வந்துநீ சேரி னுயிர்வாழும் வாராக்கால்
முந்தியாய் பெய்த வளைகழலும்—முந்தியாங
கோளானே கண்டநங் கோல்குறியா யின்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு

இதனுள், வந்துநீயென்புழிக் குற்றியலுகரமும, முந்தியாலென் புழிக் குற்றியலிகரமும் வந்து சீருந்தளையுந் திருத்திநிற்புழிக் குற் றெழுத்தின் பயத்தவாய் அலகுபெற்றவாறு கண்டுகொள்க.

சூத்திரம்.

தளைசீர் வணந் தாங்கெட வரினே

குறுகிய விகாரமுங் குற்றிய லுகாரமு
மளபெடை யாகியு மலகியல் பிலவே.

என்பதியாப்பருங்கலம். ஐகாரனைவே லோருங்குறிலியல் எ-து, ஒன்றரை மாத்திரையென் றோதப்பட்ட ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தேபோலக் கொண்டு அலகிடப்பெறும் எ-று. ஒருமென்பதிடைச்சொல்.

சூ த் தி ர ம்.

குறுமையெழுத் தினியல்பே
யைகா ரநெடுமை னீங்கியக்கால்.

எ ன் று ர ா க லி ன்.

ஐகாரக் குறுக்கம்.

அன்னை யையா னோவதவமா லணியிழாய்
புன்னை யையா னோவன் புலந்து.

நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுவி
அடைப்பையாய் கோறு வெனலும்--அடைப்பையான்
சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் றனைப்பெறினும்
கொள்ளாதி யாங்காண் டலே.

கெண்டையை வென்ற கிளரொளி யுண்கணாள்
பண்டைய ளல்லள் படி.

என்னும் இவற்றுள் ஐகாரக்குறுக்கம், குற்றெழுத்தேபோலக் குறிலோடும், நெடிலோடுங் கூடிநின்று நிரையசையாயினவாறும், தனியேநின்று நேரசையாயினவாறுங் கண்டுகொள்க. ஒற்றளபாய் விடினோர்காலம் எ - து, ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்து நேரசையாம் எ-று.

சூத்திரம்.

ஆய்தமு மொற்று மளபெழ நிற்புழி
யேறல் செய்தும் விதியின் வாகும்.

என்றார் காக்கைபாடினியார். அளபெழாதவிடத்து ஒற்றுக்கள் அலகுபெறா தென்பதாம.

சூத்திரம்.

தனிநிலை யொற்றிவை தாமலகியலா
வளபெடை யல்லா காலையான
ஈரொற் றுயினு மூவொற் றுயினு
மோரொற் றியல வென்மனார் புலவர்.

கார்க்கடல், கார்ச்சேதம், கதிர்ச்செந்நெல், கடாய்க்கன்று என ஈரொற்றுட னிலையாய்நிற்பினும் குற்றெழுத்தின் பயத்தவாயலகு பெறாதென்பதூஉம், ஒற்றளபெழினும், மற்றோரெழுத்தினோடுங்கூடி நிரையசையாகா தென்பதூஉம் பெறப்பட்டது.

கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குன் மேக்கு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு
எஃஃகி லங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு.

இவற்றுள் ஒற்றும், ஆய்தமும், அளபெழுந்து நிரலகுபெற்றவாறு கண்டுகொள்க. வாளும்வடமுந்திகழு முகிழ்முலைவாணுதலே எ-து, மகளேமுன்னிலை,

அசை.

விட்டிசைத் தல்லான முதற்கட் டனிக்குறி னேரசையென
றொட்டப் படாததற் குண்ணு னுதாரண மோசைகுன்று
நெட்டள பாய்விடி னோர் நிரையொடு நேரசையாம்
இடத்தி னுற்குறில் சேரி னிலக்கிய மோசிதைவே.

ஒருசார் அசைகட்கெய்தியதோ ரிலக்கண முணர்த்துதனுதலிற்று.

விட்டிசைத்தல்லான முதற்கட்டனிக்குறி னேரசையென்றொட்டப்படாது எ-து, மேற்பொதுவகையாற் றனிக்குறினேரசையென்றாயினும், விட்டிசைத்து நின்றவழியல்லது மொழிமுதற்கணின்ற தனிக்குற்றெழுத்து நேரசையாமென் றுடம்படப் பெறாது எ-று. எனவே விட்டிசையாதவழி மொழிமுதற்கட்டனிக் குறில் குறிலோடு நெடிலோடுங்கூடி நிரையசையா மெனப்பதாயிற்று. அதற் குண்ணுனுதாரணம் எ-து.

வெண்பா.

உண்ணு னொளிநிற் ணோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

இதனுள் அ-ஆ, என்புழி யருளின்கட் குறிப்பாய் மொழிமுதற்கணின்ற குற்றெழுத்து விட்டிசைத்து நேரசையாயினவாறும், அல்லாதவழி குறிலோடு நெடிலோடுங்கூடி நிரையசையாயினவாறுங் கண்டுகொள்க.

வெண்பா.

வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளு
மறிமுலை யுண்ணாமை வேண்டிப்—பறிமுன்கை
அஉ மறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ.

அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால்
எஎவனை வெலலாரிகல்.

இவற்றின்கட் டனிக்குறின் முதற்கண்விட்டிசைத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க. இவற்றுள் அஉமறியாவென்பது தற்சுட்டுக் குறிப்புச்சொல், நொ என்பது செயவெனெச்சத் திறுதிதொகரு முதனிலைகுறுகிய ஏவற்குறிப்புச்சொல், அஇஉஎ என்பன சுட்டு வினாவாகிய குறிப்புச்சொல். ஒட்டப்படாவென்று மிகுத்துச்சொல்லியவதனான், மொழிக்கு மூன்றிடத்தும், விட்டிசைத்துவந்த குற்றெழுத்து நேரசையாமென்பதூஉம், விட்டிசைப்பதுதான் குறிப்பு ஏவல் தற்சுட்டு வினாசுட்டென்னு மைந்தன்கண்ணு மென்பதூஉம், குற்றெழுத்து விட்டிசைத்துநின்றவிடத்து மற்றோரெழுத்தினோடுங் கூடி நிரையசையாகா தென்பதூஉம் பெறப்பட்டது.

சூத்திரம்.

அஇஎஉஒ இவைகுறிய மற்றையவேழ்
நெட்டெழுத்தா நேரப் படும்.

இதனுண் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்துவந்த குற்றெழுத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க. இவைதற்சுட்டு ஏவல்வந்தவழிக் காண்க.

சூ த் தி ர ம்.

ஏவல் குறிப்பே தற்சுட்டல் வழி
யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா.

என்றார் மயேச்சுரர். ஓசைகுன்று நெட்டளபாய்விடினேர்நேர் எ-து, நெட்டெழுத்தளபெழுந்து வருமெனி னஃது இரண்டுநேரசையாக வைக்கப்படும் எ-று. ஓசைகுன்றுமென்று மிகுத்துச்சொல்லியவதனால், மூன்றுமாத்திரையின் மிகவுச்சரிப்பினு நேர்நேராக வைக்கப்படுமெனக்கொள்க. நிரையொடு நேரசையா மிட்டத்தினுற குறில்சேரின் எ - து, குற்றெழுத்தினேடு புணர்ந்தநெட்டெழுத்து அளபெழுந்தா லவ்விரண்டனையுங்கூட்டி நிரையசையும் நேரசையுமாக வைக்கப்படும் எ-று. இலக்கியமோர்சிறைதவே.

வெ ண் பா.

ஏஎர் சிறைய வழாஅ லெழாஅநின்
சேயரி சிந்திய கண்,

இப்பாட்டு நேர்நேராதற்கும் நிரைநேராதற்கும் இலக்கியமாமென்க. ஏஎர்-என நேர்நேராயிற்று. அழாஅல் எழாஅ என நிரைநேராயிற்று. இட்டத்தினுவென்று மிகுத்துச்சொல்லியவதனால், பின்னின்றகுறிலோடும் நெடிலோடுங்கூடி அளபெடை நிரையசையாகாதெனக்கொள்க.

சூ த் தி ர ம்.

தனிநிலை யளபெடை நேர்நே ரியற்றே
யிறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே
யிறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே.

என்றார் நத்தத்தனார்.

சீர் - தளை.

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையும தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

சீருந்தளையுஞ் செய்யுளகத்து நிற்பதோர் முறைமை யுணர்த்து

மாஞ்சீர் கலியுட்புகா எ - து, தேமா புளிமாவென்னும் நேர்ற் றியற்சீரிரண்டும், கலிப்பாவினுட் புகப்பெறா எ-று. கலிப்பாவின் விளங்கனிவந்தாஞ்சீரடையா எ - து, கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரிரண்டும், கலிப்பாவினுட்புகப் பெறா எ-று. அகவலகத்தும் எ-து, ஆசிரியப்பாவினுள்ளும், கருவிளங்கனி கூவிளங்கனியென்னு மிரண்டுசீரும் புகப்பெறா எ-று. அல்லாதவெல்லாந் தாஞ்சீர்மயங்கும் எ-து, இவையொழிந்தசீர்களெல்லாம் பாவினுள்ளும் பாவினத்துள்ளும்வந்து மயங்கப்பெறும் எ-று. தளையுமதே எ-து, எல்லாத்தளையும், எல்லாப்பாவினுள்ளும், எல்லாப்பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும் எ-று. வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ்சீர்கனிபுகில் எ-து, எல்லாச்சீரும் எல்லாப்பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறுமென்றாராயினும், வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவிற்புகப்பெறா புகிற் செப்பலோசையழிந்து வேறுபட்ட ஓசையையுண்ணுதுகெடும் எ-று. புல்லாதயற்றளை எ-து, எல்லாத்தளையும் எல்லாப்பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறுமென்றாராயினும், வெண்பாவில் இயற்சீர்வெண்டளையும், வெண்சீர்வெண்டளையுமல்லது வேற்றுத்தளை விரவாது எ-று. பூங்கொடியே ஏ-து, மகடூஉமுன்னிலை.

*குடமிலேத் தண்புறவில்—சென்றவாறே.

என்னுந் தரவுகொச்சகக்கலிப்பாவில் நேரீற்றியற்சீரும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும், வாராது நிரையீற்றாசிரிய வுரிசசீரும், வெண்டாவுரிசசீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும்வந்து வெண்டளையும், ஆசிரியத்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையு மயங்கிவந்த வாறு கண்டுகொள்க.

ஆசிரியப்பா.

நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீழ்க்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய விருங்கழைப்
படிகம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவி லென்னையர் மலையே.

இவ்வாசிரியத்துள் தன்சீரும், வெண்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிசசீரும்வந்து வெண்டளையும், தன்றளையும், கலித்தளையும், வஞ்சித்தளையும் மயங்கிவந்தவாறு கண்டுகொள்க.

வஞ்சிப்பா.

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரும் வளியும்
வளிதலைஇய தீயும்
தீமுரணிய நீரும்
புன்காற் புணர்மருதின்

---

* இச்செய்யுளினை ககடு-வது பக்கத்திற்காண்க.

போதரும்பிய புனற்றாமரை
தேன்றாட்டக் கரும்பின்
பூந்தாட் புனற்றாமரை
வார்காற் செங்கழுநீர்.

இக்குறளடி வஞ்சிப்பாக்களுள், வெண்சீரும், தன்சீரும், நேரீற்றியற்சீரும்வந்து வெண்டளையும், தன்றளையும், கலித்தளையும், ஆசிரியத்தளையு மயங்கிவந்தவாறு கண்டுகொள்க.

* முழங்குதிரைக் கொற்கைவேந்தன்.

என்னும் வெண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும், இயற்சீரும், வெண்சீரும், வஞ்சித்தளையும், ஆசிரியத்தளையும், வெண்டளையும், கலித்தளையும் மயங்கிவந்தவாறு கண்டுகொள்க.

கலிவிருத்தம்.

வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்
நளிர்கொடியன நறுவிரையன நகுமலரன வகுளம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கோங்கம்
ஒளிர்கொடியன வுயர்தளிரினொ டொருகிணரன வோடை.

இக்கலிவிருத்தத்துள், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும், நேரீற்றியற்சீரும், வஞ்சித்தளையும், ஆசிரியத்தளையும், மயங்கிவந்தவாறு கண்டுகொள்க. நேரீற்றியற்சீர் ஒத்தாழிசைக்கலியுள் வாராதவாறும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கலிப்பாவுள்ளும், ஆசிரியத்துள்ளும் வாராதவாறும், வெண்பாவினுள்ளும், வஞ்சியுரிச்சீர் வாராதவாறும், வேற்றுத்தளை விரவாமையும், மேற்காட்டிய செய்யுளகத்தும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க. நேரீற்றியற்சீர் வெண்கலியுள்ளும், கொச்

* இச்செய்யுளினை அஎ-வது பக்கத்திற்காண்க.

சகத்துள்ளும் வருதலும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகத்துள்ளருகிவருதலும் செய்யுளோத்துள்ளே சொல்லப்பட்டன.

வெண்பா.

சூலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு வெண்மணன்மே னின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம்புக் காப்ப துரை.

இவ்வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர்வந்தன வாலோவெனின், திருவள்ளுவப்பயன் நாலடிநானூறுமுதலாகிய கீழ்க்கணக்குள்ளும், முத்தொள்ளாயிர முதலாகிய சான்றோர்செய்யுளுள்ளும், வஞ்சியுரிச்சீர் வந்திலாமையானும், வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வருகவென்னு மோத்தில்லாமையானும், வேற்றுத்தளை வெண்பாவினுள் வந்திலாமையானும், இத்தொடக்கத்தன குற்றமல்லது குணமாகாவென்பது காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு, அதுவே இந்நூலுடையார்க்கு முடன்பாடு.

சூத்திரம்.

இயற்சீர் நேரீற்றுத் தன்றளை யடைதல்
கலிக்கியல் பிலவே காணுங் காலை
வஞ்சி யுள்ளும் வரத்தகா வாயினு
மொரோ விடத் தாகு மென்ப.

என்றார் பல்காயனார். நிரைநடுவில்லா வஞ்சியுரிச்சீர், கலியினோடகவலிற் கடிவரையிலவே என்றாராகலின். (கூ)

அடி மயக்கம்.

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவற்றின்னான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்

கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
மயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே.

அடிமயக்க மாமாறுணர்த்து தனுதலிற்று.

இயற்றளை வெள்ளடி வஞ்சியின்பாத மகவலுள் மயக்கப்படா வல்ல எ-து, இயற்சீர் வெண்டளையான்வந்த வெண்பாவடியும், வஞ்சியடியும், ஆசிரியப்பாவினுள்வந்து மயங்கப்பெறும் எ-று.

சூத்திரம்.

இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே.

என்றார் தொல்காப்பியனார்.

சூத்திரம்.

வஞ்சி விரவ லாசிரிய முரித்தே
வெண்பா விரவினுங் கடிவரை யின்றே.

என்றார் பல்காயனார்.

ஆசிரியப்பா.

எறும்பி யளையுட் குரும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமிவ் வழுங்க லூரே.

இயற்றளைவெள்ளடி, இதனுள் எறும்பியளையுட் குறும்பல்சுனைய எ-து இயற்றளை வெள்ளடி இதனை எறும்பியளையுட் குறும்பல் சுனைய குறுந்தொடியாஞ் செல்சுரம் எனவுச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

ஆசிரியப்பா.

இருங்கட லுடுத்த பெருங்கண் மாநிலத்
துடைநிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்தம
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தோரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாவவிப் புழுக்கல்கைக்கொண்டு பிறர்க்குநோக்கா
திழி பிறப்பினோ னீயப் பெற்று
நிலங் கலனாக விலங்கு பலிமிசையு
மின்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே.

இதனுள் உப்பிலாவவிப் புழுக்கல் கைக்கொண்டு பிறர்க்கு நோக்கா எ-ம் இழிபிறப்பினோ னீயப்பெற்று எ-ம் வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டுகொள்க. மயக்கப்படுமென்றது மயக்கப்படா வல்லவெ

ன்றிருகால் விலக்கிச்சொல்லியவதனால் வெண்சீர்விரவிய இயற்றளை வெள்ளடியும் கலியடியும் ஆசிரியத்துள்ளருகி வரப்பெறுமெனக் கொள்க.

ஆசிரியப்பா.

அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்பு மனைக்கலங்கி
ஏதின் மாக்களு நோவார் தோழி
என்று நோவா ரில்லை
தண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே.

இதனுள், அங்கண்மதிய மரவின்வாய்ப்பட்டென எ-து, வெண்சீர்விரவிய வியற்றளை வெள்ளடி, இதனை அங்கண்மதிய மரவின் வாய்ப்பட்டெனப் பொங்கியபூசல்பெரிது எனவுச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

ஆசிரியப்பா.

குருகுவெண் டாளி கோடுபுயத் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணது
மருள்பிடி திரிதருஞ் சாரல்
அருளா னகுத லாயிழை கொடிதே.

இதனுள் இரண்டாமடிகலியடி, இதனை மாவழங்கு பெருங்காட்டு மழகளிறுகாணது, தீவழங்குசுழல் விழிக்கட்சீயஞ்சென் றுழலுமே, எனவுச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க. வஞ்சிமருங்கி னெஞ்சாவகவல் கலிப்பாதமுமண்ணும் எ-து, வஞ்சிப்பாவினுள் ஆசிரியவடியும், கலியடியும், விரவிவரப்பெறும் எ-று. எஞ்சாவகவலென்று சிறப்பித்தவதனல், வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும். கலியடியும், வெள்ளடியும், அருகியன்றி வாராவெனக்கொள்க. கயற்கணல்

லர்ய் எ-து, மகடூஉமுன்னிலை பட்டினப்பாலையென்னும் வஞ்சி நெடும்பாட்டினுள் ஆசிரியவடி பயின்றுவந்தன, கலியடியும் வெள்ளடியும் அருகினவெனக்கொள்க. நேரிழைமகளிருண் கண்கலுழும் என்றித் தொடக்கத்தன.

வயலாமை புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து:—

இதனை வயலாமை புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து, கயனாட்டக் கடைசியர்தங் காதலர்தோண் மணந்தனரே என வுச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க.

கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழாய்:—

இதனைக் கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை யாழிசூழ் வையக்கணி எனயுச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க. கலியினுள் முயக்கப்படு முதற்காலிருபாவும் எ-து, கலிப்பாவினுள் வெண்பாவடியும், ஆசிரியவடியும் புக்குமயங்கப்பெறும் எ-று. முறைமையினே எ-து, முறைமையோடுங்கூட்டி வழங்கப்படும் எ-று.

சூத்திரம்.

ஆசிரியப்பாவி னயற்பா வடிமயங்கும்
ஆசிரியம் வெண்பா கலிக்கண்ணும்—ஆசிரியம்
வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின்
ஒண்பா வடிவிரவா வுற்று.

இதனை விரித்துரைத்துக்கொள்க. காமர்கடும்புனலென்னு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவினுள் வெண்பாவும், ஆசிரியப்பாவும், மயங்கினவாறு கண்டுகொள்க. ஆல் இரண்டும் அசை.' (௬)

அடி-தொடை.

அருகிக் கலியோ டகவன் மருங்கினையுஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வாள்தமிழ் காவலர் மற்றொருசார்

கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புணர் வென்பதுவே.

ஒருசாரடிக்கும், தொடைக்குமெய்தியதோ ரிலக்கணமுணர்த் துதனுதலிற்று.

அருகிக்கலியோ டகவன் மருங்கினையுஞ், சீரடியும், வருதற்கு ரித்தென்பர் வான்றமிழ்நாவலர் எ-து, ஒருசார்கலிப்பாவினுள்ளும், ஆசிரியப்பாவினுள்ளும், ஐஞ்சீரடியு மருகிவரப் பெறுமென்று சொல் லுவர் புலவர் எ-று.

அணிகிளர் சிறுபொறியவிர் துத்திமாநாகத் தெருத்தமேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே.

இக்கலிப்பாவில் முதலடி ஐஞ்சீரடி வந்தவாறு கண்டுகொள்க.

ஆசிரியப்பா.

உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம பெருங்காட்
டின்னா வென்றீ ராயின்
இனிய வோபெரும் தமியேற்கு மனையே.

இவ்வாசிரியத்துள் முதலடி ஐஞ்சீர் வந்தவாறு கண்டுகொள்க. ...றியகட் பெறினேயென்னு மிணைக்குறள் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடி வந்ததெனக்கொள்க.

சூத்திரம்.

வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு
மைஞ்சீ ரடியு முளவென மொழிப.

என்றார் தொல்காப்பியனார். வெண்பாவினுள் ஐஞ்சீரடி வரப் பெறாதெனக்கொள்க.

சூத்திரம்.

ஐஞ்சீ ரடுத்தலு மண்டில மாதலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல.

என்று நந்தத்தனார் அடிநூலிலெடுத்தோதினார். மற்றொருசாரா கருதிற்கடையே கடையிணைபின் கடைகூழையுமென் றிரணத்தொடைக்கு மொழிவரிடைப் புணரென்பதுவே எ-து, ஒருசாராசிரியா முரண்டொடையைக் கடைமுரணும், கடையிணை முரணும், பின் முரணும், கடைக்கூழைமுரணும், இடைப்புணர் முரணுமென்று வேண்டுவர் எ-று.

இரணத்தொடை யெனினும், பகைத்தொடை யெனினும, மு ரண்டொடையெனினும் ஒக்கும்.

சூத்திரம்.

மொழியினும் பொருளினு முரணத் தொடுப்பி
னிரணத் தொடையென் றெய்தும் பெயரே
மறுதலே யுரைப்பினும் பகைத்தொடை யாகும்.

அவற்றுள் கடைமுரணாவது அடிதோறு மிறுதிச்சீர்க்கண் மறுதலைப்படத்தொடுப்பது, கடையிணைமுரணாவது கடையிருசீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது பின்முரணாவது, இரண்டாஞ்சீர்க்கண்ணும், நான்காஞ்சீர்க் கண்ணும், மறுதலைப்படத் தொடுப்பது, கடைக்கூழை முரணாவது முதற்சீர்க்கணின்றி யொழிந்த மூன்றுசீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது, இடைப்புணர் முரணாவது நடுவிருசீர்க்கண்ணும் மறுதலைபடத் தொடுப்பது.

ஆசிரியப்பா.

கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலை யிவளுந் தனிவடம் வெளிதே
நூலி னுண்ணிடை சுறிதே
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே.

இஃது அடிதோறு மிறுதிச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடைமுரண்.

ஆசிரியப்பா.

மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினை குழூஉம்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோர் காணலங் காண்டும்
பீரோர் வண்ணமுஞ் சிறுநுதற் பெரிதே.

இது அடிதோறுங் கடையிருசீர்கண்ணும் மறுதலைப்படத்தொடுத்தமையால் கடையிணைமுரண்.

ஆசிரியப்பா.

சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமியே யிருந்தன மாக நின்றுறுதன்
நலனுடைப் பணிமொழி நன்கு பலபயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனம் மேனியோ தீதே.

இது அடிதோறுங் கடைச்சீரும், இரண்டாஞ்சீரும், மறுதலைப்படத் தொடுத்தமையிற் பின்முரண்.

ஆசிரியப்பா.

காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே.

இது முதற்சீரொழிந்த மூன்றுசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால் கடைக்கூழைமுரண்.

ஆசிரியப்பா.

போதுவிரி குறிஞ்சிறி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்கல்வெள ளருவி
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விளாஇப்
பெருமலைச் சீறூ ரிழிதரு நலங்கலர்ந்
தின்னா வாயி னினியோர் மாட்டே.

இஃது இடையிருசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையா லிடைப்புணர்முரண், இவ்வாறுசொன்னார் கையனார் முதலாகிய வாசிரியரெனக்கொள்க. இனி இரணத்தொடைக்கு மென்றவுமையால் ஒழிந்த மோனை, இயைபு, எதுகை, அளபெடையென்னுந் தொடைகளா ன்கிற்று மிவ்வாறே யொட்டிக்கொள்க. அவைக் கூடிவழங்குமாறு கடைமோனை, கடையிணைமோனை, பின்மோனை, கடைக்கூழை மோனை, இடைப்புணர்மோனை எ - ம், கடையியைபு, கடையிணை யியைபு, பின்னியைபு, கடைக்கூழையியைபு, இடைப்புணரியைபு எ-ம், கடையெதுகை, கடையிணையெதுகை, பின்னெதுகை, கடைக்கூழையெதுகை, இடைப்புணரெதுகை எ - ம், கடையளபெடை, கடையிணையளபெடை, பின்னளபெடை, கடைக்கூழையளபெடை,

இடைப்புணரளபெடை எ-ம் கண்டுகொள்க. இவற்றிற் கிலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க. (ரு)

எதுகை-மோனை

வருக்க நெடிலின மந்தா லெதுகையு மோனையுமென்
றுருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயி ராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்று மெழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றலுஞ் சிறப்பில நேரிழையே.

ஒருசாரெதுகைக்கும் மோனைக்குமெய்தியதோ ரிலக்கணமுணர்த்துதனுதலிற்று.

வருக்கநெடிலினம் வந்தாலெதுகையு மோனையுமென்றுருக்கப் பெயரானுரைக்கப்படும் எ-து, வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும், எதுகையும், மோனையுமாய்வந்தால் அவற்றை வருக்கவெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை எ-ம. வருக்கமோனை, நெடின்மோனை, இனமோனை எ-ம். பெயரிட்டு வழங்கப்படும் எ-று.

வெண்பா.

நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதிப்
பாடும் வண்டஞ்சி யகலும் பருவத்துத்
தொடார்தொடி நெகிழ்த்தா ருள்ளார் படரெல்லாப்
பாடமை சேக்கையுட் கண்.

இது டகரமெய் வருக்கவெதுகை.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

இது றகரமெய் வருக்கவெதுகை.

ஆவாவென்றே ஒருசாரார்:—

என்பதிரண்டா மெழுத்தொன்றாதாயினும் இரண்டாமெழுத்தின்மேலேறிய நெடிலொப்புமைநோக்கி நெடிலெதுகையென்று வழங்கப்படும். இனி இனவெதுகை மூன்றுவகைப்படும். வல்லினவெதுகையு, மெல்லினவெதுகையும், இடையினவெதுகையு மென வ-று. வெம்தக்கார்தகவிலா ரென்பதவரய ரெச்சத்தாற் காணப்படும், இது

வெண்பா.

அன்பினு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

இது மெல்லினவெதுகை.

வெண்பா.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இது இடையினவெதுகை. வருக்கமோனை முதலாகிய மூன்றும் வருமாறு.

ஆசிரியப்பா.

பகலே பூங்கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தர்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்

பூந்தார் மார்ப புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொங்கு சினந்தணியாப் பூது தலொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தியிப்
பொழுது வருகுவை யாயி
னற்றூர் மார்ப நீண்டலெங் கதுப்பே.

இது பகரமெய் வருக்கமோனை.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

இது முதலெழுத் தொன்றாதாயினும, முதலெழுத்தின்மேலே றிய நெடிலொப்புமைநோக்கி நெடின்மோனையென்று வழங்கப்படும். இனி இனமோனை மூன்றுவகைப்படும். வல்லினமோனையும், மெல் லினமோனையும், இடையினமோனையுமென்.

ஆசிரியப்பா.

கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திறை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே.

இஃதெல்லாவடியு முதற்கண்ணே வல்லெழுத்து வந்தமையான் வல்லினமோனையும், மெல்லினமோனையும், இடையினமோனையும வந்தவழிக் கண்டுகொள்க.

சூத்திரம்.

ஒருக்க நெடிலினம் வரையா ரண்டே
நெடிய பிறவு மினத்தினு மாகும்.

என்றார் பிறருமெனக்கொள்க, ஒருக்கப்பெயராளென்று சிறப்பித்தவதனால் ஒருசாராசிரியர் தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை என்றும் தலையாகுமோனை, இடையாகுமோனை, கடையாகுமோனை என்றும் வேண்டுவரெனக்கொள்க.

சூத்திரம்.

சீர்முழு தொன்றிற் றலையா கெதுகை
யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே.

என்றாராகலின். இச்சூத்திரத்தான் மோனைக்கும் இவ்வாறே விரித்துரைத்துக்கொள்க.

வெண்பா.

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது.

எ-து, தலையாகெதுகை.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

எ-து, இடையாகெதுகை.

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

எ-து, கடையாகெதுகை.

பற்றுக பற்றற்றான் பற்றினையப் பற்றைப்
பற்றுகப் பற்றுவி டற்கு.

எ-து, தலையாகுமோனை.

ஆசிரியப்பா.

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தன்றே.

எ-து, இடையாகுமோனை.

ஆசிரியப்பா.

பகலே பூங்கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நகைஇப்
பூந்தார் மார்ப புணர்த்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாலமுங்கு பெருங்காட்டுப்

பைங்க ணுழுவைப் படுபகை
பொங்கு சினந்தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தியிப்
பொழுது வருகுவை யாயி
னற்றார் மார்ப நீண்டலெங் கதுப்பே.

எ-து, கடையாகுமோனை.

உயிராசிடை யிட்டிருக்கு மொருசாரிரண்டடி மூன்றாமெழுத் தொன்றி நிற்குமெதுகையென்றாலுஞ் சிறப்பில் எ-து உயிரெது கை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடியெதுகை, மூன் றாமெழுத்தொன்றெதுகை யென்றொரு சாரெதுகையு முளவாயி னும் பெறியதோர் சிறப்பிலவெனக்கொள்க. நேரிழைபே எ-து மக டூஉமுன்னிலை.

ஆசிரியப்பா.

துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநாள்
அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடிவமை யெஃகம் வலன்வயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே.

இஃதிரண்டாமெழுத் தொன்றாதாயினும், இரண்டாமெழுத் தின் மேலேறிய வுயிரொன்றிவந்தமையால் உயிரெதுகை, இனி ஆசெதுகை, யரலழவொற்றுநான்கும் ஆசாய்வருமெனக் கொள்க.

சூத்திரம்.

யரலழ வென்னு மீரிரண் டொற்றும்

வரன்முறை பிறழாது வந்திடை யுயிர்ப்பினஃ
தாசிடை யெதுகையென் றறைதல் வேண்டுமே.

என்றாராகலின,

விருத்தம்.

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறிவருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப்பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற்றிசை போயதுண்டே.

இது யகரவொற்றிடை வந்த ஆசெதுகை.

கலிவிருத்தம்.

மாகமெகாடி யானையு மௌவற பந்தரும்
காாகமகாடி முல்லையுங் கலந்து மலலிகைப்
பூகமகாடிப் பொதுமபருங் கான ஞாழலும
தூகமகாடி கமழ்ந்துதான் றுறககமொத்ததே.

இது ரகரவொற்றிடைவந்த ஆசெதுகை.

வெண்பா.

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பாலவே றுருவின வலலவாம—பால்போல
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல
உருவுபலகொள ளீங்கு.

இது லகரவொற்றிடைவந்த ஆசெதுகை.

வெண்பா.

அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாழ்க்கை—யந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று.

இது ழகரவொற்றிடைவந்த ஆசெதுகை.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

இது ஆகிடையிட்டுவந்த வல்லினவெதுகை, பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. இடையிட்டெதுகை வருமாறு.

ஆசிரியப்பா.

தோடா ரெல்வளை நெகிழ நாளு
நெய்த லுண்கண் பைதல் பழங்க
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக றோறும் பைபயப் பெருகி
நீடா ரிவரென நீண்மணங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி
வாடாப் பௌவ மறன்முகந் தெழிலி
பருவம் பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே.

இஃது அடிதோறும் இடையிட்டுவந்தமையால் இடையிட்டெதுகை. இது தொல்காப்பியனார்காட்டிய பாட்டு.

விருத்தம்.

தாதுவண்ணமிடையிட்டுவந்த வெதுகைத்தாகும்.

என்றாராகலின். இரண்டடியெதுகை வருமாறு.

துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிற்
அவைப்பதம் பல்லிற் கழுகொவ்வா முத்தம்
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும வேலின்
அணங்கு மமுதமு மன்னலார் பாடல்.

இதுமுன் இரண்டடியுமோரெதுகையாய்ப் பின் இரண்டடியுமோரெதுகையாய் வந்தமையால் இரண்டடி எதுகை.

சூத்திரம்.

இரண்டடி யெதுகை யிரண்டொருங் கியன்றபின்
மூரண்ட லெதுகை யிரண்டில வரையார்.

என்றாராகலின். மோனைக்குமவ்வாறே யொட்டிக்கொள்க.

விருத்தம்.

ஆகங் கண்டக ராளற்ற வாடவர்
ஆகங்கண் டகத்தா லற்ற வன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதர நண்ணினர்.

இதுமுன் இரண்டடியும் ஒருமோனையாய்ப் பின்இரண்டடியு மற்றொருமோனையாய் வந்தமையால் இரண்டடிமோனை.

வெண்பா.

பவழமும் பொன்னுங் குழையிய முத்தின்
திகழுரும் பின்றனபுன் னை.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

இவை மூன்றுமெழுத்தொன்றெதுகை, சிறக்குமெதுகையென்று சிறப்பித்தவதனால், விட்டிசை வல்லொற்றெதுகையென்றும், விட்டிசைமோனையென்றும் வேண்டுவாருமுளரெனக்கொள்க.

வெ ண் பா.

பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணுமை
நொஅலைய னின்னாட்டை நீ.

இது வல்லொற்றடுத்தாற்போல விட்டிசைத்த குற்றெழுத்தினோடு புணர்ந்தமையால் விட்டிசைவல்லொற் றெதுகை.

வெ ண் பா.

அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்
எஎவனை வெல்லா ரிகல்.

இது முதலெழுத் திரண்டடிக்கண்ணும் விட்டிசைத்து வந்தமையால் விட்டிசைமோனை. இவையெல்லாஞ் சிறப்பிலவெனக்கொள்க. இன்னுமொருக்கப் பெயரானுணாக்கப்படுமென்று சிறப்பித்தவதனால் பாவினங்களெல்லாந் தொடையானும், வருமென்றாராயினும் பெரும்பான்மையுந் தலையாகுமோனையிற்றிரிந்தும் தலையாகெதுகையிற்றிரிந்தும் வாராவென்பதூஉம் செந்தொடையொழித்தெல்லாத் தொடைக்கும் இனவெழுத்து வரத்தொடுப்பதூஉம், வழியெதுகை வரத்தொடுப்பதூஉம், வழிமுரண்வரத்தொடுப்பதூஉம் சிறப்புடைத்தெனக்கொள்க. இனவெழுத்துப்பெற்று மோனைமுதலாகிய தொடையுந் தொடைவிகற்பமும் போலாமை வேறுபடத்தொடுப்பது மருட்செந்தொடை எனக்கொள்க. இனவெழுத்தாமாறு ஞாண்மொத் குறிலும் நெடிலுந் தம்முளினமாம். அவை அகர-ஆகார-ஐகார-ஔ

காரங்க டம்முளினமாம். இகர-ஈகார-எகர-ஏகாரங்கள் தம்முளினமாம். உகர-ஊகார-ஒகர-ஓகாரங்கள் தம்முளினமாம். இவையேறிய வுயிர்மெய்க்கும் இவ்வாறேகொள்க. ஒற்றினுள் சகர தகரங்கள் தம்முளினமாம். ஞகர நகரங்கள் தம்முளினமாம். மகர வகரங்கள் தம்முளினமாம். இவற்றை அருவென்று வழங்குவாருமுளர்.

வெண்பா.

அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகார மெஏ-உகரமோ
டூகார மொஓ ஞநமவதச் சகரம்
ஆகாத வல்ல வரு.

என்றாராகலின் அவற்றுட் சிலவருமாறு.

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்
அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

இவை யினவெழுத்துப்பெற்று மோனை முதலாகியதொடையும் தொடைவிகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையான் மருட்செந்தொடை, பிறவுமன்ன இனிவழியெதுகை வருமாறு.

விருத்தம்.

மண்டலம் பண்டுண்ட திண்டோர் வரகுணன் றெண்டிரையின்வாய்க், கண்டலர் தண்டுறைக் கண்டதொன் றுண்டெனமகர, குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங் கொண்டோர் திங்கள், மண்டலம் வண்டலும் புக்கொண்டறுழ வருகின்றதே.

கோக்குதற்கு முதலாயினவுங்கொள்க. அருப்பிராச மென்னு ம்வடமொழியை வழியெதுகை யென்பது தமிழ்வழக்கு, இனி வழி முரண்வருமாறு.

விருத்தம்.

செய்யவாய்ப் பசும்பொன்றோலைச் சீரடிப்பரவை யல்குல்
ஐயநுண் மருங்குநோவ வடிக்கொண்ட ருவவுக்கொங்கை
வெய்யவாய்த் தண்மணனீலம் விரிந்தென விலங்கிநீண்ட
மையவர் மழைக்கட்கூந்தன் மகளிரை வருகவென்றான்.

ஒருமால்வரை நின்றிரு சுடரோட்டி முந்நீர்கிடந்த
பெருமானிலனுஞ் சிறுவிலைத்தா வுண்டு பேதையர்கண்
பொருமாதவித் தொங்கலெங்கோன் புரவலன் பூம்பொதியிற்
கருமாவிழிவெண்பற்செவ்வாய்ப் பசும்பொற்கனங்குழைக்கே.

மோனையெதுகையிற் பிரிந்து பாவுமினமும் வாராமை மேற் காட்டியவற்றுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

தரவுதாழிசைகட் கடிநியமம்.

சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே
தரங்கக்கும் வண்ணக் குந்தர வாவது தாழிசைப்பா
சுருங்கிற் றிரண்டடி யொக்க மிரட்டி சுரும்பிமிரும்
தரங்கக் குழலாய் சுருங்குந் தரவினிற் றாழிசையே.

தரவு தாழிசைகட்கு அடிவரையறையா மாறுணர்த்துதனுத லிற்று.

சுருங்கிற்று மூன்றடியேனைத்தரவு எ-து, அம்போதரங்கவொ த்தாழிசைக் கலிப்பாவும, வண்ணகவொத் தாழிசைக்கலிப்பாவும், ஒழித்தல்லாத கலிப்பாவிற்குத் தரவுமூன்றடியே சிறுமை, பெருமை பாடுவோனது பொருண்முடிவுகுறிப்பே வரையறையில்லை எ - று. இருமூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்குந் தரவாவது எ-து, அம் போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், வண்ணகவொத்தாழி சைக் கலிப்பாவிற்கும் பெருக்கசுருக்கமில்லை, ஆறடியே தரவாவது எ-று. சுருங்கிற்று மூன்றடியேனைத் தரவென்றாராயினும் வெள்ளைக் கிரண்டடியென்னுங் காரிகையுள், கலிப்பாவிற்கு நான்கடி சிறுமை சொன்னமையால் தரவுகொச்சகக்கலிப்பாவிற்கு நான்கடியே சிறு மை வருவதெனக்கொள்க. தாழிசைப்பா சுருங்கிற் றிரண்டடியொ க்கமிரட்டி எ-து, பொதுவகையாற் றாழிசைசொல்லிப்போந்தாராயி னும் தாழிசைகட் கிரண்டடி சிறுமை, நான்கடி பெருமை, இடைமூ ன்றடியானும் வருவது எ-று. சுரும்பி மிருதரங்கக்குழலாய் எ-து, மகடூஉமுன்னிலை சுருங்குந்தரவினிற்றாழிசையே எ-து, தரவடியிற் றாழிசையடி சுருஙகிவருவது எ-று. இவற்றிற்கிலக்கியமேற் காட்டிய வற்றுள்ளும் பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

கூனும் பிறவும்.

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி யிற்றி னு றிற்கு மினியொழிந்த
மருட்டர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப் [டியே.
பொருள்கோள்குறிப்பிசை யொப்புக்குறிக்கொள்பொலங்கொ

மேற்சொல்லப்பட்ட பாக்கட்கெல்லா மெய்தியதோ ரிலக்க ணமுணர்த்துதனுதலிற்று.

பொருளோ டடிமுதனிற்பது கூன் எ-து, அடிமுதற்கட்பாவி னது பொருளைத்தழுவித் தனியேநிற்பது கூனெனப்படும் எ-று.

அதுவே பொருந்தி யிருள்சேர்விலா வஞ்சியீற்றினுநிற்கும் எ-து, அக்கூன் வஞ்சிப்பாவினதடியின் இறுதிக்கண்ணும்நிற்கப்பெறும் எ-று. ஈற்றினுமென்ற வும்மையால், வஞ்சிப்பாவினடி நடுவினுங் கூன்வரப் பெறுமெனக்கொள்க. இருள்சேர்விலா வஞ்சியென்று சிறப்பித்தவதனால், வஞ்சியடியின் நடுவும் இறுதியும் அசைகூனாய்வருவது சிறப்புடைத்து சீர்கூனாய்வரினும், உகரவிறுதியாகிய நேரீற்றியற்சீராயல்லது வாராவெனக்கொள்க. அசைச் சீரெல்லாப் பாவினுள்ளும் அருகியல்லது கூனாய்வாராதெனக்கொள்க. எனவே வெண்பா ஆசிரியம் கலியென்னு மிவற்றினிடையு மிறுதியுங் கூன்வரப்பெறாதெனக்கொள்க.

சூ த் தி ர ம்.

அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு
முடிய நிற்பது கூனென மொழிப.

வஞ்சியி னிறுதியு மாகு மதுவே
யசை கூனாகு மென்மனார் புலவர்.

பல்காயனார். கூனைத்தனிச்சொல்லென்று வழங்குவாரு முளர் என்றார்.

சூ த் தி ர ம்.

அடிமுதற் பொருள் பெறவருவது தனிச்சொ
லஃதிறுதியும் வஞ்சியு ளியலு மென்ப.

என்றாராகலின், கொச்சகக்கலியுள் ஓரடிமுழுதுங் கூனாய்வரப் பெறும் அவை சிறப்பிலவெனக்கொள்க.

வெ ண் பா.

உதுக்காண், சுரந்தானு வண்கைச் சுவணமாப் பூதன்
பரந்தானுப் பல்புகழ்ப் பாடி—இரந்தார்மாட்

டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளிதோ மழை.

வெண்பாவினுள் அடிமுதற்கண் உதுக்காணெனக் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

ஆசிரியப்பா.

அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.

என இவ்வாசிரியப்பாவின் அடிமுதற்கண் அவரே எ-ம், யானே எ-ம், கூன்வந்தவாறு கண்டுகொள்க.

கலிப்பா.

உலகி } பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவேபிறழினும்
னுள், } இருந்தகைய விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார்சிறுதகைமைசிறப்பெனினும்பிறழ்பின்றி
உறுதகைமை யுலகினுக்கோ ரொப்பாகித்தோன்றுமே.

இக்கலிப்பாவினுள், அடிமுதற்கண் உலகினுளெனக் கூன்வந்தவாறு கண்டுகொள்க.

வஞ்சிப்பா.

உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்

உறுதிவழி யொழுகுமென்ப
அதனால்,
நற்றிற நாடுத னன்மை
பறற யானையும் பரிவுறத் துறந்தே

இவ்வஞ்சிப்பாவினுள் அடிமுதற்கண் உலகேயெனச்சீர் கூறாய் வந்தவாறும்.

மாவழங்கலின் மயக்குற்றன வழி

என இவ்வஞ்சியடியி னிறுதிக்கண்வழியென, அசைகூறாய் வந்தவாறும.

கலங்கழாலிற் றுறை கலக்குற்றன

என இவ்வஞ்சியடியி னடுவிற்றுறையென, அசை கூறாய்வந்த வாறுங் கண்டுகொள்.

தேரோடத் துகள் செழுமினதெருவு.

இவ்வஞ்சியடியின திறுதிக்கட்டெருவு என வுகரவிறுதியாகிய இயற்சீர் கூறாயினவாறு கண்டுகொள்க.

காமர் கடும்புனலென்னுங், கொச்சகக்கலியுட் சிறுகுடியீரே சிறுகுடியீரே என வோரடியால் கூன்வந்தவாறு காண்க. பிறவுமன்ன இனியொழிந்த மருஉர்விகாரம் வகையுளிவாழ்த்து வசைவனப் புப்பொருள் கோள்குறிப்பிசையொப்புங் குறிக்கொள்க எ - து, மேலெழுத்தசைசீர் பந்தமடி தொடை பாவினங்கூறுவனென் றதிகாரம்பாரித்த காரிகையுள் ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கந்தீர வகுக்கப்பட்டவிகாரமும், வகையுளியும், வாழ்த்தும், வசையும், வனப்பும், பொருளும், பொருள்கோளும், குறிப்பிசையும், செய்யுளொப்

புமையு மாமாறு உபதேச முறைமையானுணர்க எ-று. பொலங்கொடியே எ-து, மகடூஉமுன்னிலை.

அவற்றுள், விகாரம் அறுவகைப்படும். வலித்தலும், மெலித்தலும், விரித்தலும், தொகுத்தலும், நீட்டலும், குறுக்கலுமெனை.

சூத்திரம்.

அந்நாற் செல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும் வழி வலித்தலும்
மெலிக்கும் வழி மெலித்தலும்
விரிக்கும் வழி விரித்தலுந்
தொகுக்கும் வழி தொகுத்தலும்
நீட்டும வழி நீட்டலும்
குறுக்கும் வழி குறுக்கலும்
நாட்டல் வலிய மென்மனார் புலவர்.

என்றார் தொல்காப்பியனார்.

குறுத்தாட் பூதஞ் சுமந்த
வறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழுதே.

இதனுள் குறுந்தாளெனற் பாலதனைக் குறுத்தாளென வலிக்கும்வழி வலித்தவாறும்.

தண்டை யினக்கிளி கடிவோள்
பண்டைய ளல்லண்மா னோக்கினளே.

இதனுள், தட்டையெனற் பாலதனைத் தண்டையெனமெலிக்கும்வழி மெலித்தவாறும்.

வெண்பா.

வெண்மணலெக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணுடி மண்டிலத் தூதாவி—லொத்திழியும்
தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார்
வண்ணங் கடைப்பிடியா தார்.

இதனுள் தண்டுறைவரெனற்பாலதனைத் தண்ணந்துறைவரென விரிக்கும்வழி விரித்தவாறும்,

வெண்பா.

பூத்தாட் புறவிற் புனைமதில் கைவிடார்
காத்தலிற் காவலரேனையார்—பார்த்துரூர்
வேண்டா வணக்கி விறன்மதிருன் கோடல்
வேண்டுமாம் வேண்டார் மகன்.

இதனுள் வேண்டாதாரைவணக்கி யெனற்பாலதனை வேண்டார் வணக்கியெனத் தொகுக்கும்வழி தொகுத்தவாறும்,

வெண்பா.

பாசிழை யாகம் பசப்பித்தான பைந்தொடி
மாசேன னென்று மனங்கொளீஇ—மாசேனன்
சேயிதட்கண்ணி தருதலாற் சேர்த்தியென்
னேய்தீர நெஞ்சின்மேல் வைத்து.

இதனுள் பச்சிழையெனற் பாலதனைப் பாசிழையென நீட்டும்வழி நீட்டியவாறும்,

வெண்பா.

யானையெழுத் தத்திருந்த விலங்கிலை வேற்றென்னன்
திருந்தார்நன் றென்றேன்றி யேன்.

இதனுள் தீயெனற்பாலதனைத் தியெனக்குறுக்கும் வழி குறுக்கினவாறுங் கண்டுகொள்க. பிறவுமன்ன. மருடீர் விகாரமென்று சிறப்பித்தவதனால், வரலாற்று முறைமையோடுங்கூடிப் பொருந்தி வாராநின்றனவல்லது நுவைக்குப்பாலில்லை யெனற்பாலது தூவைக்குப் பாலில்லையென்றாற்போலப் புணர்க்கப்படாதென்க. இன்னு மருடீர் விகாரமென்று சிறப்பித்தவதனால் தலைக்குறையும், இடைக் குறையும், கடைக்குறையும் வருவனவுமுள. அவையும்வரலாற்று முறைமையோடுங்கூடி வழங்கப்படுமென்கொள்க.

மரைஇதழ் புரைய மஞ்செஞ்சீறடி.

இதனுள் தாமரையெனற்பாலதனை மரையெனத் தலைகுறைத்து வழங்கினவாறும்,

வேதினவெரிநி னோதி முதுபோத்து.

இதனுள் ஓந்தியெனற்பாலதனை, ஓதியென இடைகுறைத்து வழங்கினவாறும்,

அகலிரு விசும்பி னால்போல்
வாலிதின் மலர்ந்தன புன்கொடி முசுண்டை.

இதனுள் ஆரலெனற்பாலதனை யாலென இடைகுறைத்து வழங்கினவாறும்,

நீலுண் டுகிலிகை கடுப்ப.

இதனுள் நீலமுண்டுகிலிகைகடுப்ப எனற்பாலதனை நீலுண் டுகிலிகைகடுப்பவெனக் கடைகுறைத்து வழங்கினவாறுங் கண்டு கொள்க. பிறவுமன்ன. அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை யென் வழி நான்குசொல்லாவன இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்விவை.

சூத்திரம்.

இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுளி னீட்டச் சொல்லே.

அவற்றுள் இயற்சொல்லாவன சோறு, கூழ், பால், பாளிதம், என்பன.

சூத்திரம்.

இயற்சொற் றாமே யியம்புங் காலை
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே.

அவைநடக்கும் எல்லையாவையோ வெனின் வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாகிய நான் கெல்லைக்குட்பட்ட சோணாடென்ப.

சூத்திரம்.

மன்ற வாணன் மலர்திரு வருளாற்
றென்றமிழ் மகிமை சிவணிய செய்த
வடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநா டென்ப.

திரிசொல்லாவன அடுக்கல், பிறங்கல், ஓங்கல், விலங்கல், விண்டு, குவடெனவிவை, மலையென்னும் ஒருபொருள் குறித்தவேறு சொல். உந்தியென்பது ஆற்றிடைக்குறையும், கொப்பூழும், தேருருளும், யாழுந்தேருறுப்பும் எனுமிவை, வேறுபொருள்குறித்த ஒருசொல்,

சூத்திரம்.

ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி.

திசைச்சொல்லாவன, மயிலை மஞ்ஞையென்றுங், கிளியைக் கிள்ளையென்றும், தாயைத் தள்ளையென்றும், நாயை ஞமலியென்றும் வழங்குவனவாம்.

சூத்திரம்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்
தங்குறிப்பின வேதிசைச் சொற்கிளவி.

செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த பன்னிருகொடுந்தமிழ் நிலமாவன.

வெண்பா.

தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய்
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

இதை விரித்துரைத்துக்கொள்க. வடசொல்லாவன குங்குமம், மூலம், சங்கு, சந்தனம் என்பனவாம்.

சூத்திரம்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமமே
சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.

என்றார் தொல்காப்பியனார். வகையுளி எ-து, மூன்றும் பின்னும் அசைமுதலாகிய உறுப்புகள் சிற்புழியறிந்து குற்றப்படாமல் வண்ணமறுத்தலெனக்கொள்க.

வெண்பா

றகரு நீரா ரசைசீ ரடிக்கட
பொருணோக்கா தோசையே நோக்கி—மருணீக்கிக
கூமபவுங கூமபா தலரவுங கொணடியற்றல
வாயந்த வகையுளியின பாணபு

எனறாராகலின,

கடியாா பூஙகோதை கடாயினன் றிணடோ
சிறியாாதனு சிறறில சிதைத்து

இதனை கடியாா எ-ம, பூஙகோதை எ-ம, கடாயினன எ-ம் அலகிடின ஆசிரியததளையும, கலிததளையுந்தட்டு, வெளளைததன மை குன்றுமாதலால் கடியாாபூவென்று புளிமாங்காயாகவும, கோ தையென்று தேமாவாகவும, கடாயினனென்று கருவிளமாகவும அ லகிட்டுககொளக

வெண்பா.

மலாமிசை யேகினன் மாணடி சோநதாா
நிலமிசை நீடு வாழவாா.

இதனை நிலமிசை எ-ம, நீடு எ-ம, வாழவார் எ-ம, அலகிடின் ஆசிரியததளை தட்டு, வெணபாவி னிறுதிககண அசைசசீராகறபா லது இயறசீராய, ஈகரில் வெணளைககோரசைச சீருமொழிசோபிற பபு மொணகாசுமிறற சீருடைச சிந்தடியே முடிவாமெனனும, இல க்கணததோடு மாறுபடுமாதலின நிலமிசைஎனக கருவிளமாகவும, நீடுவாழஎனக கூவிளமாகவும, வார் என காவென்னும நேரசைச சீராகவும் அலகிட்டுககொள்க.

வெண்பா.

பாடுநர்க்கு மாடுநர்க்கும பண்டுதாங கொண்டவர்க்கும
ஊடுநர்க்குங் கூடுநர்க்கு மொத்தலால்-நீடுநீா

நல்வய லூர நறுஞ்சாந் தணிய
கலம் புல்லலி னாடலினிது.

இதனுள் கோரககரங்கள் பிரிந்திசைத்தனவாயினும, இரண்டி னையுக்கூட்டி நிரையசையாக அலகிடச் சீருந்தளையுஞ் சிதையவாம். அல்லாவிடின் நாலசைச்சீராய் வண்ணமழிந்து ஓசையுண்ணாது கெ டும், பிறவுமன்ன. வாழ்த்து இருவகைப்படும் மெய்வாழ்த்தும் இருபுற வாழ்த்துமென.

வெண்பா.

கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற பயன்கொலோ-கூர்நுனைவேய்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியார்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

இது மெய்வாழ்த்து.

வெண்பா.

பண்டுமொரு காற்றன்பைந் தொடியைக் கோட்பட்டு
வெங்கடம் வில்லேற்றிக் கொண்டுழந்தான்-தென்களந்தைப்
பூமாண் டிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ.

இஃதிரு புறவாழ்த்து. வசையும் இருவகைப்படும், மெய்வசை யும் இருபுறவசையுமென.

வெண்பா.

தந்தை யிலைச்சுமடன் றாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்கி தென்னைம் பட்டதுகொல்-முந்தை

அவியுணவி னார்தெரியி னுவதாங் கொல்லோ
கவிகண்ண னார்தம் பிறப்பு.

இது மெய்வகை.

வெண்பா.

படையொடு போகாது நின்றெறிந்தா னென்றும
கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான்-படையொடு
பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று
கோடிவழங்கு மகன.

இஃதிருபுறவகை. இனிவனப்பு எட்டுவகைப்படும். அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன் இழைபு என.

சூத்திரம்.

அம்மை யழகு தொன்மை தோல்விருந் தியையு
புலனிழை பெனவனப் பெட்டே.

அவற்றுள் அம்மையாவது, சிலவாய் மெல்லியவாய் சொற்களால் ஒள்ளியவாய்பொருண்மேற் சிலவடியாற் சொல்லியது.

சூத்திரம்.

சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னம்மை தானே யடிநிமிர் வின்றே.

என்றாராகலின்,

வெண்பா.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக்

அழகென்பது, செய்யுட்சொல்லாகிய இரிசொற்களானேனைச யினியவாகப் புணர்க்கப்பட்டது.

சூத்திரம்.

செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னவ்வகை தானே யழகெனப் படுமே.

என்றாகலின்,

ஆசிரியப்பா.

துணியிரும் பௌவங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பென விழிதரும்
கடுவரற் கலுழிநீந்தி
வல்லியம்வழங்குங் கல்லதர்நெறியே.

தோன்மை எ-ம், பழையதாகி நிகழ்ந்தபெற்றி புணர்க்கப்படுவது.

சூத்திரம்.

தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.

என்றாகலின்,

செறிதொடி யுவகை கேளாய்
செஞ்சுடர்த் தெறுகதிர்ச் செல்வன்.

என்பதூஉம், மாபாரதம் சாந்தம் போல்வனவுங்கொள்க. தோல் எ-து, இழுமென்னும் மெல்லியவாகிய சொற்களால் விழுமியவா

ய்க் கிடப்பனவும், எல்லாச்சொற்களானும் பலவடியாய்க் கிடப்பனவுமென விருதிறத்தவாம்.

சூத்திரம்.

இழுமெனு மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா லடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்.

என்றாராகலின்,

ஆசிரியப்பா.

பாயிருள் பரப்பகங் குறையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
தீமை யில்லை செய்வோ ரில்லை
செய்பொரு ளில்லை
அறிவோ ரியாரஃ திறவுழி யிறுகென.

இது மார்க்கண்டேயனார் காஞ்சி, இஃதிழுமெனுமொழியால் விழுமியது நுவன்றது.

திருமழை தலைஇய சென்ற வாறே
இதுபரந்த மொழியாலடி நிமிர்ந் தொழுகியது.

விருத்த எ-து, புதியவற்றின்மேற்று அஃதிப்பொழுது தன்னாளாப்பாவேது.

சூத்திரம்.

விருந்து தானே
புதியது புனைந்த யாப்பின் மேற்றே.

அவை வந்தவழிக் கண்டுகொள்க. இயைபு எ-து, ஞணநமன ரலவழள வென்னும் பதினொரு புள்ளியு மீறாகவந்தபாட்டு.

சூத்திரம்.

ஞகார முதலா ளகர வீற்றுப்
புள்ளி யிறுதி யியைபென மொழிப.

அவையும் வந்தவழிக் கண்டுகொள்க. புலன் எ-து இயற்சொல்லாற் பொருடோன்றச் சொல்லப்படுவது.

சூத்திரம்.

தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்,
புலனென மொழிப புலனுணர்ந் தோரே

என்றாராகலின்,

ஆசிரியப்பா.

பார்க்கடன் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தேர்
இன்றுசெலக் கடவுமதி பாகவுதுக் காண்
மாவொடு புணர்ந்தமாஅல் போல
இரும்பிடி யுழைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே.

இழைபு எ-து, வல்லொற்றியாதும் நீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடிமுதலாகப் பதினேழ் நிலத்தைக்கடியு முறையானே யுடைத்தாய் ஓங்கியசொற்களால் வருவது.

சூத்திரம்.

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடங்காது
குறளடி முதலா வைந்தடி காறு
மோங்கிய மொழியா னொவ்வன மொழியி
னிழைபி னிலக்கண மியைந்த தாகும்.

செய்யுளியலுடையார் நாற்சீரடிதன்னையே, நான்கெழுத்துமுதலா வாறெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுங் குறளடியென்றும, ஏழெழுத்துமுதலா ஒன்பதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுஞ் சிந்தடியென்றும், பத்தெழுத்துமுதலாப் பதினான்கெழுத்தின்காறும் உயர்ந்த ஐந்தடியும், அளவடியென்றும் பதினைந்தெழுத்து முதலாப் பதினேழெழுத்தின்காறு முயர்ந்த மூன்றடியும், நெடிலடியென்றும் பதினெட்டெழுத்து முதலா இருபதெழுத்தின்காறு முயர்ந்த மூன்றடியுங் கழிநெடிலடியென்றும் இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லையென்றும் வேண்டுவர். அவ்வெழுத்தெண்ணு மின்றுழிக் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் ஒற்றுமொழித்துநின்ற உயிரும் உயிர்மெய்யுங்கூட்டி யெண்ணப்படும்.

வெண்பா.

குற்றிகரங் குற்றுகரமென் றிரண்டு மாய்தமும்
ஒற்றுமென வொருநான் கொழித்துக் - கற்றோர்
உயிரு முயிர்மெய்யு மோதினர் கொள்ளச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு.

மூலமும்-உரையும்.

சூத்திரம்.

நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே
நாலெழுத்து முதலா வாறெழுத் தெல்லை
யேறிய நிலத்த குறளடி யென்ப
ஏறெழுத் தென்ப சிந்தடிக் களவே.

யீரெழுத் தேற்ற மவ்வழி யான
பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யுத்தநா லெழுத் தேற்றலங் கடையே.

மூவைந் தெழுந்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப.

மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத் தேற்ற மவ்வழியான.

ஈரிரண்டு மோரேழு மீரைந்து மூவைந்தும்
பாரியன்ற நாற்சீர் பதினெட்டும் - ஓரா
வினையும பதினேழ் நிலத்துக் குறளசிந்
தளவு கழிநெடிலோ டைந்து.

என்றாராகலின்,

ஆசிரியப்பா.

போந்து போந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி யோந்து
வண்டு சூழ விண்டு வீங்கி
நீர்வாய்க் கொண்டு நீண்ட நீலம்
ஊர்வா யூதை வீசலூர் வாய்
மதியேர் வண்டோ [illegible]ல்லி மாலை
கண்ணணைக் கெழும் பன்னெல் லூர
அமையேர் மென்றோ ளாயரி நெடுங்கண்

பிணையி ரோதி யேந்திள வனமுலை
இறும்ப மாமல ரிடையெழுந்த மாவின்
நறுந்தழை துயல்வருஉஞ் செறிந்தேந் தல்குல்
அணிநடை யசைஇய வரியமை சிலம்பின்
மணிமருள் வளர்குழல் வளரிளம பிறைநுதல்
லளிநிலவு யககிழைஇ யுருவுடை மகளொடு
களிமுழவு முழஙகிய வணிநிலவு மணிநகா
இருந்தளவு மலரளவு சுருமபுலவு நறுநதொடை
கலனளவு கலனாவு கலனளவு கலனளவு
பெருமணம புணர்ந்தனை யென்ப அஃதொரு
நீ மறைப்பி னொழிகுவ தனறே.

இனிப்பொருள் கோளென்பது உம்மைத்தொகை பொருளும பொருள் கோளுமெனை.

வெண்பா.

அருளல்ல தியாதேனிற கொல்லாமை கோரல
பொருளல்ல தவ்வூன் றினல்.

இதனுள் அருளும் அருளல்லதும் என உம்மைதொக்காறபோ லக்கொள்க. அவற்றுள் பொருளாவன, குறிஞ்சி கைக்கிளைமுதலிய அகமும் அகப்புறமும் வெட்சிபாடாண் பாட்டுமுதலிய புறமும் புறப்புறமுமாம். அவை அவ்விலக்கணங்கூறிய நூல்களிற் கண் டுகொள்க. இனிப்பொருள்கோள் ஒன்பதுவகைப்படும். நிரனிறை மொழிமாற்றும், சுண்ணமொழிமாற்றும், அடிமறிமொழிமாற்றும், அடிமொழிமாற்றும் பூட்டுவிற்பொருள்கோளும், புனல்யாற்றுப்பொ ருள்கோளும், அளைமறியாப்புப் பொருள்கோளும், தாப்பிசைப்பொ ருள்கோளும் கொண்டு கூட்டுப்பொருள்கோளுமெனை. இவற்றுள்நிர னிறையிரண்டுவகைப்படும் பெயர்நிரனிறையும் வினைநிரனிறையும என, அவற்றுள் பெயர் நிரனிறைவருமாறு.

வெண்பா.

கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்தமுகம் வாய்முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்.

வெண்பா.

காதுசேர் தாழ்குழையாம் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய-நீதியால்
மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றானை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்.

வெண்பா.

அடல்வேன்மா நோக்கி நின்முகங் கண்டே
உடலு மிரிந்தோடு முழுமலரும்-பார்க்கும்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்பும்
தடமதியமா மென்றுதாம்.

இனி முறைநிரனிறை, எதிர்நிரனிறை, மயக்கநிரனிறை, மிகை யெண்ணிரனிறை, குறையெண்ணிரனிறை என்று வேண்டுவாரு முளர், அவற்றுள் அடிநிரனிறை வருமாறு.

விருத்தம்.

கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனில்லைக்குஞ் சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க
ளிற்வெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்

காற்செறுழிலான யனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியாற் கரதலத்தாற் கணையாற் பின்னும்
ஊற்றழிய வுதைத்துரித்து நெரித்துச் சூடி
யுரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே.

சுண்ணமொழிமாற்று,

வெண்பா.

சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்துமுயற்கு நிலையென்ப
கானகநாடன் சுனை.

இதனுள் சுரையென்பதனோடு மிதப்பவென்பது பொருள்கொள்ளவும், அம்மியென்பதனோடு ஆழவென்பது பொருள்கொள்ளவும், யானையென்பதனோடு நிலையென்பது பொருள்கொள்ளவும், முயலென்பதனோடு நீத்தென்பது பொருள்கொள்ளவும் வந்தமையாற் சுண்ணமொழிமாற்று, இனி அடிமறிமொழிமாற்று.

சூரல் பம்பிய-கீவரலாறே.

என்னும் ஆசிரியம் வேண்டிற்றோரடியான் முதலாகச்சொன்னாலும் ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையா லடிமறிமொழி

இனி அடிமொழிமாற்று, ௰

ஆலத்துமேலகுவளை குளத்துளவாவி னெடியகுரங்கு.

என்பதனுள் ஆலத்துமேல குரங்குகுளத்துள் குவளையென்று இரண்டடியில் மொழிமாற்றிப் பொருள்கொண்டமையால் அடிமொழிமாற்று, இனிப்பூட்டுவிற்பொருள்கோள்.

வெண்பா.

திறந்திடுமின் தீயவைபிற் காண்மோதர்
இறந்துபடிற் பெரிதாமேதம்-உறந்தையர்கோன்

தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காண கதவு.

இதனுள் திறந்திடின் என்பதனோடு கதவு எ-து, நோக்குடைத்தாய்ப் பொருள்கொண்டமையாற் பூட்டுவிற் பொருள்கோள் இனிப்புனல்யாற்றுப் பொருள்கோள்.

வெண்பா.

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

இஃதடிதோறும் பொருளற்று வந்தமையாற் புனல்யாற்றுப் பொருள்கோள், இனியளைமறிபாப்புப் பொருள்கோள்.

விருத்தம்.

தாழ்ந்தவுணர்வின ராய்த்தாளுடைந்து தண்டேன்றித் தளர்வார்தாமும், சூழ்ந்தவினையாக்கை சுடவிளிந்துநாற்கதிற் சுழல்வார்தாமும், வீழ்ந்தபிணிநலியமுன் செய்தவினையென்றே முனிவார்தாமும், வாழ்ந்தபொழுதினே வானெய்துநெறிமுன்னி முயலாதாரே.

இதனுள் வாழ்ந்தபொழுதினே வானெய்துநெறிமுன்னி முயலாதாரென்னு மிறுதிச்சொல் இடைபுமுதலுஞ்சென்று பொருள் கொண்டமையால் அளைமறி யரப்புப்பொருள்கோள். இனித்தாப்பிசைப்பொருள்கோள்.

வெண்பா.

உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

இதனுள் ஊனை புண்ணுமை புள்ளதுயிர்கிலை எ-ம, ஊனையுண்ண வண்ணுத்தல் செய்யளறு எ-ம், தடுகின்ற ஊனென்னுஞ் சொல்முதலும் இறுதியுஞ்சென்று பொருள்கொண்டமையால் தாப பிசைப்பொருள்கோள் இனிக்கொண்டு கூட்டுப்பொருள்கோள்.

வெண்பா.

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல
வெண்கோழி முட்டை யுடைத்த னமைமேனி
அஞ்சனத் தன்னபசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.

இதனுள் அஞ்சனத்தன்னபைங் கூந்தலெனவும், தெஙகஙகாய் போலத் திரண்டுருண்ட வெண்கோழி முட்டையுடைத்தன்ன பசலையெனவும் சொற்களைக்கொண்டு கூட்டிப் பொருள்கொண்டமையால் கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

வெண்பா.

ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை காரி
விறன்முள் ளூர்வேங்கை வீதாறு ணுந்தோளால்
நிறனுள்ளூ ருள்ள தலர்.

இதனுள் தண்ணுமை காணுந்தோள் எ-ம், நிறமவேங்கைவீ எ-ம், அலர் ஆரியமன்னர்பறையி னெழுந்தியம்பும் எ-ம், சொற்களைக்கூட்டிப் பொருள்கொண்டமையால் இதுவுங்கொண்டு கூட்டுப் பொருள்கோள், பிறவுமன்ன, இனிக்குறிப்பிசை எ-து, எழுத்தல்லோசையான் வந்தமுற்கும், ஈளையும்,இலதையும்,அநுகரணமு முதலாகவுடையன செய்யுளகத்துவந்தால் அவற்றைச் செய்யுணடையழியாமல் அசையும், சீரும், அடியும், தொடையும், பிழையாமல் அலகிட்டு வழங்கப்படுமெனக் கொள்க.

வெண்பா.

மன்றலங் கொன்றைமலர்மிலைந் துஂகுவஂ
கென்று திரியு மிடைமகனே-சென்று
மறியாட்டை யுண்ணுமல் வண்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு.

ஒழிந்தனவும் இடைக்காடனர் பாடிய ஊசிமுறியுட் கண்டு கொள்க.

சூத்திரம்.

எழுத்தல் விசையை யசைகொடு சீர்தளை
நிறைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே.

இனி ஒப்பு எ - து, மேற்சீரும் தளையும் அடியும் வரையறுக்கப் பட்ட பாவும், பாவினமுஞ்சொன்ன பெற்றியிற்றிரிந்து மிக்குங் குறைந்தும் வந்தா லவற்றையொருபுடை யொப்புமைநோக்கி ஒழிந்த செய்யுட்களின் பாற்படுத்து வழங்கப்படும் எ-று.

கலிவிருத்தம்.

கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டும்
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தெம்மன்ன லடியேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியு மன்னவா மென்றேலோ ரெம்பாவாய்,

மேல்நாற்சீர் நான்கடியாய் வருவது கலிவிருத்தமென்று வரை யறுத்துச்சொன்னார். இஃதைந்தடிபான் வந்ததாயினும் ஒருபுடை யொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்து வழங்கப்படு மெனக்கொள்க. இதனைத் தரவுகொச்சகமெனினு மிழுக்காது.

வஞ்சிப்பா.

சுற்றுநீர் சூழ்கிடங்கிற் பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர் நல்வய லூரன் கேண்மை
யல்லிருங் கூந்தற் கலரா னாவே.

மேல் வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச்சிறுமையென் றெடுத்தோதினார். இஃதிரண்டடிச் சிறுமையான் வந்ததாயினும் ஒருபுடையொப்புமை நோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்தே வழங்கப்படுமெனக்கொள்க. பிறவும் புராண கவிஞராற் பாடப்பட்ட இலக்கியங்களையும் இவ்விலக்கணத்தா னொருபுடை யொப்புமைநோக்கி ஒன்றன்பாற்படுத்து வழங்கப்படுமெனக்கொள்க. ஒப்புமென்ற வும்மையால் வண்ணமும புணர்த்துறையும் அடியின்றி நடப்பனவும் ஓரடியானடப்பனவும பாட்டும் உரையும் நூலும் மந்திரமும் அங்கதமும் பிசியும் முதுசொல்லும் வாழ்த்து மாமாறும் உணர்ந்துகொள்க. அவற்றுள் வண்ணம் நூறுதிறத்தனவாம். அவை சொல்லுமாறு.

தூங்கிசைவண்ணம், ஏத்திசைவண்ணம், அடுக்கிசைவண்ணம், பிரிந்திசைவண்ணம், மயங்கிசைவண்ணமென்னு மிவ்வைந்தினையு முதல்வைத்து அகவல்வண்ணம், ஒழுகிசைவண்ணம், வல்லிசைவண்ணம், மெல்லிசைவண்ணமென்னு மிந்நான்கினையும் இடைவைத்துக் குறில்வண்ணம், நெடில்வண்ணம், வல்லிசைவண்ணம், மெல்லிசைவண்ணம், இடையிசைவண்ணம் என்னு மிவ்வைந்தினையுங் கடைவைத்துக் கூட்டியுறழ நூறுவண்ணமும் பிறக்கும்.

கட்டளைக் கலித்துறை.

தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை வைத்துப் பின்னும்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்திட்
டாங்கே குறினெடில் வல்லினை மெல்லினை யோடிடையைத்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ண நூறாந் தலைப்படுமே.

அவற்றின் விரிவாவன.

குறிலகவற் றூங்கிசைவண்ணம், நெடிலகவற் றூங்கிசைவண்ணம், வலியகவற் றூங்கிசைவண்ணம், மெலியகவற் றூங்கிசைவண்ணம், இடையகவற் றூங்கிசைவண்ணம் எ-ம்.

குறிலொழுகற் றூங்கிசைவண்ணம், நெடிலொழுகற் றூங்கிசைவண்ணம், வலியொழுகற் றூங்கிசைவண்ணம், மெலியொழுகற் றூங்கிசைவண்ணம், இடையொழுகற் றூங்கிசைவண்ணம் எ-ம்.

குறில்வல்லிசைத் தூங்கிசைவண்ணம், நெடில்வல்லிசைத் தூங்கிசைவண்ணம், வலிவல்லிசைத் தூங்கிசைவண்ணம், மெலிவல்லிசைத் தூங்கிசைவண்ணம், இடைவல்லிசைத் தூங்கிசைவண்ணம் எ - ம்.

குறின்மெல்லிசைத் தூங்கிசைவண்ணம், நெடின்மெல்லிசைத் தூங்கிசைவண்ணம், வலிவல்லிசைத் தூங்கிசைவண்ணம், மெலிமெல்லிசைத் தூங்கிசைவண்ணம், இடைமெல்லிசைத் தூங்கிசைவண்ணம் எ-ம். தூங்கிசைவண்ணம் - உ0.

குறிலகவ லேந்திசைவண்ணம், நெடிலகவலேந்திசைவண்ணம், வலியகவ லேந்திசைவண்ணம், மெலியகவ லேந்திசைவண்ணம், இடையகவ லேந்திசைவண்ணம் எ-ம்.

குறிலொழுக லேந்திசைவண்ணம், நெடிலொழுக லேந்திசைவண்ணம், வலியொழுக லேந்திசைவண்ணம், மெலியொழுக லேந்திசைவண்ணம், இடையொழுக லேந்திசைவண்ணம் எ-ம்.

குறில்வல்லிசை யேந்திசைவண்ணம், நெடில்வல்லிசை யேந்திசைவண்ணம், வலிவல்லிசை யேந்திசைவண்ணம், மெலிவல்லிசை யேந்திசைவண்ணம், இடைவல்லிசை யேந்திசைவண்ணம் எ-ம்.

குறின்மெல்லிசை யேந்திசைவண்ணம், நெடின்மெல்லிசை யேந்திசைவண்ணம், வலிமெல்லிசை யேந்திசைவண்ணம், மெலிமெல்லிசை யேந்திசைவண்ணம், இடைமெல்லிசை யேந்திசைவண்ணம எ-ம், ஏந்திசைவண்ணம் - உ0.

குறிலகவ லடுக்கிசைவண்ணம், நெடிலகவ லடுக்கிசைவண்ணம், வலியகவ லடுக்கிசைவண்ணம், மெலியகவ லடுக்கிசைவண்ணம், இடையகவ லடுக்கிசைவண்ணம் எ-ம்.

குறிலொழுக லடுக்கிசைவண்ணம், நெடிலொழுக லடுக்கிசைவண்ணம், வலியொழுக லடுக்கிசைவண்ணம், மெலியொழுக லடுக்கிசைவண்ணம், இடையொழுக லடுக்கிசைவண்ணம் எ-ம்.

குறில்வல்லிசை யடுக்கிசைவண்ணம், நெடில்வல்லிசை யடுக்கிசைவண்ணம், வலிவல்லிசை யடுக்கிசைவண்ணம், மெலிவல்லிசை யடுக்கிசைவண்ணம், இடைவல்லிசை யடுக்கிசைவண்ணம் எ-ம்.

குறின்மெல்லிசை யடுக்கிசைவண்ணம், நெடின்மெல்லிசை யடுக்கிசைவண்ணம், வலிமெல்லிசை யடுக்கிசைவண்ணம், மெலிமெல்லிசை யடுக்கிசைவண்ணம், இடைமெல்லிசை யடுக்கிசைவண்ணம் எ - ம், அடுக்கிசைவண்ணம் - உ0.

குறிலகவற் பிரிந்திசைவண்ணம், நெடிலகவற் பிரிந்திசைவண்ணம், வலியகவற் பிரிந்திசைவண்ணம், மெலியகவற் பிரிந்திசைவண்ணம், இடையகவற் பிரிந்திசைவண்ணம் எ-ம்.

குறிலொழுகற் பிரிந்திசைவண்ணம், நெடிலொழுகற் பிரிந்திசைவண்ணம், வலியொழுகற் பிரிந்திசைவண்ணம், மெலியொழுகற் பிரிந்திசைவண்ணம், இடையொழுகற் பிரிந்திசைவண்ணம் எ-ம்.

குறில்வல்லிசைப் பிரிந்திசைவண்ணம், நெடிவல்லிசைப் பிரிந்திசைவண்ணம், வலிவல்லிசைப் பிரிந்திசைவண்ணம், மெலிவல்லி

சைப் பிரிந்திசைவண்ணம், இடைவல்லிசைப் பிரிந்திசைவண்ணம் எ - ம்.

குறின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், நெடின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், வலிமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், மெலிமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், இடைமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம் எ-ம், பிரிந்திசைவண்ணம் - உ0.

குறிலகவன் மயங்கிசைவண்ணம், நெடிலகவன் மயங்கிசைவண்ணம், வலியகவன் மயங்கிசைவண்ணம், மெலியகவன் மயங்கிசைவண்ணம், இடையகவன் மயங்கிசைவண்ணம் எ-ம்.

குறிலொழுகன் மயங்கிசைவண்ணம், நெடிலொழுகன் மயங்கிசைவண்ணம், வலியொழுகன் மயங்கிசைவண்ணம், மெலியொழுகன் மயங்கிசைவண்ணம், இடையொழுகன் மயங்கிசைவண்ணம் எ - ம்.

குறில்வல்லிசை மயங்கிசைவண்ணம், நெடில்வல்லிசை மயங்கிசைவண்ணம், வலிவல்லிசை மயங்கிசைவண்ணம், மெலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், இடைவல்லிசை மயங்கிசைவண்ணம் எ-ம்.

குறின்மெல்லிசை மயங்கிசைவண்ணம், நெடின்மெல்லிசை மயங்கிசைவண்ணம், வலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், மெலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், இடைமெல்லிசை மயங்கிசைவண்ணம் எ - ம், மயங்கிசைவண்ணம் - உ0.

ஆகவண்ணம் நூறு, இவ்வாறு விரித்துரைத்தாரவிநயனார்.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார்வண்ணம் இருபதென்பர்.

வண்ணந் தாமே நாலைந் தென்ப
அவைதாம்
பாவீறு வண்ணந் தா.வு வண்ணம்

வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
மியைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணங் குறிஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
மகப்பாட்டு வண்ண புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண மகைப்பு வண்ண
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றாங் கவையென்ப வறிந்திசினோரே.

என்றாராகலின் - அவற்றுள்,

சூ - ம்.

பாஅவண்ணஞ் சொற்சீர்த்தாகி
நூற்பாற்பயிலு நோக்கிற்றென்ப.

அவற்றுள், குற்றெழுத்தென்ப.

சூ - ம்.

தாஅவண்ண மிடையிட்டுவந்த வெதுகைத்தாகும்.

வ - று.

உள்ளார் - காடிறந்தோரே.

சூ - ம்.

வல்லிசைவண்ணம் வல்லெழுத்துமிகுமே.

வ - று.

பூட்டாட்டாமரைத் - துஞ்சி.

சூ - ம்.

மெல்லிசைவண்ண மெல்லெழுத்துமிகுமே.

வ - று.

பொன்னினன்ன புன்னைநுண்டாது.

சூ - ம்.

இயைபுவண்ண மிடையெழுத்துமிகுமே.

வ - று.

வால்வெள்ளருவி வரைமிசையிழியவும்
வேலொளி விளக்கினவரின்
பிரொடுதோளி வாழ்கிற்பெயரே.

சூ - ம்.

அளபெடைவண்ண மளபெடைபயிலும்.

வ - று.

கண்ணாடன்னக் கண்டுகேதடும.

சூ - ம்.

நெடுஞ்சீர்வண்ணம் நெட்டெழுத்துப்பயிலும்.

வ - று.

மாவாராதே மாவாராதே.

சூ - ம்.

குறுஞ்சீர்வண்ணங் குற்றெழுத்துப்பயிலும்

வ - று.

உறுபுயலெழிலி தொகுபெயல்பொழிய
சிறுகொடியவரை பொதிதளையவிழ

குறுநியபருவ மிதுவெனமறுகுபு
செறிதொடிதனது புலனறிவொழுதே.

சூ - ம்.

சித்திரவண்ணங் குறியவுநெடியவு
மொத்துநேர்ந்தடுக்கிய வியற்கைத்தென்ப.

வ - று.

சூரல்பம்பிய - கீவரலரே.

சூ - ம்.

நலிபுவண்ணமாய் தம்பயிலும்.

வ - று.

அஃகாமை செல்வத்திற் கியாதெனின்
வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்.

சூ - ம்.

அகப்பாட்டு வண்ண முடியாதனபோன்று
முடிந்ததன் மேற்றே.

வ - று.

பன்மீனுணங்கற் படுபுள்ளோப்பியும்
புன்னைநுண்டாது நம்மொடுதொகுத்தும்
பன்னாள்வந்து பணிமொழிபயிற்றிய
மணத்தற்கொவ்வாள் றணந்துபுறமாறி
பின்யனுமிவ் குறத்துறந்தோன்
பொய்தலாயத்துப் பொலன்றொடிமகளிர்

கோடியர்வெண்ண மணலேறி
யோடுகலன்காணுந் துறைவன்றோழி.

சூ - ம்

புறப்பாட்டுவண்ண முடிந்ததுபோன்று முடியாதாகும்.

வ - று.

இன்னுவைகல் வாராமுன்னே - முழுதுடன் றுறந்தே.

சூ - ம்.

ஒழுகுவண்ண மோசையினொழுகும்.

வ - று.

அம்மவாழி தோழிகாதல ரினனே
பரிக்கு மின்னு வாடையொடு
புன்கண மாலையன் பின்றுசலிய
வுய்யலளிவளெ அறனைச் சொல்லிச்
செல்லுநர்ப் பெறினே செயலல்ல
வின்னினி யிரந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்டமாவே.

சூ - ம்.

ஒரூஉவண்ண மொரூஉத் தொடைதொடுக்கும்.

வ - று.

சிறியகட் பெறினே - உயிதவப் பலவே.

சூ - ம்.

எண்ணுவண்ண மெண்ணுப் பயிலும்.

வ - று.

நின்னொன்றை நாகணரும் பூணதம்
துன்னருங் கடுந்திறற் க்ககன்கட்டி
பொன்னணி வல்விற் போஷ்றுறை யென்றுங்கு.

சூ - ம்.

அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்.

வ - று.

வாராராயினும் வரினுமவர்
நமக்கியாராரகியரோ தோழி.

சூ - ம்.

தூங்கல் வண்ணம் வஞ்சியயிலும்.

வ - று.

யானாடத்தா னுணர்த்த யானுணரா விட்டதற்பின்
றானாட யானுணர்த்தத் தானுணரான் றேனாடு.

சூ - ம்.

ஏந்தல்வண்ணஞ் சொல்லியதுசொல்லிற்
சொல்லியது சிறக்கும்.

வ - று.

வைகலும் - வைத்துணராதார்.

சூ - ம்.

உருட்டுவண்ணம ராகந்தொடுக்கும்.

வ - று.

உருகெழுமுருகிய முருமெனவதிர்தொறு
மருகெழுகிறகொடு மணவருமணிமயில்.

ரு - ம்.

மூடுகுவண்ண மடியிறந்தொழுகும்.

வ - று.

நெறியறி செறிகுறி புரிதிரி.

எ - ம், வருமெனக்கொள்க. இனிப்புனைந் துரையிரண்டுவகைப்படும். பெரியதனைச் சுருக்கிச்சொல்லுதலும் சிறியதனைப்பெருக்கிச்சொல்லுதலுமென.

சூத்திரம்.

உரைக்கப்படும்பொருட் கொத்தனவெல்லாம்
புகழ்ச்சியின்மிக்க புனைந்துரையாகும்.

என்றாரகலின்,
வெண்பா.

அடையார் பூங்கோதைக் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோனறும்-இடையாதும்
கண்டுகொள்ளா தாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாக வேண்டு நுசுப்பு.

இதுபெரியதனைச் சுருக்கிற்று.

வெண்பா.

அவாப்போ லகன்றத லல்குன்மேற் சான்றோர்
உசாப்போல வுண்டே மருங்குல்-உசாவினைப்

பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம்.

இதாசிறியதனைப் பெருக்கிற்று. பொன்மலிகச்சி பூமலிகூடல் மாரியீகை மணிமாடம்என்னுந் தொடக்கத்தனவுமது. இனி அடியின்றிநடப்பன பாட்டுரையும் நூலும் மந்திரமும் சங்கோதபிசிதமும் முதுசொல்லும் அங்கதமும் வாழ்த்து மென்னுமிவை ஓரடியானும் பலவடியானும் வரப்பெறும்.

சூத்திரம்.

செயிர்தீர் செய்யு டெரியுங் காலை
யடியி னீட்டத் தழகுபெற் றியலும்
ஓரடி யானு மோரோ விடத் தியலும்
அவைதாம்
பாட்டு நூலே மந்திரம் பிசியே
முதுச்சொல் லங்கம் வாழ்த்தொடு பிறவு
மாகுந வென்ப வறிந்திசி னோரே.

இனி நூலாவது மூவகைத்தாய் மூவரினடைபெற்று நால்வகைப்பயத்ததாய் எழுவகையாசிரிய மதவிகற்பத்ததாய்ப் பத்துவகைகுற்றந்தீர்ந்து பத்துவகைக்குணத்ததாய்ப் பதிமூன்று வகையானுரைபெற்று முப்பத்திரண்டு தந்திர வுத்தியோடும் புணர்ந்ததெனக் கொள்க.

அவற்றுள் மூவகையான தந்திரஞ்சூத்திரம் விருத்தியெனவிவை. முதனூல் வழிநூல் சார்புநூலெனினு மமையும். மூவரினடை பெறுதலென்பது அவை மூன்றுநடாத்து மாசிரியர் மூவரெனக்கொள்க.

நால்வகைப்பயனாவன அறம், பொருள், இன்பம் வீடெனவிவை.

எழுவகையாசிரியர் மதவிகற்பமாவன. உடன்படல், மறுத்தல், பிறர்தம்மதமேற் கொண்டுகளைதல், தாஅனுட்டித்தனாது நிறுத்தல், இருவர்மாறுகோ ளொருதலைதுணிதல் பிறர்நூற் குற்றங்காட்டல், பிறிதொடுபடாஅற றன்மதங்கொளல் என்னுமிவை.

பத்துவகைக் குற்றமாவன குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியதுகூறல், மாறுகொளக்கூறல், வழூஉச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தல், மற்றொன்றுவிரித்தல், சென்றுதேய்ந்திறுத்தல், நின்றுபயனின்மை எனவிவை.

பத்துவகைக் குணமாவன சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை ஆழமுடைத்தாதல், முறையின்வைப்பு, உலகமலையாமை, விழுமியதுபயத்தல், விளங்குதாரணத்ததாகுதல் எனவிவை.

பதின்மூன்றுவகை யுரையாவன சூத்திரந்தோற்றல், சொல்வகுத்தல், சொற்பொருளுரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங்காட்டல், உதாரணங்காட்டல், ஆசிரியவசனங்காட்டல், அதிகாரவரவுகாட்டல், தொகுத்துமுடித்தல், விரித்துக்காட்டல், துணிவுகூறல், பயனொடுபுணர்த்தல் எனவிவை

முப்பத்திரண்டு தந்திரவுத்தியாவன நுதலிப்புகுதல், ஒத்துமுறைவைப்பு, தொகுத்துச்சுட்டல், வகுத்துக்காட்டல், முடித்துக்காட்டல், முடிவிடங்கூறல், தானெடுத்துமொழிதல், பிறன்கோட்கூறல், சொற்பொருள்விரித்தல், தொடர்சொற்புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின்முடித்தல், ஒப்பின்முடித்தல், மாட்டெறிந்தொழுகல், இறந்ததுவிலக்கல், எதிரதுபோற்றல், முன்மொழிந்துகோடல், பின்னதுநிறுத்தல், விகற்பத்தின்முடித்தல், முடிந்ததுமுடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒருதலைதுணிதல், எடுத்துக்காட்டல், எடுத்தமொழியினெய்தவைத்தல், இன்னதல்ல

திதுவெனமொழிதல், எஞ்சியசொல்லி னெய்தக்கூறல், பிறநூன் முடிந்ததுதா னுடன்படுதல், தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல், சொல்லின்முடிவினப் பொருண்முடித்தல், ஒன்றினமுடித்தல், தன்னினமுடித்தல், உய்த்துணரவைப்புஎனவிவை, இவ்வாறுசொன்னார் பாடலனாரென்னு மாசிரியரெனக்கொள்க. தந்திரவுத்தி முப்பத்திரண்டினும் பலவென்பாருமுளர். (அ)

விடயநாம சங்கியை.

எழுத்துப் பதின்மூன் றிரண் டசைசீர் முப்பதேழ் தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்மறைந்து பாவினமூன்
றொழுக்கிய வண்ணங்க ளாறுனப.தொண் பொருள்கோளி
ருழூ, விழுக்கில்விகாரம் வனப்பெட்டியாப்புள் வகுத்தனவே.

இக்நூலுள் வகுத்த பொருளெல்லாந் தொகுத்துணர்த்துதனுதலிற்று.

எழுத்துப் பதின்மூன்றாவன குற்றெழுத்து நெட்டெழுத்து உயிரெழுத்து, குற்றியலிகரம் குற்றியலுகரம் ஐகாரக்குறுக்கம், ஆய்தம் மெய்யெழுத்து வல்லினம் மெல்லினம் இடையினம் உயிர்மெய்அளபெடை எனவிவை. இரண்டசையாவன நேரசை நிரயசை எனவிவை. சீர் முப்பதாவன ஈரசைச்சீர்நான்கும் மூவசைச்சீரெட்டும் நாலசைச்சீர் பதினாறும் ஓரசைச்சீரிரண்டுமென விவை. ஏழ்தளையாவன நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளை இயற்சீர்வெண்டளை வெண்சீர்வெண்டளை ஒன்றியவஞ்சித்தளை ஒன்றாவஞ்சித்தளை கலித்தளையென விவை. ஐந்தடியாவன குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி யெனவிவை தொடைநாற்பத்து மூன்றாவன அடிமோனை அடியெதுகை அடிமுரண் அடியியைபு அடியளபெடை அந்தாதித்தொடை இரட்டைத்தொடை செந்தொடையெ

ணக்கிடந்த தொடையும் இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடைவிகற்பமு மெனவிவை. ஐந்துபாவாவன வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா மருட்பாவென விவை, இன மூன்றாவன தாழிசை துறை விருத்தமெனவிவை. ஒழுக்கியவண்ணம் நூறாவன குறிலகவற்றூங்கிசை வண்ணமுதலாக மேற்காட்டிப் போந்தன. ஒன்பதொண் பொருள்கோளாவன நிரனிறை சுண்ணமொழிமாற்று முதலியன. இருமூவழுக்கில் விகாரமாவனவலிக்கும் வழிவலித்தன் முதலியன. வனப்பெட்டாவன அம்மைமுதலியன. யாப்புள்வகுத்தனவே எ - து, யாப்பருங்கலமென்னும் யாப்பிற்சொல்லப்பட்டன எ-று. ஏகாரமீற்றசை ஐந்திழுக்கிலடியென்று சிறப்பித்தவதனால் திணைவழுவும், பால்வழுவும், மரபுவழுவும், வினாவழுவும், விடைவழுவும், காலவழுவும், இடவழுவுமென்று சொல்லப்பட்ட எழுவழுவும் படாமற்புணர்க்கப் படுமெனக்கொள்க. வழுக்கில்விகாரமென்று சிறப்பித்தவதனால் எழுத்துக்குற்றம, சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றம், ஆனந்தக்குற்றமென்னும் ஆறு குற்றமும் படாமற் புணர்க்கப்படுஞ் செய்யுட்களெனக்கொள்க. அவற்றுள் எழுத்துக்குற்றமுதலிய ஐந்தும் அவ்வவ் விலக்கணநூல்களாலறிந்துக்கொள்க. ஆனந்தக்குற்றமாவன எழுத்துமுதலியதிரிதல்.

சூத்திரம்.

எழுத்து நிலைதிரிந்த வெழுத்தா னந்தமும்
சொன்னிலை திரிந்த சொல்லா னந்தமும்
பொருணிலை திரிந்த பொருளா னந்தமும்
யாப்பு நிலைதிரிந்த யாப்பா னந்தமும்
நடைபெறு புலவர் காட்டினா ரவையே.

அவற்றுள் எழுத்தானந்தம் வருமாறு.

வெண்பா.

ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாம்
தோழி துணையாத் துயர்தீரும்-வாழி
நறுமாலை தாராய் திரையவோஒ வென்னும்
செறுமாலை சென்றடைந்த போது.

இதனுள் திரையவோஒவென்று இயற்பெயரைச் சார்ந்தளபெழுந்தமையால் எழுத்தானந்தம்.

சூத்திரம்.

இயற்பெயர் சார்ந்து மெழுத்தள பெழினே
யியற்பா டில்லா வெழுத்தா னந்தம்.

சொல்லானந்தம் வருமாறு.

வெண்பா.

என்னிற் பொலிந்த திவண்முகமென் றெண்ணித்
தன்னிற் குறைபடுப் பான்றண்மதியம்-மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல்விசயம்
எரிந்திலங்கு வேலி னெழும்.

இதனுள் தலைமகன்மேல் எரிந்தவென்னுஞ் சொற்புணர்ந்தமையால் சொல்லானந்தம்.

சூத்திரம்.

இயற்பெயர் மருங்கின் மங்கல மழியத்
தொழிற்சொற் புணர்ப்பினது சொல்லா னந்தம்.

பிறவும்வந்தவழிக் கண்டுகொள்க.

வெண்பா.

இந்திரனே போலு மிளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்தரமே போன்றிலங்கு மல்லாகம்-மந்தரத்தில்
தாழருவி போன்றுளது தார்மாலை யம்மாலை
வீழுலகு நாறு மிணர்.

இதனுள் சாத்தனென்னுங் கீழ்மகனை-அரசனை உவமித்ததாற் போல உவமித்தமையால் இறப்பவுயர்ந்த வானந்தவுவமை.

வெண்பா.

வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி யிரிந்தாற்போ லெவ்வழியும்-வள்ளற்கு
மாலார்கடலன்ன மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து.

இதனுட் புலியினோடுவமிக்கப்படுகின்ற தலைமகனாகிய வீரனோடு நாயை உவமித்தமையால் இறப்பவிழிந்த வானந்தவுவமை.

சூத்திரம்.

இறப்ப விழிந்தது மிறப்ப வுயர்ந்தது
மறத்தகை வழீஇய வானந்த வுவமை.

அலங்கார குற்றமாவது.

வெண்டிங்கள் போன்றிலங்கு வெண்சங்கு சங்கனைய
வண்டிலங்கு தாழை வளர்தோடு-விண்டெங்கும்
கள்ளாவி நாறுங் கருங்கழிசூழ் கானகத்தெம்
உள்ளாவி வாட்டு முரு.

யெ

இதனுள் வெண்டிங்கள்போலுஞ் சங்கு, சங்குபோலுந் தாமரைப்பூவென்று உவமைக்குவமை சொன்னமையால் அடுத்துவரலுவமையென்னும் அலங்காரக்குற்றம்.

சூத்திரம்

உவமைக்குவமை யில்லெனமொழிப.

இனி எல்லாக்குற்றமுந் தீர்ந்தசெய்யுள்வருமாறு.

ஆசிரியப்பா.

தாமரை புரையுங் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளி
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடி யோன் காப்ப
வேமவைக லெய்தின்றா லுலகே.

ஒழிபியல் - முற்றிற்று.

ஒழிபியற் செய்யுண் முதனினைப்பு.

விட்டிசை மாஞ்சீ ரியற்றளை சேர்ந்தருகி
வாரடர் கொங்கை வருக்கஞ் சுருங்கிற்று வான்பொருளும்
சீரிய தூங்கேந் தடுக்குச் சிறந்த வெழுத்து மன்றே
யாரு மொழிபியற் பாட்டின் முதனினைப் பாகுமன்றே.

யாப்பருங்கலக்காரிகை மூலமும்-உரையும்

முற்றிற்று.

இந்நூலிற்சொல்லாத

கட்டளைக்கலிப்பாவுக் கிலக்கணம்.

சூத்திரம்.

மாச்சீர் முன்வரு நாற்சீ ரடியே
கோர்முத னிரைமுத னிரணிறை யானே
பதினோ ரெழுத்தும் பன்னீ ரெழுத்து
மியைந்தனை யடியாய் நடந்தவை திரட்டித்
தொத்துநான் கிறுவது கட்டளைக் கலிப்பா.

நேரசைக் கட்டளைக்கலிப்பா.

சொல்லி னீரிவ ராசைப்பட் டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையமே
புல்லுவா ரெவ்வி தத்தினு மென்றுளம்
பூரித்தேயிருந் தேன்மட மங்கைமீர்
செல்லு லாம்பொழிற் கூவநக ருறை
திருவிற் கோல ரினுமரு ளாமையால்
அல்லதேது திகம்பர ரென்பொரு
ளறையின்வன்கண ராவரென் மட்டேமே.

இது நேரசைமுதலாவந்த செய்யுள்.

உயிர்.

ஆவியாவன, அகரமுதல் ஔகாரமீறாய்க்கிடந்த பன்னிரண்டெழுத்துமெனக்கொள்க.

சூத்திரம்.

அகரமுதல ஔகாரவிறுவாய்ப்
பன்னீரெழுத்து முயிரெனமொழிப.

குறுகியவுயிராவன, குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும் எனவிவை இவைமேலேசொல்லுதும். ஆய்தமென்பதஃகேனம. அஃகேனமெனினும், ஆய்தமெனினும், தனிநிலையெனினும், புள்ளியெனினும், ஒற்றெனினுமொக்கும்.

சூத்திரம்.

அஃகெனமாய்தந் தனிநிலைபுள்ளி
யொற்றிப்பால வைந்துமிதறகே.

வரலாறு, எஃகு-கஃசு-கஃடு-கஃது-கஃபு-கஃறு எனவரும்.

சூத்திரம்.

குறியதன்முன்ன ராய்தப்புள்ளி
யுயிரொடுபுணர்ந்த வல்லாறனமிசைத்தே.

மெய்.

இனிமெய்யாவன, ககரமுதல் னகரமீறாய்க்கிடந்த பதினெட்டெழுத்துமெனக்கொள்க.

சூத்திரம்.

ககரமுதல னகரவிறுவாய்ப்
பதினெண்ணெழுத்து மெய்யெனமொழிப.

மெய்யெனினும், உடம்பெனினும், உறுப்பெனினும், ஒற்றெனினும், புள்ளியெனினுமொக்கும்.

சூத்திரம்.

மெய்யுடம்புறுப்பொற் றிவைதாமொருபொருட்
செய்யுமென்று செப்பினர்புலவர்.
மெய்யினியற்கை புள்ளியொடுநிலையல்.
எகரவொகரத் தியற்கையுமற்றே.
மெய்யினியக்க மகரமொடுசிவணும்.
மெய்யுயிர்நீங்கிற றன்னுருவாகும்.

ஏகாரம் ஏண்ணேகாரம்.

சூத்திரம்.

எண்ணேகார மிடையிட்டுக்கொளினு
மெண்ணுக்குறித்தியலு மென்மனார்புலவர்.

மறுவறுமூவினமாவன, வல்லினம்-மெல்லினம் - இடையினம்-எனவிவை. வல்லினமாவன கசடதபற. மெல்லினமாவன ஙஞணநமன-இடையினமாவன யரலவழள.

சூத்திரம்.

வல்லெழுத்தென்ப கசடதபற.
மெல்லெழுத்தென்ப ஙஞணநமன.
இடையெழுத்தென்ப யரலவழள.

மறுவறுமூவினமென்று சிறப்பித்தவதனால் அவை யுயிர்மெய்யாகியகாலத்தும், அப்பெயரானே வழங்கப்படுமெனக்கொள்க.

கழூஉ-மிலேஎ-கடைஇ-அரோஒ - அவௌஉ என்இவையேழுமிறுதி நிலையளபெடை. உயிரளபெடை எழுத்துநோக்கவேழாம். இடநோக்கநான்காம். எழுத்துமிடமுமுறழ்ந்துநோக்க விருபத்தெட்டாமெனக் கொள்க.

ஒற்றளபெடை.

இனி ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு. ஒற்றுகளுள் ஙஞ ணநமன வயலளவாய்தமென்னும் பதினொரொற்றும், குறிற்கீழும், குறிலிணைக்கீழும் வந்தளபெடுக்கு மெனக்கொள்க.

சூத்திரம்.

* ஙஞணநமன வயலளவாய்த
மெனுமிவையீரிடத் தள பெழுமொரோவழி
வன்மையொடிரஃகான றஃகானொழிந்தாங்
கன்மையாய்த்தமோடள பெழுமொரோவழி.

மங்ங்கலம் - மஞ்ஞ்சு - மண்ண்ணு - பந்ந்து - அயம்பு - மின்ன்னு-தெவ்வ்வர்-வெய்ய்யர்-செல்ல்க-கொள்ள்க-எஃஃகு எனக்குறிற்கீழ்ப்பதினொரொற்று மளபெழுந்தவாறுகண்டுகொள்க. ரங்ங்கம்-முரஞ்ஞ்சு-முரண்ண்டு-பருந்ந்து-அருமம்பு-முரன்ன்று-குரவ்வலை-அரைய்ய்யர்-குரல்ல்கள் - திரன்ன்கள் - வரஃஃகு எனக்குறிலிணைக்கீழ்ப்பதினொரொற்று மளபெழுந்தவாறுகண்டு கொள்க. இவ்விருபத்திரண்டு புள்ளியளபெடையுஞ் செய்யுளகத்தல்லது ‡ பரவைவழக்கினுள்வாராவெனக் கொள்க.

சூத்திரம்.

மாத்திரைவகையாற் றளைதமகெடாநிலை
யாப்பழியாமையென் றளபெடைவேண்டும்.

---

‡ பரவைவழக்கென்பது - உலகவழக்கு.

மாத்திரை

அறிஞருரைத்த வளபுமென்றுசிறப்பித்தவதனுல் குற்றெழுத்தும ஒற்றளபெடையும் ஒரோவொன்று ஒருமாத்திரை, நெட்டெழுத்திரண்டுமாத்திரை, உயிரளபெடை மூன்றுமாத்திரை, ஆய்தமும் மெய்யும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஒரோவொன்றரைமாத்திரை, ஐகாரக்குறுககமும் ஔகாரக்குறுக்கமும் ஒரோவொன் ஹொன்றரைமாத்திரை, மகரககுறுக்கமும் ஆய்தக்குறுககமுமொரோரோவொன்று கான்மாதகிரை.

சூத்திரம்.

ஒன்றிரண்டொரு மூன்றொன்றரையனாகா
லென்றனர்பொழுதிவை யிமைநொடியளவே
கண்ணிமைகைந் நொடியளவேமாத்திரை
நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறே.
ஒறறுக்குமாத்திரை யொன்றேயளபெழுந்தாற
றெற்றக் குறிலதுவேயாம்.
உன்னல்காலே யூன்றலரையே
முறுக்கன்முக்கால் விடுத்தலொ

என்றார் பிறருமெனககொள்க. (௬)

* அசை.

குறிலே நெடிலே குறிலிணை யேனைக குறினெடிலே
நெறியே வரினு நிறைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்

---

* மேற்சொல்லிய வெழுத்துக்களால் அசைத்து இசைகொளளப்படுவது.